# 10. நிதியியல் துறை

## 10.1 பண நிரம்பல்

இறுக்கமான நாணயக் கொள்கையின் தொடர்ச்சி, வங்கிகளினால் தமது கொடுகடன் செயற்பாடுகளில் குறிப்பாக, வரட்சி மற்றும் மின் வெட்டுக்கள் என்பன நடைமுறையில் இருந்த காலப் பகுதியிலும் அதன்பின்னரும் கடைப்பிடிக்கப்பட்ட பாரிய எச்சரிக்கை, தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட குறைப்பு; மற்றும் இரண்டாம், மூன்றாம் காலாண்டுப் பகுதிகளில் செயற்படாக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக வங்கிகளினால் எதிர்நோக்கப்பட்ட திரவத்தன்மைக் கட்டுப்பாடுகள் என்பன காரணமாக நாணய விரிவாக்கமானது கணிசமாக விழ்ச்சியடைந்தது. பாவனையாளர் நீடித்த நுகர்வுப் பொருட்களுக்கான நலிவுற்ற கேள்வியும் மெதுவான நாணய விரிவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்தது. எனினும், திரவத்தன்மை கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக வங்கிகளினால் திறைசேரி உண்டியல்கள் மீள் கழிவிடப்பட்டமை மற்றும் அரசிற்கான கொடுகடன் தேவை என்பனவற்றை பிரதிபலித்து, அரசிற்கான மத்திய வங்கியின் கொடுகடன் அதிகரித்தது. தனியார்துறைக்கான கொடுகடன் வளர்ச்சியில் ஏற்பட்ட கடுமையான குறைப்பானது 1996 இல் நாணய விரிவாக்கத்தை மிதமாக்கியது. விரிந்த பண நிரம்பலின் (M2) வளர்ச்சியானது 1995 இறுதியின் 19.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 இறுதியில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 10.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. விரிந்த பண நிரம்பலின் வளர்ச்சியுடன் ஒப்பிடு கையில் குறுகிய பண நிரம்பலான (M1) முன்னைய ஆண்டினைப்போன்றே 1996 இல் மிகக்குறைந்த வீதமான 4.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. போலி நாணயத்தின் திரவத்தன்மையினை அதிகரிக்க விளைகின்ற தன்னியக்க டெலர் பொறிகள் போன்ற வங்கி வசதிகளின் அதிகரித்த தொழில்நுட்பம் மற்றும் உயர்ந்த வட்டி வீதங்கள் நிலவிய ஓர் சூழ்நிலையில் கொடுக்கல் வாங்கல் நிலுவைகளை பயன்படுத்துவதிலான பொதுமக்க ளின் பாரிய விவேகம் என்பனவே M1 இன் மெதுவான வளர்ச்சிக்குப் பொறுப்பாக அமைந்தன. அபரிமிதமான கொடுகடன் வளர்ச்சியினால் முன்னைய ஆண்டின் இறுதியளவில் தோன்றிய திரவத்தன்மை உயர்ச்சியானது (அதாவது பெயரளவிலான மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சியை விஞ்சிய பண வளர்ச்சி) இரண்டாம் அரைப்பகுதியில் படிப்படியாக மறைவுற்றது. அத்துடன் உள்ளார்ந்த பணவீக்கமானது (அதாவது நாட்டின் உண்மைத் தேசியவருமான வளர்ச்சி நீங்கலான பண வளர்ச்சி) ஆண்டு இறுதியளவில் 10 சதவீதத்திற்கு கீழ்நோக்கி வீழ்ச்சியுற்றது.

அட்டவணை **10.1**
நாணயப் புள்ளி விபரங்களின் தொகுப்பு　　ரூ. பில்.

| விடயம் | 1996 முடிவில் | மாற்றம் 1995 தொகை | மாற்றம் 1995 % | மாற்றம் 1996 தொகை | மாற்றம் 1996 % |
|---|---|---|---|---|---|
| நாணயம் கூட்டுக்கள் | | | | | |
| குறுகிய பணநிரம்பல் (M1) | 78.2 | 4.8 | 6.7 | 3.0 | 4.0 |
| விரிந்த பண நிரம்பல் (M2) | 253.2 | 36.9 | 19.2 | 24.7 | 10.8 |
| ஏதுக் காரணிகள் | | | | | |
| உள்நாட்டுக் கொடுகடன் | 252.3 | 50.0 | 28.8 | 28.5 | 12.7(அ) |
| அரசுக்கு (தேறிய) | 47.5 | 7.1 | 25.1 | 12.3 | 35.1 |
| அரச கூட்டுத்தாபனங்கள் | 9.9 | 3.3 | 65.2 | 1.4 | 16.6(அ) |
| தனியார்துறை | 194.8 | 42.9 | 29.5 | 14.8 | 8.2 (அ) |
| வெளிநாட்டொச் சொத்துக்கள் (தேறிய) | 61.9 | 2.0 | 3.2 | -4.6 | -7.0 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | 61.0 | -15.2 | 32.6 | 0.8 | 1.3(அ) |
| ஒதுக்கு நாணயம் | 85.5 | 10.5 | 15.5 | 6.9 | 8.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) முன்னைய பணிக்கப்பட்ட கடன்கள் சிலவற்றிற்குப் பதிலாக திறைசேரியினால் வழங்கப்பட்ட முறிகளின் தாக்கம் அகற்றப் படும்போது அதிகரிப்புக்கள் முறையே 18.5, 31.5, 14.7 மற்றும் - 19.7 சதவீதமாகக் காணப்பட்டன

தனியார் துறைக்கான கொடுகடனின் மெதுவான வளர்ச்சியினை முக்கியமாக பிரதிபலிக்கும் வகையில் வங்கிமுறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 1995 இன் 27.4 சதவீத அதிகடுமையான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் 18.1 சதவீதத்தால் அதிகரித்தன. தனியார்துறைக்கான வங்கிக் கொடுகடன் 1995 இன் 28.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதத்தால் அதகரித்தது. பாதுகாப்பு மற்றும் கோதுமை மானியம் என்பவற்றின் மீதான அதிகரித்த

அட்டவணை **10.2**

நாணயக் கூட்டுக்கள் (அ)

தொகை ப.இ. ரூபாய்களில்

| காலமுடிவில் | குறுகிய பணநிரம்பல் (M1) | | | | | | விரிந்த பணநிரம்பல் (M2) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1995 | 1996 | சதவீத மாற்றம் | | | | 1995 | 1996 | சதவீத மாற்றம் | | | |
| | | | புள்ளிக்குப்புள்ளி | | அசையும் சராசரி | | | | புள்ளிக்குப்புள்ளி | | அசையும் சராசரி | |
| | | | 1995 | 1996 | 1995 | 1996 | | | 1995 | 1996 | 1995 | 1996 |
| சனவரி | 69,875 | 73,783 | 21.0 | 5.6 | 19.3 | 9.2 | 193,010 | 228,090 | 21.4 | 18.2 | 21.2 | 18.2 |
| பெப்புருவரி | 70,702 | 77,439 | 13.4 | 9.5 | 18.5 | 8.9 | 192,859 | 234,198 | 18.2 | 21.4 | 20.9 | 18.5 |
| மாச்சு | 71,335 | 81,795 | 13.8 | 14.7 | 18.2 | 9.0 | 195,370 | 239,177 | 17.9 | 22.4 | 20.7 | 18.9 |
| ஏப்பிரல் | 68,718 | 79,478 | 11.5 | 15.7 | 17.8 | 9.4 | 195,982 | 241,894 | 17.8 | 23.4 | 20.7 | 19.4 |
| மே | 68,376 | 76,619 | 12.4 | 12.1 | 17.5 | 9.4 | 197,892 | 242,072 | 18.9 | 22.3 | 20.6 | 19.7 |
| யூன் | 68,714 | 75,956 | 10.1 | 10.5 | 16.6 | 9.4 | 201,170 | 240,407 | 17.6 | 19.5 | 20.1 | 19.8 |
| யூலை | 68,194 | 76,199 | 7.8 | 11.7 | 15.6 | 9.7 | 202,826 | 240,083 | 17.3 | 18.4 | 19.7 | 19.9 |
| ஓகத்து | 69,321 | 76,184 | 9.1 | 9.9 | 14.8 | 9.8 | 205,325 | 240,096 | 18.1 | 16.9 | 19.4 | 19.7 |
| செத்தெம்பர் | 70,306 | 76,634 | 6.3 | 9.0 | 13.6 | 10.0 | 211,009 | 241,699 | 18.5 | 14.5 | 19.0 | 19.4 |
| ஒத்தொபர் | 71,538 | 74,003 | 7.0 | 3.5 | 12.4 | 9.7 | 215,349 | 242,845 | 17.6 | 12.8 | 18.6 | 18.9 |
| நவெம்பர் | 71,847 | 75,276 | 7.7 | 4.8 | 11.4 | 9.4 | 218,999 | 245,227 | 18.8 | 12.0 | 18.5 | 18.3 |
| திசெம்பர் | 75,217 | 78,203 | 6.8 | 4.0 | 10.4 | 9.2 | 228,536 | 253,201 | 19.2 | 10.8 | 18.4 | 17.5 |
| மாதாந்தச் சராசரி | 70,345 | 76,797 | 10.4 | 9.2 | | | 204,861 | 240,749 | 18.4 | 17.5 | | |

(அ) பன்னாட்டு நடைமுறை நியமங்களுடன் ஒத்திருக்கும் விதத்தில் 1990 இலிருந்தால் 1990 இலிருந்தான நாணயத்தரவுகள் மீள பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. தயவுசெய்து புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணைகள் 100, 101, 105 இனைப்பார்க்கவும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

செலவினத்துடன் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவான தனியார் மயப்படுத்தல் பெறுகைகளில் ஏற்பட்ட வருமான வீழ்ச்சியும் இணைந்து அரசாங்கம் வங்கிக் கொடுகடனை நாடவேண்டிய தேவையை ஏற்படுத்தியது. அதிகரித்த நிதியிடல் தேவைகளுக்கு மத்தியிலும் திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற மட்ட மானது ரூ. 125 மில்லியன் கொண்ட தற்போதைய உச்ச எல்லைகளிலிருந்து உயர்த்தப்படவில்லை. இது அரசின் முன்னேற்றகர மான காசுமுகாமை மற்றும் உயர்வடையும் உலகச் சந்தை விலைகளின் காரணமாக கோதுமை மா மற்றும் பெற்றோலியம் என்பன வற்றின் விலைகளில் மேற்கொள் ளப்பட்ட சீராக்கம் என்பனவற்றுடன் இணைந்து, நிதிப்பற்றாக்குறை மற்றும் வங்கி நிதியிடல் என்பனவற்றை கட்டுப் படுத்துவதற்கு உதவியது. அவ்வாறிருந்தபோதிலும், வங்கித் தொழில் துறையிலிருந்தான அரசிற்கான தேறிய கொடு கடன் 1995 இன் ரூ.70,670 இலட்சத்திற்கெதிராக (25.1 சதவீதம்) ரூ.123,440 இலட்சமாக (35.1 சதவீதம்) வர்த்தக வங்கிகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வதிகரிப்புக்களில் ரூபா 98,730 இலட்சம் மத்திய வங்கியிலிருந்தும் ரூபா 24,710 இலட்சம் வர்த்தக வங்கிகளிலி ருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இம் மட்டத் திலான வங்கி நிதியிடலுடனும் கூட குறிப்பாக 1996 நடுப்பகுதியில் எதிர்கொள்ளப்பட்ட தற்காலிக பின்னடைவிற்குப் பின்னர் பொருளாதாரம் மீட்சியுறும் நிலையில் நாணய நிலைமைகள் மிக இறுக்கமாகத் தோன்றின. இது நாணயக் கட்டுப் பாடுகளில் சில தளர்வுகளைக் கோரி நின்றதுடன், அவை 1997 இன் முற்பகுதியில் செயற்பாட்டிற்கும் வந்தன.

1996 இற்கான வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டவாறு, அரசு இரு அரச வங்கிகளுக்கும் திருப்பிச் செலுத்தப்படாத கொடுகடன்களினால் அவர்களுக்கு ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்யும் முகமாக 1996 ஒக்றோபரில் ரூ. 199,330 இலட்சம் பெறுமதியான முறிகளை வழங்கியது. இதுவும் கூட நாணய புள்ளிவிபரங்களில் ஒரு தாக்கத் தினைக் கொண்டிருந்தது. இந்த முறிகளை கணக்கீடு செய்வதனால் அனைத்து நாணயத் திரட்டுக்களில் எதுவித தாக்கமும் இல்லாத போதும் அது தனியார் துறைக்கொடுகடன், கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன், கூட்டுற வுகளுக்கான கொடுகடன் மற்றும் தேறிய ஏனைய சொத்துக்கள் என்பனவற்றிடையே மீள் பகிர்ந்த ளிப்பை ஏற்படுத்துகின்றது. முறி வழங்கலுக் கான பொருத்தமான சீராக்கங்களுடன் தனியார் துறைக்கான கொடுகடன் 1996 இல் 8.2 சதவீதத் தால் (முறிகள் நீங்கலாக 114.7 சதவீதம்) உயர் வடைந்தது. மேற்குறிப்பிடப்பட்ட முறியில் ஒரு பகுதி நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப் பட்ட கடன்களின் கொடுப்பனவின் தீர்ப்பன விற்காக வழங்கப்பட்டமையினால், கூட்டுறவு

அட்டவணை **10.3**

நாணயக் கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும்

தொகை ப.இ. ரூபாய்களில்

| விடயம் | திசெம்பர் 1994 | திசெம்பர் 1995 | திசெம்பர் 1996 | மாற்றம் 1995 தொகை (அ) | மாற்றம் 1995 சதவீதம் | மாற்றம் 1996 தொகை (அ) | மாற்றம் 1996 சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| நாணக் கூட்டுக்கள் | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் | 38,906 | 42,198 | 42,565 | 3,292 | 8.5 | 367 | 0.9 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் | 31,555 | 33,019 | 35,638 | 1,464 | 4.6 | 2,619 | 7.9 |
| குறுகிய பணநிரம்பல் (M1) | 70,461 | 75,217 | 78,203 | 4,756 | 6.7 | 2,986 | 4.0 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் | 121,209 | 153,319 | 174,998 | 32,110 | 26.5 | 21,679 | 14.1 |
| கூட்டுறவு நிறுவனங்கள் | 3,781 | 3,598 | 3,056 | -183 | -4.8 | -542 | -15.1 |
| அரச கூட்டுத்தாபனங்கள் | 13,236 | 15,888 | 17,864 | 2,652 | 20.0 | 1,976 | 12.4 |
| ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் (ஆ) | 104,192 | 133,833 | 154,078 | 29,641 | 28.4 | 20,245 | 15.1 |
| விரிந்த பணநிரம்பல் (M2) | 191,670 | 228,536 | 253,201 | 36,866 | 19.2 | 24,665 | 10.8 |
| ஏதுக்காரணிகள் | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் | 173,794 | 223,798 | 252,317 | 50,004 | 28.8 | 28,519 | 12.7 |
| அரசுக்கான தேறிய கொடுகடன் | 28,147 | 35,214 | 47,558 | 7,067 | 25.1 | 12,344 | 35.1 |
| அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் | 40,250 | 47,738 | 63,970 | 7,488 | 18.6 | 16,232 | 34.0 |
| மத்திய வங்கியால் | 19,568 | 27,458 | 37,801 | 7,890 | 40.3 | 10,343 | 37.7 |
| வர்த்தக வங்கிகளால் | 20,682 | 20,280 | 26,169 | -402 | -1.9 | 5,889 | 29.0 |
| அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் | 12,103 | 12,524 | 16,412 | 421 | 3.5 | 3,888 | 31.0 |
| தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் | 145,647 | 188,584 | 204,759 | 42,937 | 29.5 | 16,175 | 8.6 |
| கூட்டுறவு நிறுவனங்கள் | 2,541 | 3,939 | 1,465 | 1,398 | 55.0 | -2,474 | -62.8 |
| அரச கூட்டுத்தாபனங்கள் | 5,163 | 8,527 | 9,938 | 3,364 | 65.2 | 1,411 | 16.5 |
| ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் | 137,943 | 176,118 | 193,356 | 38,175 | 27.7 | 17,238 | 9.8 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) | 64,467 | 66,532 | 61,861 | 2,065 | 3.2 | -4,671 | -7.0 |
| மத்திய வங்கி (தேறிய) | 65,864 | 74,301 | 73,786 | 8,437 | 12.8 | -515 | -0.7 |
| வர்த்தக வங்கிகள் (தேறிய) | -1,397 | -7,769 | -11,925 | -6,372 | -456.1 | -4,156 | -53.5 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) | -46,590 | -61,794 | -60,978 | -15,204 | -32.6 | 816 | 1.3 |
| மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) | -39,398 | -51,986 | -58,476 | -12,588 | -32.0 | -6,490 | -12.5 |
| வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) | -7,192 | -9,808 | -2,502 | -2,616 | -36.4 | 7,306 | 74.5 |

(அ) M2 இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
(ஆ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிறுவனங்களுக்கான கொடுகடன், முறி வழங்கல்கள் நீங்கலான ரூ. 530 இலட்சம் அதிகரிப்புக்கு எதிராக ரூ. 24,740 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது.

தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் சென்மதி நிலுவை பற்றாக்குறையாக அமைந்தமையினைத் தொடர்ந்து, வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமை ரூ.46,710 இலட்சத்தால் (7.0 சதவீதம்) வீழ்ச்சியுற்றது. இவ் வீழ்ச்சியின் பெரும்பகுதி ரூ. 41,560 இலட்சத்தால் வீழ்ச்சியுற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமையில் வெளிக்காட்டப்பட்டது. வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள் வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் தொடர்ச்சியான வளர்ச்சியினை பெரும்பாலும் முழுமையாகப் பிரதிபலித்து ரூ. 52,600 இலட்சத்தால் உயர்வடைந்தது. எனினும், வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 11,030 இலட்சத்தினால் மட்டுமே உயர்வடைந்தது. தேறிய வெளிநாட்டுச் சொத்தில் ஏற்பட்ட இவ் வீழ்ச்சி

**வரைபடம் 10.1**
**நாணயக் கூட்டுக்கள், சுற்றோட்ட வேகம், பணப்பெருக்கி**




யானது செலாவணிச் சந்தையில் அழுத்தத்தைக் கொண்டிருந்ததுடன் 1996இல் ரூபாயானது ஐ.அ.டொலருக்கெதிராக 5 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

ஏறக்குறைய 50 சதவீதமான வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் உண்மையிலேயே வெளிநாடுகளில் தொழில் செய்துவிட்டு நாடு திரும்பிய தற்போது இலங்கையில் வசிக்கின்ற இலங்கையர்களால் வைக்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். வெளிநாட்டு நாணய வைப்புக்களின் இக்கூறானது தற்போதைக்கு கருதப்படுவதுபோல் வதிவற்றோர்களுக்கான வங்கிப் பொறுப்புக்களாக அல்லாமல்

**வரைபடம் 10.2**
**நாணயத் தளமும் பணப்பெருக்கியும்**



சிறப்புக் குறிப்பு 10

## வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகுகளை

### உள்ளடக்குவதற்காக நாணய அளவீட்டினை திருத்தி அமைத்தல்.

தற்போதைக்கு நாணய அளவீடானது இலங்கையில் உள்ள வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு அலகுகள் (உ.வ.தொ.அ) மற்றும் மத்திய வங்கி ஆகியனவற்றின் தொழிற்பாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாணய புள்ளி விபரங்களின் உள்ளடக்கத்தினையும் புறப்தோற்ற பாங்கினையும் மேம்படுத்துவதற்காக நாணய அளவீட்டில் இரு பாரிய மாற்றங்கள் அவசியமாகின்றன. ஒன்று வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகின் (வெ. நா. வ. தொ. அ.) நடத்து முறையுடன் தொடர்புபட்டது. மற்றது வதியாதோர் வெளிநாட்டு நாணய கணக்குகளின் நடத்து முறையுடன் தொடர்புபட்டது. இந்த தொழில் நுட்பக்குறிப்பு தேவைப்படும் மாற்றங்களையும் நாணய தரவுகளின் மீதான அவற்றின் குறிப்பான பாங்கினையும் விவரிக்கின்றது.

### வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகுகளின் நடத்து முறை.

தற்போதைக்கு வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகுகளின் தொழிற்பாடுகள் தொடர்பான தரவுகள் அளவீட்டில் பொருத்தமான முறையில் உள்ளடக்கப்படுவதில்லை. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகுகள் வதியாதோர் கணக்குகளாக அல்லது முற்றிலும் கரைகடந்த அமைப்புக்களாக கருதப்படுவதுடன் வெ. நா. வ. அலகுகள் தொடர்பான உ.வ.தொ அலகுகளின் உள்நாட்டு ஐந்தொகை களில் காணப்படும் நிலுவைகள் வெளிநாட்டுச் சொத்துக்கள் /பொறுப்புக்களாக நடத்தப் படுகின்றன. இத்தகைய நிலுவைகள் நாணய அளவீட்டில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களாக உள்ளடக்கப்படுகின்றன. வெ. நா. வ. தொ அலகுகள் நிறுவப்பட்ட காலத்திலிருந்து இதுதான் வழமையான செயல்பாடாக காணப்படுகின்றது.

கரைகடந்த வங்கித்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகவும் ஏற்றுமதி பதனிடல் வலையங்களிலுள்ள கம்பனிகளின் தொழிற்பாடுகளுக்கு வசதி அளிப்பதற்குமென மத்திய வங்கியின் சுற்றறிக்கை எண் 380 இன் கீழ் 1979 யூலை நடுப்பகுதியில் வெ. நா. வ. தொ. அலகுகள் நிறுவப்பட்டன. உள்நாட்டு அமைப்புகளுடனான வெ. நா. வ. தொ. அலகின் கொடுக்கல் வாங்கல்களின் மற்றும் உள்நாட்டு நாணய அபிவிருத்திகள் மீதான அதன் தாக்கம் என்பன மிகச் சிறியதாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது எனினும் வெ. நா. வ. தொ. அலகுகளின் முக்கியத்துவமானது நிதியியல் முறமையில் கணிசமாக வளர்ச்சி அடைந்துள்ளது. 1996 இறுதியில் 26 வெ. நா. வ. தொ. அலகுகள் நாட்டின் தொழிற்பாட்டில் இருந்தன. இந்த அலகுகள் அவற்றின் வாடிக்கையாளர்க்கு முழுமையானதொரு வர்த்தக வங்கித்தொழில் பணிகளை வழங்குகின்றன. வெ. நா. வ. தொ. அலகுகளின் வாடிக்கையாளர் தளமானது வதியாதோர், வதிவுள்ளோர் மற்றும் வங்கிகள் ஆகிய மூன்று தொகுதிகளாக வகைப்படுத்தப்படலாம். வதியாதோர் வகையானது முற்றிலும் கரைகடந்த வாடிக்கையாளர்களை உள்ளடக்கியுள்ளது. வதிவுள்ளோர் வகையானது முதலீட்டுச்சபை (பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு) தொழில் முயற்சிகளையும் ஏனைய ஒப்புதல் அளிக்கப்பட்ட வாடிக்கையாளர்களையும் உள்ளடக்குகின்றது. இத்தகைய வதிவுள்ள தொழில் முயற்சிகளுக்கான முக்கிய ஒரு கொடுகடன் மூலமாக வெ. நா. வ. தொ. அலகுகள் விளங்குகின்றன. 1979 இல் ரூபா 5,760 இலட்சமாக விளங்கிய (ஐ. அ. டொலர்கள் 390 இலட்சம்) வெ. நா. வ. தொ. அலகுகளின் மொத்த மூலவளங்கள் 1996 இல் ரூபா 810, 730 இலட்சத்திற்கு (ஐ. அ. டொலர்களின் 14,300 இலட்சம்) உயர்வடைந்த வேளையில் வெ. நா. வ. தொ. அலகுகளினால் அவற்றின்

## சிறப்புக் குறிப்பு 10 (தொடர்ச்சி)

அட்டவணை 1

### நாணய அளவீடுகளின் ஒப்பீடு

(ரூபா ப. இ.)

| | நடைமுறையிலுள்ளது | | | முன்மொழியப்பட்டது | | |
|---|---|---|---|---|---|---|
| | 1994 திசெ. | 1995 திசெ. | 1996 திசெ. | 1994 திசெ. | 1995 திசெ. | 1996 திசெ. |
| விரிந்த பணநிரம்பல் | 191,672 | 228,537 | 253,201 | 214,306 | 259,442 | 288,657 |
| குறுகிய பண நிலம்பல் | 70,463 | 75,218 | 78,203 | 70,463 | 75.218 | 78,203 |
| நாணயம் | 38,906 | 42,199 | 42,565 | 38,906 | 42,199 | 42,565 |
| கேள்வி வைப்புக்கள் | 31,557 | 33,019 | 35,638 | 31,557 | 33,019 | 35,638 |
| போலி நாணயம் | 121,209 | 153,319 | 174,998 | 143,843 | 184,224 | 210,454 |
| உள்நாட்டு வங்கித்தொழில் அலகுகள் | 121,209 | 153,319 | 174,998 | 136,734 | 171,157 | 195,672 |
| வெளிநாட்டு செலாவணி வங்கி அலகுகள் | | | | 7,109 | 13,067 | 14,782 |
| தேறிய வெளிநாட்டு சோத்துக்கள் | 64,467 | 66,532 | 61,861 | 58,760 | 64,745 | 63,319 |
| நாணய மேலாண்மைகள் | 65,864 | 74,301 | 73,786 | 64,571 | 73,662 | 73,786 |
| வணிக வங்கிகள் | -1,397 | - 7,769 | -11,925 | - 5,811 | - 8,917 | -10,467 |
| உள்நாட்டு வங்கித்தொழில் அலகுகள் | -1,397 | - 7,769 | -11,925 | 393 | - 3.037 | -4,186 |
| வெளிநாட்டு செலாவணி வங்கி அலகுகள் | | | | - 6,204 | - 5,880 | - 6,281 |
| தேறிய உள்நாட்டுச்சொத்துகள் | 127,205 | 162,005 | 191,339 | 155,546 | 194,696 | 225,334 |
| உள்நாட்டு கடன்கள் | 173,795 | 223,799 | 252,317 | 206,047 | 262,670 | 292,395 |
| அரசு மீதான கோரல்கள்(தேறிய) | 28,148 | 35,215 | 47,558 | 30,882 | 38,430 | 46,152 |
| நாணய மேலாண்மைகள் | 16.756 | 24,418 | 34,291 | 16,756 | 24,418 | 34,291 |
| வணிக வங்கிகள் | 11,392 | 10,797 | 13,267 | 14,126 | 14,012 | 11,861 |
| உ வ தொ அலகுகள் | 11,392 | 10,797 | 13,267 | 11,392 | 10,797 | 13,267 |
| வெ நா வ தொ அலகுகள் | | | | 2,734 | 3,215 | - 1,406 |
| பொதுகூட்டுத்தானங்களுக்கான கடன்கள் | 5,163 | 8,527 | 9,938 | 11,407 | 13,305 | 15,491 |
| உ நா வ தொ அலகுகள் | 5,163 | 8,527 | 9,938 | 5,163 | 8,527 | 9,938 |
| வெ செ வ அலகுகள் | | | | 6,244 | 4,778 | 5,553 |
| தனியார் துறைக்கான கடன் | 140,484 | 180,057 | 194,821 | 163,758 | 210,935 | 230,752 |
| ஒநாவ எதிர் அலகுகள் | 140,484 | 180,057 | 194,821 | 140,484 | 180,057 | 194,821 |
| வெசெவ அலகுகள் | | | | 23,274 | 30,878 | 35,931 |
| ஏனைய விடயங்கள் | -46,590 | - 61,794 | - 60,978 | - 50,501 | - 67,974 | -67,061 |
| ஒநாவ எதிர் அலகுகள் | -46,590 | - 61,794 | - 60,978 | -31,562 | - 48,049 | - 48,043 |
| அசெவ அலகுகள் | | | | -18,939 | - 19,925 | - 19,018 |
| ஒப்பந்தக் குறிப்புக்கள் | | | | | | |
| ஒதுக்கப்பணம் | 68,055 | 78,587 | 85,509 | 68,055 | 78,587 | 85,509 |
| தேஉசொ நாணய மேலாண்மைகள் | 2,191 | 4,286 | i1,723 | 2,191 | 4,286 | 11,723 |
| பணப்பெருக்கி | 2.82 | 2.91 | 2.96 | 3.15 | 3.30 | 3.38 |
| புள்ளிக்கு புள்ளி மாற்றம் | | | | | | |
| மொத்த விரிந்த பணநிரம்பல் | 19.7 | 19.2 | 10.8 | 18.7 | 21.1 | 11.3 |
| தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் | 34.0 | 3.2 | - 7.0 | 40.4 | 10.2 | -2.2 |
| தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 13.6 | 27.4 | 18.1 | 12.2 | 25.2 | 15.7 |
| அரசு மீதான கோரல்கள் ( தேறிய ) | 4.3 | 5.1 | 35.1 | 3.7 | 24.4 | 20.1 |
| பொதுக்கூட்டுத்தாபனம் மீதான கோரல்கள் | - 33.6 | 65.2 | 16.5 | - 26.0 | 16.6 | 16.4 |
| தனியார் துறைமீதான கோரல்கள் | 21.2 | 28.2 | 8.2 | 22.0 | 28.8 | 9.4 |
| ஏனைய விடயங்கள் ( தேறிய ) | - 20.5 | -32.6 | 1.3 | - 24.0 | -34.6 | 1.3 |

மூலம் - இலங்கை மத்திய வங்கி

சிறப்புக் குறிப்பு 10 (தொடர்ச்சி)

வதியும் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் கொடுகடன்கள் 1982 இன் 50,500 இலட்சத்திலிருந்து 1996 இல் ரூபா 445,720 இலட்சத்திற்கு அதிகரித்தன. வெ. நா. வ. தொ. அலகுகளிலிருந்து முதலீட்டுச்சபை அல்லாத ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டு நாணயக் கடன்களை பெற்றுக்கொள்வதனை அனுமதிப்பதற்க்காக 1996 இறுதிப்பகுதியளவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக கொடுக்கல் வாங்கல் மட்டமானது இதற்கு மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வெ. நா. வ. தொ. அலகின் வதிவற்ற வாடிக்கையாளர்களின் வகையைப் பொறுத்த வரையில் கொடுக்கல் வாங்கல்கள் முற்றிலும் கரைகடந்த நடவடிக்கைகளாக காணப்படுவதுடன் உள்நாட்டுப் பணவழங்கல் மீதானவற்றின் நோக்கமும் மிகச்சிறியதாகவே காணப்படுகிறது. எனினும் வதியாதோர்க்கான வெ. நா. வ. தொ. அலகின் கடன்கள் உள்நாட்டு முகாமைத்துவத்தின் மீது தாக்கங்களை கொண்டுள்ளன. இத்தகைய கடன்கள் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் திரவத் தன்மையை அதிகரிக்கும். உள்நாட்டுப் பொருளாதாரம் மீதான அவற்றின் ஆதிக்கத்தின் பரிமாணத்தைத் திருத்தி எடுக்கும்போது நாணய புள்ளிவிபரங்களானது அவற்றின் தொழிற்பாடுகளை பொருத்தமான முறையில் உள்ளடக்கிக்கொள்ளல் வேண்டும்.

### வதிவற்றோர் வெளிநாட்டு நாணய நிலுவைகளின் நடத்துமுறை.

தற்போதைக்கு வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் வதிவற்றோருக்கு உரித்துடையதாக் கருதப்படுவதுடன் இத்தகைய கணக்குகளில் காணப்படும் நிலுவைகள் வெளிநாட்டுப் பொறுப்புகளாகக் கருதப்படுகிறது. பெறுமானநியதிகளில் 50 சத வீதத்திற்க்கும் மேலான இத்தகைய வைப்புக்கள் குறிப்பாக வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய குடிபெயர்ந்த வதிவுள்ளோரினால் வைக்கப்பட்டுள்ளதாக உரைக்கப்படுகிறது. எனவே இந்த தொகுதியினால் வைத்திருக்கப்படும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் கூறானது உள்நாட்டு வங்கித்தொழில் அலகுகளின் வெளிநாட்டு நாணயங்களில் குறிக்கப்பட்ட வதிவுள்ளோருக்கான உள்நாட்டுப் பொறுப்புக்களாகவே கருதப்படும். வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புகளிலிருந்து பெறப்பட்ட நிதிகளின் பெரும்பகுதியானது உண்மையில் உள்நாட்டு வங்கித் தொழில் அலகுகளினால் வதிவுள்ள அமைப்புக்களான வெளிநாட்டு நாணய வங்கி தொழில் அலகுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இவைகள் தற்பொழுது உள்நாட்டு சொத்துக்களேயன்றி வெளிநாட்டு சொத்துக்கள் அல்ல. நாட்டின் வங்கித் தொழில் முறையின் மொத்த வெளிநாட்டு திறந்துவிடப்படலின் நோக்கம் தொடர்பான விடயம் என்னவெனில் வெளிநாட்டு வங்கித் தொழில் அலகுகளிலும், உள்நாட்டு வங்கித் தொழில் அலகுகளிலும், வதிவற்றோருக்கான தேறிய திறந்துவிடலாகும். வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தொடர்பான சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வகைப்படுத்தல் பொதுவான வதிவுள்ள - வதிவற்ற உடைமை வகைப்படுத்தலுக்கு மாறாக நாணய இனத்தின் அடிப்படையில் மேற் கொள்ளப்படுவதனால் மொத்த வெளிநாட்டு திறந்து விடப்படலானது நடைமுறையிலுள்ள நாணய அளவீட்டினால் வெளிப்படுத்தப்படமாட்டாது.

இத்தகைய நிலைமைகளைக்கருத்தில் கொண்டு திருத்தியமைக்கப்பட்டவொரு நாணய அளவீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

### வெ. நா. வ. தொ. அலகுகளையும் உள்ளடக்கிய நாணய அளவீடு.

நடைமுறையிலுள்ள உள்நாட்டு நாணய அளவீடானது வெ. நா. வ. தொ. அலகுகளை வதிவற்ற அமைப்புகளாகக் கருதும் வரைவிலக்கணங்களை அடிப்படையாக கொண்டதாகும். வெ. நா. வ. தொ.

சிறப்புக் குறிப்பு 10 (தொடர்ச்சி)

அலகுகளை நாணய அளவீட்டினுள் உள்ளடக்கிக் கொள்வதன் மூலம் அவை வதிவுள்ள அமைப்புக்களாகக் கருதப்படும். எனவே உள்நாட்டு நாணய அளவீட்டில் காணப்படும் உள்நாட்டு அலகுகள் தொடர்பான சில விடயங்கள் மீள் வரையறுக்கப்படல் வேண்டும். ஆதலினால், உள்நாட்டு நாணய அளவீட்டின் பின்வரும் துணைப்பிரிவுகள் மீள் வரையறுக்கப்பட்டுள்ளன,

உள்நாட்டு அலகினால் வெ. நா. வ. தொ. அலகுகளில் செய்யப்பட்ட முதலீடு அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் அவற்றின் வெ. நா. வ. தொ. அலகுகளினூடாக வதிவற்றோர் வெளிநாட்டு நாணய நிதிகளை முதலீடு செய்கின்றன. உள்நாட்டு நாணய அளவீட்டில் இத்தகைய முதலீடுகள் வெளிநாட்டுச் சொத்துக்களாக கருதப்படுகின்றன. எனினும் வெ. நா. வ. தொ. அலகுகள் உள்நாட்டு அமைப்புக்களாக கருதப்படுவதனால் இத்தகைய முதலீடுகள் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டு சொத்துக்களாக கருதப்படும். வெளிநாட்டு சொத்துக்களின் இரட்டைக்கணிப்பைதவிர்க்கும் நோக்கில் வெ. நா. வ. தொ. அலகுகளினால் வதிவற்றவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட இறுதியான முதலீடுகள் மட்டுமே வெளிநாட்டு சொத்துக்களாக கருதப்படல் வேண்டும். தற்போதைக்கு உள்நாட்டு நாணய அளவீட்டில் பதிவு செய்யப்படும் மொத்த வெளிநாட்டு சொத்துக்களின் பெறுமானத்தில் குறைப்பொன்றை ஏற்படுத்துவதே இந்த சீராக்கத்தின் விளைவாகும்.

**வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்பு நிலுவைகள்.**

உள்நாட்டு நாணய அளவீட்டில் வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்பு நிலுவைகளானது தற்போதைக்கு வெளிநாட்டுப் பொறுப்புக்களாகவே கருதப்படுகிறது. வர்த்தக வங்கி மூலங்களின்படி வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்பு உடமையாளர்களில் கிட்டத்தட்ட 51 சதவீதமானோர் இலங்கையில் வசிக்கின்றார்கள். இவைகள் உண்மையில் உள்நாட்டு பொருளாதாரத்தின் வெளிநாட்டு பொறுப்புக்கள் அல்ல. எனவே உத்தேச நாணய அளவீட்டில் வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்பு பொறுப்புக்களின் (50 சதவீதம்) உள்நாட்டுப் பெறுப்புகளாகவும் விரிந்த பணநிரம்பலின் ஒரு பகுதியாகவும் கருதப்படும். (எஞ்சிய இலங்கையில் வதியாத வதிவற்றோர் வெளிநாட்டு நாணய கணக்குடமையாளர்கள்) பொறுப்புக்கள் வெளிநாட்டுப் பொறுப்புக்களாக கருதப்படுகிறது. இச்சீராக்கத்தின் விளைவானது உள்நாட்டு நாணய அளவீட்டில் தற்போதைக்கு குறித்து வைக்கப்பட்டுள்ள பெறுமானங்களிலிருந்து வெளிநாட்டுப் பொறுப்புக்ளை குறைப்பதும் விரிந்த பண நிரம்பலை அதிகரிப்பதாகும்.

கூட்டிணைக்கப்பட்ட நாணய அளவீடானது நடைமுறையிலுள்ள நாணய அளவீட்டிலிருந்து பின்வரும் முக்கிய மாற்றங்களைக் கொண்டுள்ளது.

உயர்வான விரிந்த பணம்: வெ. நா. வ. தொ. அலகுகளுடனான முதலீட்டுச்சபை மற்றும் ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் ஆகியோரின் வைப்புக்கள் உள்ளடக்கப்படுதல் மற்றும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீள்வரையறுக்கப்படல் என்பவற்றின் காரணமாக விரிந்த பணத்தில் அதிகரிப்புக்கள் ஏற்படும். 1996 இறுதியில் விரிந்த பணத்தின் வளர்ச்சியானது தற்போதைய நாணய அளவீட்டின் 10.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 11.3 சதவீதமாக விளங்கும்.

தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் மிகவும் பொருத்தமான வொரு மதிப்பீடு: வெளிநாட்டு நாணய வங்கித்தொழில், அத்தரவுகளின் உள்ளடக்கம் மற்றும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் பகுதிகள் உள்நாட்டுப் பொறுப்புக்களாக மீள்வகைப்படுத்தப்பட்டமை என்பன வர்த்தக

சிறப்புக் குறிப்பு 10 (தொடர்ச்சி)

வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இது வங்கித்தொழில் முறையின் தேறிய வெள்நாட்டுச்சொத்துக்கள் இருப்பின் பெருமளவு பூரணம் அடைந்த நிலையினை பிரதிபலிக்கின்றது. திருத்தியமைத்தலுக்கு முன்னதான 7 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச்சொத்துக்கள் 1996 இல் 2.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

அதிகரித்த தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள். அரசதுறை மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டிற்கும் வெ. நா. வ. தொ. அலகுகளினால் வழங்கப்பட்ட கொடுகடனின் உள்ளடக்கத்தின் காரணமாக வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச்சொத்துக்கள் அதிகரித்தன

பாரிய பணப்பெருக்கி: முன் மொழியப்பட்டுள்ள நாணய அளவீடானது பொருளாதளர முயற்சிக்கான நிதியிடல் மட்டத்தின் பெருமளவு நியாயமான உள்ளடக்கத்தினைக் கொண்டுள்ளது. கூட்டிணைக்கப்பட்ட அளவீட்டினால் குறித்துக் காட்டப்படும் பணவளங்களானது விரிந்த பணத்தின் கோட்பாடு ரீதியான வரைவிலக்கணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது விரிந்த பணத்தின் இருப்பில் விரிவாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. முதலீட்டுச்சபையானதும் வெ. நா. வ. தொ. அலகுகளின் ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட வாடிக்கையாளர்களினதும் சேமிப்புக்களை அது இப்பொழுது உள்ளடக்கிய போதிலும் விரிந்த பணமானது பொதுமக்களினால் வைத்திருக்கப்படும் குறுகிய பணம், தவணை வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள் என்பவற்றின் கூட்டுத் தொகை ஆகும். திருத்தியமைக்கப்பட்ட நாணய அளவீட்டின் கீழும் கடனை வரையறுக்கப்பட்டுள்ளது.) எனினும் ஒதுக்குப்பணம். நாணயத்தளம் அல்லது உயர்வலுப்பணம்) மாறாதிருந்ததுடன் பணப் பெருக்கியில் அதிகரிப்பொன்றினையும் ஏற்படுத்தியுள்ளது. கோட்பாட்டுரீதியில் இந்த அதிகரிப்பானது வைப்பக்களுக்கான காசு விகிதத்தில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் திரண்ட ஒரு நியதி ஒதுக்கு விகிதத்தில் ஏற்பட்ட குறைப்பு (ஏனெனில் வெ. நா. வ. கொ. அலகு வைப்புக்களின் மீது ஒதுக்குத்தேவைப்பாடுகள் கிடையாது) என்பவற்றின் விளைவால் ஏற்பட்டதாகும்.

வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட உள்நாட்டு வைப்புப் பொறுப்புக்களாக கருதப்பட வேண்டும். பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் வேளையில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் போலி நாணய மட்டம் ஆகிய இரண்டும் அதிகரித்து விரிந்த பணநிலம்பலை உயர்த்தும். அத்துடன் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகுகளையும் உள்ளடக்கியதான ஒரு முகப்படுத்தப்பட்ட நாணய அளவீடொன் றினை மேற்கொள்ளலும் அவசியமானதாகும். இது தொடர்பான ஒரு நுண்ணாய்வுக் குறிப்பும் மற்றும் நாணய அளவீட்டில் மேற்கொள்ளப்படும் இவ்விருவையான திருத்தங்களினால் ஏற்படும் தாக்கம் என்பன திருத்தியமைக்கப்பட்ட வடிவத்திலான நாணய அளவீட்டினை மத்திய வங்கியினால் வழங்கப்படும் நாணய புள்ளிவிபரங்களின் ஒரு வழமையான அம்சமாக செய்யும் நோக்கில் சிறப்புக்குறிப்பு 10 இல் தரப்பட்டுள்ளது.

1996 இல் ஒதுக்குப் பணம் ( உயர்வலு நாணயம் அல்லது நாணயத்தளம் ) 1995 இன் ரூ. 105,320 இலட்சம் அல்லது 15.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 69,220 இலட்சத்தினால் அல்லது 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது. ஒதுக்குப் பணத்தில் ஏற்பட்ட இம் மெதுவான வளர்ச்சியானது, தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் 18.1 சதவீதத்தினால் பொதுவாக அதிகரித்த திரவத்தன்மையினை கணிசமாக இறுக்குவதற்கு வழிவகுத்தது. இத் திரவத்தன்மை இறுக்கமானது ஆண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் கிட்டத்தட்ட 3 ஆக விளங்கிய ஒரளவிற்கு உயர்வான விரிந்த பண பெருக்கியினால் வெளிக்காட்டப்பட்டது. வருமானச் சுழற்சி விசை 1995 இல் இருந்ததைப் போன்றே 1996 இலும் கிட்டத்தட்ட

3 ஆக விளங்கியது. ஒதுக்குப் பணத்தில் எற்பட்ட 8.8 சதவீத அதிகரிப்பானது மத்திய வங்கியின் தேறிய சருவதேச ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் எதிரீடுசெய்யப்பட்ட அரசிற்கான தேறிய கொடுகடனில் ரூ. 98,730 இலட்ச அதிகரிப்பினூடாக மூலப்பக்கத்திலிருந்து பெறப்பட்டது. பயன்பாட்டுப் பக்கத்தில் இவ்வதிகரிப்பானது முதன்மையாக ரூ. 27,950 இலட்சத்தால் அதிகரித்து சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் மற்றும் ரூ. 40,540 இலட்சத்தால் அதிகரித்த வர்த்தக வங்கி வைப்புக்கள் என்பனவற்றில் பிரதிபலித்தது.

## 10.2 நாணயக் கொள்கை

1996 நடுப்பகுதியில் நாட்டின் பொருளாதாரம் எதிர்நோக்கிய தற்காலிக பின்னடைவு, மின் துண்டிப்பினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிறுவனங்கள் சலுகைக் கொடுகடன்களுக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வி மற்றும் முன்னைய ஆண்டிலிருந்து தொடரும் கணிசமான அளவிலான திரவத்தன்மை உயர்வு என்பன நிலவிய சூழ்நிலையில் மத்திய வங்கி நாணயக் கொள்கையை மேற்கொள்ளவேண்டியிருந்தது. கோதுமை மா, பாண் மற்றும் பெற்றோலியப் பொருட்களின் நிர்வகிக்கப்பட்ட விலைகளை உயர்த்தியதுடன் இணைந்ததாக முன்னுரிமையற்ற செலவினங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளாக நிதிப் பற்றாக்குறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நடவடிக்கைகள், மேற் கொள்ளப் பட்டதனால் மேம்பாடடைந்த நிதி முகாமையினால் நாணயக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதிலுள்ள இடர்ப்பாடுகள் குறைக்கப் பட்டன. வரட்சி மற்றும் மின்துண்டிப்பின் விளைவாக எழுந்த தற்காலிக வழங்கல் சீர்குலைவுகள் விலைகளை உயர்த்தின. விரிந்த பண நியதிகளில் 20 சதவீதத்திற்கும் மேலான உயர்வீத நாணய விரிவாக்கத்தின் தொடர்ச்சி, ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளில் உயர்வடைந்து சென்ற விலைகள் என்பன காரணமாக உள்ளார்ந்த பணவீக்க அழுத்தம் தணியும் வரையில் நாணயக் கட்டுப்பாடுகளைத் தளர்வு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

உயர் நியதி ஒதுக்குத் தேவை பேணப்பட்டதுடன் நன்நடத்தை ஊக்குவிப்பினைப் பயன் படுத்தி நுகர்வு சார்ந்த கொடுகடன் மற்றும் நிச்சயமற்ற கடன் வழங்கலை குறைக்குமாறு வர்த்தக வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. வர்த்தக வங்கி முகாமையாளர்களுடனான கிரமமான மாதாந்த சந்திப்புக்களின் போது நிதி முறைமையின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு சிறந்த வங்கித்தொழில் நடைமுறைகளை பேணு வதன் அவசியத்தை மத்திய வங்கி வலியுறுத் தியது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் நாணயக் கொள்கையின் முதன்மைக் கருவியை உள்ளக்கியிருந்தது. 1996 நடுப்பகுதியில் திரவத் தன்மைப் பற்றாக்குறையினை எதிர்நோக்கிய நிறுவனங்களால் உதவுதொகை அளிக்கப்பட்ட கொடுகடன்களுக்கு அதிகரித்த கேள்வி எழுப்பப்பட்ட வேளையில், பொதுவான கொடுகடன் மீள் பட்டியலிடலை அறிமுகப்படுத்தாது தமது வாடிக்கையாளர்களின் தற்காலிக கொடுகடன் தேவைகளை தனித்தனியாக எதிர்கொள்ளுமாறு வங்கிகளை ஊக்குவிப்பதற்கு மத்திய வங்கி நன்நடத்தை ஊக்குவிப்பினைப் பயன்படுத்தியது.

நாணய சந்தையினை உறுதிப்படுத்தும் அதன் முயற்சியாக ரூ. 50,000 இலட்சம் பெறுமானங்கொண்ட திறைசேரி உண்டியல்களின் பல சிறப்பு வழங்கலை ஏற்றுக்கொண்டதுடன், ஆண்டின் முற்பகுதியில் கணிசமான தொகை திறைசேரி உண்டியல்களை மத்திய வங்கி முதல் நிலை ஏலங்களில் வாங்கியது. பின்னர் இந்த உண்டியல் கள் இரண்டாந்தரச் சந்தையினூடாக சந்தையில் விற்கப்பட்டது. தற்காலிக முற்பணங்களின் பேரி லான ரூ.37,590 இலட்சம் அதிகரிப்பினை முக்கியமாக பிரதிபலித்து மத்திய வங்கியிடமிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் 1996 இன் முன்னரைப்பகுதியின் இறுதியளவில் ரூ.28,410 இலட்சத்தால் உயர்வடைந்தது. அதிகரித்த அரசுச் செலவினம் மற்றும் தனியார்மயப்படுத்தல் பெறுகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன காரண மாக அரசின் நிதித் தேவைகளில் ஒரு பகுதியினை மத்திய வங்கி வழங்க வேண்டியிருந்ததுடன் திசெம்பர் அளவில் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ.98,730 இலட்சத்தால் உயர்வடைந்தது. திறை சேரி உண்டியல்களின் வெளிநின்ற மட்டம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரூ.1,250,000 இலட்சம் வரையறையை எய்தியதால் 1996 ஓகத்துக்குப் பின்னர் புதிய திறைசேரி உண்டியல்களின் வழங்கலினூடான நேரடி அரச கடன் பெறுகைகள் கட்டுப்படுத்தப்பட்டன. திறை சேரி உண்டியல்கள் மீதான இவ் வரையறையானது இறை முகாமைத்

துவத்தில் சில ஒழுங்கு முறைகளை விதித்தது. இது அரசிறைப் பற்றாக் குறையைக் கட்டுப்படுத்து வதற்கும் உற்பத்தித்திறன் குறைந்த செலவினங் களைக் குறைப்பதற்கும் உதவியது. அத்துடன் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வீதங் களை எப்போதுமே 1995இல் நிலவிய மட்டத்திற்குக் கீழ் பேணுவதற்கு உதவிய காரணிகளில் இதுவும் ஒன்றாகும். அரசின் நிதியிடல் தேவைகளின் ஒரு பகுதி நிர்வாக ரீதியான கடன் பெறுகைகளி னூடாக அதாவதுசில பொதுத்துறை நிறுவனங் களின் மிகையான நிதியங்களை நேரடியாகப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளப் பட்டது.

மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் முதலீட்டுப் பட்டியல் திறந்த சந்தை தொழிற் பாடுகளை மேற்கொள்வதற்குப் போதுமானதாக இருந்தது. ஆகையால் திறந்த சந்தை தொழிற்பாடு களுக்காக தனது சொந்த பிணையங்களை வாங்குவதற்கான அவசியம் மத்திய வங்கிக்கு எழவில்லை. மத்திய வங்கி பணச்சந்தை நிகழ்வுக ளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்ததுடன் அழைப்புப் பணச்சந்தை வீதங்களின் தளம்பல்க ளைக் குறைக்கும் நோக்குடன் இரண்டாந்தரச் சந்தை தொழிற்பாடுகள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் என்பன வற்றிற்கு பிரயோகிக்கப்படக்கூடிய வட்டி வீதங்க ளையும் சீராக்கம் செய்தது. நியதி ஒதுக்கு விகித மானது வெளிநாடுகளில் வைக்கப்பட்டுள்ள வெளி நாட்டு நாணய வைப்புக்கள் தவிர ஏனைய அனைத்து வைப்புக்களுக்கும் 15 சதவீதமாகவும் வெளிநாடுகளில் வைக்கப்பட்டுள்ள வைப்புக்க ளுக்கான விகிதமானது ஆகக்குறைந்தது 5 சதவீத மாகவும் பேணப்பட்டது. மத்திய வங்கியின் குறுங்கால மீள்நிதியிடல் திட்டங்கள் அல்லது நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் நிதியத் தின் கீழ் மீள் நிதியிடல் எதுவும் வழங்கப்பட வில்லை.

ஆண்டிறுதியில் நாணயத் திரட்டல்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் விலை அதிகரிப்புக்களில் ஏற்பட்ட படிப்படியான வீழ்ச்சி என்பன காரணமாக நிதி மற்றும் செலாவணிச் சந்தைகள் மிகவும் உறுதிப்பாடடைந்தன. குறுங்கால வட்டிவீதங்களில் ஏற்பட்ட தளம்பல் கள் கணிசமாக குறைக்கப்பட்டது. வங்கிகளின் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் 15 சதவீதத்தால் அதிகரித்தன. வதிவற்ற வெளிநாட்டு நாணய வைப்புக்கள் 16 சதவீதத்தினால் அதிகரித் தன. ஆண்டின் பிற்பாகத்தில் பொருளாதார நடவடிக்கைகள் விரைவாக மீட்சிபெற்றதனாலும் பணவீக்க அழுத்தம் கணிச மாக தணிந்தமை யினாலும் வங்கி நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டை குறைத்தல் மற்றும் முதலீட்டுச் சபை அல்லாத ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டு நாணயக் கடன் களைப் பெறுவதற்கு அனுமதிய ளித்தல் என்பன உட்பட நாணயக்கொள்கையை தளர்த்துவதனை வங்கி கருத்தில் கொண்டிருந்தது.

## 10.3 வட்டி வீதங்கள்

1996 இன் வட்டிவீதங்கள் 1995 இனை விட பொதுவாகக் குறைவாக இருந்தமையினை பொது வான போக்குகள் எடுத்துக் காட்டியதுடன் அடிக்கடி மாறும் தன்மை மிகக் குறைவாயிருந்த மையையும் காட்டின. அரச தொழிற்பாடுகள் மற்றும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் உட்பாய்ச்சல்கள் ஆகிய இருமுறைகளினூடாக முதல் சில மாதங்களுக்கு வங்கி அமைப்பினுள் திரவத்தன்மை உட்செலுத்தப்பட்டதனால் 1996 இன் முற்பகுதியில் குறுங்கால வட்டிவீதங்கள் கடுமையாக வீழ்ச்சியுற்றன. அதன்பின் கொடு கடன்களுக்கான அரசின் கேள்வி மற்றும் சென்மதி நிலுவை பற்றாக்குறை என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் நவெம்பர் மத்திய பகுதி வரையில் வட்டிவீதங்கள் படிப்படியாக மேல் நோக்கி உயர்ந்தன. ஆண்டிறுதியில் மீண்டும் ஒரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இப்போக்கு களிற்கு இணைவாக நடுத்தர மற்றும் நீண்டகால வீதங்களும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் உறுதி யாக இருந்தன.

### குறுங்கால வீதங்கள்

குறுங்கால வீதங்கள் 1995இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் அடிக்கடி மாறுந்தன்மை மற்றம் மிக உயர்ந்தமட்டங்கள் என்பனவற்றுக்கு மாறாக 1996 இன் முதல் சில மாதங்களில் சந்தையில் காணப்பட்ட அதிகரித்த திரவத்தன்மை காரணமாக வட்டிவீதங்கள் சடுதியாக வீழ்ச்சிய டைந்தன. இது முதன்மையாக முதலிரு மாதங்க ளிலும் அரச திரவத்தன்மையில் ஏற்பட்ட கணிச மான மிகை என்பனவற்றினால் அடையப்பட்ட

தாகும். வர்த்தக வங்கிகளிலிருந்து வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்தல், அரசிற்கு அளிக்கப்பட்ட அதிகரித்த தற்காலிக முற்பணங்கள் மற்றும் அரசிற்கு தனது இலாபத்தை மாற்றல் செய்தல் என்பன மூலமாக மத்திய வங்கியால் ரூபா நியதிகள் உட்செலுத்தப்பட்டமை சந்தைத் திரவத்தன்மையை மேலும் அதிகரித்தது. திறைசேரி உண்டியல் ஏலங்களின் அதிகூடிய மேலதிக விலைக்குறிப்பீடுகள் சந்தையின் திரவத் தன்மையைப் பிரதிபலித்தன. இதன்விளைவாக, அனைத்து முதிர்ச்சிக் காலங்களிலுமான திறைசேரி உண்டியல்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 1995 இறுதியின் 19.26 – 18.97 சதவீத வீச்சில் இருந்து 1996 மாச்சில் 11.98 – 14.40 சதவீத வீச்சுக்கு கடுமையாக வீழ்ச்சியுற்றன. கடந்த அண்மைக்காலத்தில் அவதானிக்கப்பட்ட பருவத்தன்மைகளை பிரதிபலித்து இவ்வீழ்ச்சியானது குறுகியகால முதிர்ச்சிகளில் கூடியளவில் முனைப்படைந்திருந்தது. இவ்வீழ்ச்சியானது அழைப்புப் பணச்சந்தை வீதங்களிலும் பிரதிபலித்ததுடன் 1995 இறுதியில் 20.00 – 58.00 சதவீதத்திலிருந்து மாச்சு இறுதியில் 9.80 –10.80 சதவிதத்திற்கு அதனையும் விடக் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. நேர்மாற்று மீள் கொள்வனவுச் சந்தையிலும் இரண்டாந்தரத் திறைசேரிச் சந்தையிலும் மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கல்களுக்கு பிரயோகிக்கப்படக் கூடிய வீதங்கள் முதலாந்தரச் சந்தை வீதங்களில்

**வரைபடம் 10.3**
**வட்டி வீதங்கள்**




அபிவிருத்தி / வங்கி (ஆகக்குறைந்தது) - மீள்நிதியிடல் வீதம் சி.ந.கை. திட்டம்

நிலவிய போக்குகளிற்கிசைந்ததாக கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டது. மத்திய வங்கி சந்தைத் திரவத் தன்மை நிலைமைகளையும் முதலாந்தரச் சந்தையின் விளைவுகளையும் கருத்திற்கொண்டு ஓரிரவு வீதம் மற்றும் இரண்டாந்தரச் சந்தை வீதங்கள் என்பனவற்றைத் தொடர்ந்தும் தீர்மானித்தது. இதன்படி ஓரிரவு நேர்மாற்று மீள் கொள்வனவு வீதமும் 1995 இறுதியின் 16.50 சதவீதத்திலிருந்து முதலாம் காலாண்டுப்பகுதியில் 9.50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதைப்போன்றே 3 மாத உண்டியல்களின் கழிவு வீதமும் 1995 இறுதியின் 19.01 சதவீதத்திலிருந்து 1996 மாச்சு நடுப்பகுதியில் 10.98 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

மாச்சுக்குப்பின் வட்டி வீதங்களில் மேல் நோக்கிய அசைவு அவதானிக்கப்பட்டது. இது குறிப்பாக அதிகரித்த அரச கடன்பெறுகைகள் அதிகரித்த பாதுகாப்புச் செலவிலிருந்து உருவாகும் விரிவுபடுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையொன்றின் சந்தை எதிர்பார்ப்பு, சென்மதி நிலுவைப் பற்றாக்குறைகள் மற்றும் மின் வெட்டுக்களினால் பாதிக்கப்பட்ட நிறுவனங்களின் மேலதிக திரவத்தன்மை தேவைகள் என்பன காரணமாக ஏற்பட்டதாகும்.

திறைசேரி உண்டியல் வீதங்கள் யூன் இறுதியில் 15.21 – 15.66 சதவீத வீச்சிற்கிடையில் படிப்படியாக உயர்வடைந்தன. இப்போக்கிற்கு இசைவதாக அழைப்புப் பணச்சந்தை வீதங்களும் யூன் இறுதியில் 14.00 –17.50 சதவீதத்திற்கு இடைப் பட்ட வீச்சிற்கு அதிகரித்தன. அதேவேளை முதலாந்தரச் சந்தையில் விளைவுகள் அதிகரித்ததைத் தொடர்ந்து இரண்டாந்தரச் சந்தையில் மத்திய வங்கி கழிவு மற்றும் மீள் கழிவு வீதங்களும் சீராக்கம் செய்யப்பட்டன. இதன்படி யூன் இறுதியில் 3 மாத திறைசேரி உண்டில்கள் மீதான கழிவு மற்றும் மீள் கழிவு விளைவுகள் முறையே 14.96 சதவீதமாகவும் யூன் இறுதியில் 17.46 சதவீதமாகவும் விளங்கின. இதே போன்றே மீள்கொள்வனவு வீதம் மே இல் 11.75 சதவீதத்திற்க்கும் பின்னர் யூனில் 12.75 சதவீதத்திற்க்கும் உயர்வடைந்தது.

1996 இன் இரண்டாம் அரைப்பகுதியில் வட்டிவீதங்களில் எற்பட்ட படிப்படியான அதிகரிப்பு நவெம்பர் நடுப்பகுதிவரையில் தொடர்ந்தது, ஆனால் ஆண்டிறுதியில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. 3 மாத உண்டில்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு, சனவரியிலிருந்தான அதியுயர் 18.25 சதவீதத்திற்கு உயர்வடைந்த வேளையில் 12 மாதத்திற்கான வீதம் 17.98 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் அதன்பின்னர் திறைசேரி உண்டியல் வீதங்கள் வீழ்ச்சியுற்றதுடன் 1996 இறுதியில் 17.45 – 17.38 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சிற்கு குறைவடைந்தன. அழைப்புப் பணச்சந்தை வட்டிவீதங்கள் 12.00 – 35.00 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சிற்கு உயர்வடைந்து இரண்டாம் அரைப்பகுதியில் உயர்வான போக்கினைக் கொண்டிருந்தன. திறைசேரி உண்டியல் வீதங்களைப் போன்றே அழைப்பு வீதங்களிலும் திசெம்பரில் ஒரு கீழ்நோக்கிய அசைவு காணப்பட்டது. 1996 இன் இறுதியில் அழைப்பு வீதங்கள் 17.50 – 28.00 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் இருந்தன.

எனைய குறுங்கால வீதங்களின் போக்கினை ஒத்ததாக வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதமும் 1995 இறுதியின் 20.1 சதவீதத்திலிருந்து 1996 யூன் இறுதியில் 17.4 சதவீதத்தை அடைவதற்கு முன்னதாக மாச்சு இறுதியில 16.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. 1996 திசெம்பர் இறுதியில் நிறையேற்றப் பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதம் 20.2 சதவீதமாக விளங்கியது.

வீழ்ச்சியுறும் குறுங்கால வட்டி வீதங்களுக்கு இசைந்து செல்லும் வகையில் தேசிய சேமிப்பு வங்கியானது 12 மாத வைப்புக்கள் மீதான அதன் வைப்பு வீதங்களை 1995 திசெம்பர் இறுதியின் 16.00 சதவீதத்திலிருந்து 1996 மாச்சு 01 இலிருந்து 15 சதவீதத்திற்கு திருத்தியமைத்தது.

### நீண்டகால வீதங்கள்

சந்தையால் நிர்ணயம் செய்யப்படாவிட்டாலும் கூட அரச பிணையங்கள் (ரூபாக் கடன்கள்) நீண்டகால வீதங்களில் ஏற்பட்ட அசைவுகள் குறித்து சில எடுத்துக்காட்டல்களை வழங்கியது. 4–16 ஆண்டுகள் மற்றும் 5–7 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்தைக்கொண்ட ரூபாக் கடன்கள் 14 சதவீத வட்டிவீதங்களைக் கொண்டிருந்த வேளையில் 7 – 8 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத் தைக் கொண்ட ரூபாக்கடன்கள் 13 சதவீத வட்டி வீதத்துடன் வழங்கப்பட்டன. சந்தைக் கேள்விக்கு

இணையாக இரண்டு வருட ரூபாக் கடன் ஆண்டொன்றிற்கு 15.00 சதவீத வட்டியுடன் சந்தையில் விடப்பட்டது. இதற்குப் புறம்பாக பணிக்கப்பட்ட கொடுகடன்களிலிருந்து எழுந்த செலுத்தப்படாத கடன்களிற்குப் பதிலாக அரசு இரு அரச வங்கிகளுக்கும் முறிகளை வளங்கியது. இவை 10 ஆண்டுகள் முதிர்ச்சியினையும் 14 சதவீத நறுக்கு வீதத்தினையும் கொண்டிருந்தன. இதைப்போன்ற முறிகளை அரசு தேசிய சேமிப்பு வங்கிக்கும் கடந்தகால கொடு கடன் உதவு தொகைகள் மற்றும் நிருவாக ரீதியான கடன் பெறுகைகள் என்பன சார்பாக ஆண்டொன்றுக்கு 14 சதவீத வட்டியில் வழங்கியது.

விலைக் குறிப்பீடு செய்யப்பட்ட அரச கூட்டு நிலையங்கள் சிலவற்றால் நீண்டகால கடன் பத்திரங்களும் வழங்கப்பட்டன. வரையறுக் கப்பட்ட இலங்கை வணிக வங்கி 4 ஆண்டுகால தொகுதிக்கடன் பத்திரங்களை ஆண்டொன்றுக்கு 17.54 வீதத்தில் வழங்கியவேளையில் வரையறுக் கப்பட்ட வணிக் இன் கோர்ப்பரேசன் ஆண்டொன் றிற்கு 20 வீதம் கொண்ட 3 ஆண்டு தொகுதிக்கடன் பத்திரங்களின் பொது வழங்கலைக் கொண்டி ருந்தது. இந்த உயர் வட்டிவீதங்கள் தனியார் துறைக் கடன் பத்திரங்களுக்கு தொடர்பு வீதங்க ளாக பயன்படுத்தக்கூடிய அரச கடன் பத்திரங்க ளுக்கான சந்தையால் நிர்ணயம் செய்யப்பட்ட நடுத்தரகால வீதங்கள் இல்லாதிருப்பதனை பகுதியளவில் பிரதிபலித்துநின்றன.

சிறிய நடுத்தர கைத்தொழில் கடன்களுக் கான அதன் கடன் வழங்கல் வீதத்தினை மக்கள் வங்கி 18.5 சதவீதத்திலிருந்து மாச்சில் 16.0 சதவீதத்திற்கு 2.5 சதவீதப் புள்ளிகளால் குறைத்த வேளையில் இலங்கை வங்கி இக் **கடன்களுக்கான அதன் கடன் வழங்கல் வீதங்** களை 19.0 சதவீதத்திலிருந்து 17.5 சதவீதத்திற்கு 1.5 சதவீதப் புள்ளிகளால் குறைத்தது.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நீண்டகால கொடுகடன் நிறுவனங் களின் கடன் வழங்கும் வீதங்களும் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டதனாலோ அல்லது 1995 இன் அதே மட்டத்தில் பேணப்பட்டதனாலோ சில கீழ் நோக்கிய அசைவுகளைக் காட்டின. அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பனவற்றின் கடன் வழங்கும் வீதங்கள் முறையே 17.00 –22.00 சதவீதத்திற்கும் 17.00 – 20.00 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் மாற்றம் அடையாதிருந்தன. அதேவேளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் அதிகூடிய கடன் வழங்கல் வீதம் 1995 இறுதியின் 20.5 சதவீதத்திலிருந்து 1996 சனவரியில் 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட்ட வேளையில் கடன் வழங்கல் வீதங்களின் வீச்சு ஆண்டு முழுவதிலும் 10.00 –15.00 சதவீதத்திற்கும் இடையில் மாற்றம் டையாதிருந்தது. தேசிய அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் அதிகுறைந்த தொடர்கடன் வழங்கல் வீதம் 20.00 சதவீதத்திலிருந்து 1996 இல் 16.00 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அதே வேளை தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வழங்கல் வீதங்கள் முன்னைய ஆண்டின் 12.5 –26.0 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சுடன் ஒப்பிடுகையில் 1996 இல் 11.00 – 26.00 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் இருந்தன.

## 10.4 வர்த்தக வங்கித்தொழில்

வேளாண்மை மற்றும் கைத்தொழில் வெளியீடு, சுற்றுலா என்பனவற்றில் ஏற்பட்ட தற்காலிக வீழ்ச்சி தொழிற்படாக் கடன்களின் ஓரளவு நிச்சயமற்ற நிலைமையில் வர்த்தக வங்கிகள் தங்களது கடன் வழங்கல் தொழிற்பாடு களில் அதிக எச்சரிக்கையாயிருந்தன. தங்களது சொத்துப்பட்டியல்களை குறைந்த இடர்நேர்வு சொத்துக்களான திறைசேரி உண்டியல்களுக்கும் (இது இவ்வாண்டில் 34 சதவீத வளர்ச்சியைக் காட்டியது). அரச பிணையங்களுக்கும் மாற்றிய வேளையில் மேலதிகப் பற்றுக்கள் பெருமளவு **மாற்றம் எதுவுமின்றிப் பேணப்பட்ன (2 சதவீத** வளர்ச்சி மட்டுமே ). வர்த்தக வங்கித் தொழில் முறையின் சொத்துக்களில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பினால் திரவச் சொத்துக்களுக்கு செய்யப் பட்ட ஒதுக்கீடானது 1995 இன் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 26 சதவீதமாக விளங்கியது. வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள் 1996 இல் 16.2 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் திறைசேரி உண்டியல்களிலான முதலீடுகள் 1995 ரூ. 41,860 இலட்சம் குறைப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 40,660 இலட்சத்தால் அதிகரித்தன.

அட்டவணை **10.4**
வர்த்தக வங்கிகளின் தெரிந்தெடுக்கப்பட்ட
சொத்துக்களும் பொறுப்புக்களும்
*தொகை ப.இ. ரூபாய்களில்*

| விடயம் | மாற்றம் | | | |
|---|---|---|---|---|
| | 95 திசெம்/ 94 திசெம் | | 96 திசெம்/ 95 திசெம் | |
| | தொகை (ரூ.ப.இ) | சதவீதம் | தொகை (ரூ.ப.இ) | சதவீதம் |
| சொத்துக்களின் வகை | | | | |
| 1. திரவச் சொத்துக்கள் | 5,525 | 7.1 | 14,059 | 16.8 |
| கையிலுள்ள பணம் | 312 | 7.5 | 2,429 | 54.1 |
| மத்திய வங்கியிலிருந்து வரவேண்டியவை | 7,180 | 30.2 | 3,310 | 10.7 |
| கையிலுள்ள வெளிநாட்டு நாணயம் | -2,401 | -9.9 | 411 | 1.9 |
| திறைசேரி உண்டியல்கள் | -3,591 | -23.7 | 3,978 | 34.4 |
| வர்த்தக உண்டியல்கள் | 4,025 | 37.4 | 3,931 | 26.6 |
| உள்நாட்டுஉண்டியல்கள் | -17 | -7.1 | -80 | -36.6 |
| இறக்குமதி உண்டியல்கள் | 3,542 | 65.3 | 3,416 | 38.1 |
| ஏற்றுமதி உண்டியல்கள் | 499 | 9.8 | 594 | 10.6 |
| 2. முதலீடு | -6,737 | -25.9 | 7,686 | 39.9 |
| திறைசேரி உண்டியல்கள் | -3,591 | -23.7 | 3,978 | 34.4 |
| அரச பிணைகள் | -595 | -44.2 | 88 | 11.7 |
| ஏனைய முதலீடுகள் | 2,551 | -26.8 | 3,620 | 52.0 |
| 3. மொத்தக் கடன்களும் முற்பணங்களும் | 43,772 | 30.6 | 15,430 | 8.3 |
| கடன்கள் | 21,474 | 24.9 | 10,075 | 9.4 |
| மேலதிகப் பற்றுக்கள் | 18,272 | 39.5 | 1,424 | 2.2 |
| வர்த்தக உண்டியலக்ள் | 4,025 | 37.4 | 3,931 | 26.6 |
| 4. நிலையான மற்றும் ஏனைய சொத்துக்கள் | 7,374 | 14.7 | 24,459 | 42.5 |
| வைப்புக்களின் வகை | | | | |
| 1.மூலதனக் கணக்குகள் | 5,181 | 18.3 | 5,778 | 17.3 |
| 2.மொத்த வைப்புக்கள் | 37,642 | 19.8 | 33,675 | 14.8 |
| கேள்வி வைப்புக்கள் | 868 | 2.1 | 6,291 | 14.8 |
| தவணை சேமிப்பு வைப்புக்கள் | 36,774 | 24.7 | 27,384 | 14.7 |
| 3.எடுப்பனவுகள் | 4,351 | 34.3 | 11,152 | 65.4 |
| உள்நாட்டு எடுப்பனவுகள் | 3,668 | 34.6 | 11,949 | 83.8 |
| வெளிநாட்டு எடுப்பனவுகள் | 683 | 32.5 | -797 | -28.6 |
| 4 ஏனைய பொறுப்புக்கள் | 7,272 | 14.7 | 3,678 | 6.5 |
| மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள் | 54,447 | 19.4 | 54,283 | 16.2 |

*மூலம் இலங்கை மத்திய வங்கி*

இறுக்கமான நாணயக் கொள்கையின் தொடர்ச்சி, வரட்சி மற்றம் மின்வெட்டுக்கள் காரணமாக வேளாண்மை வெளியீடுகளிலும் கைத்தொழில் வெளியீடுகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் பாதுகாப்பு பிரச்சினை என்பனவற்றிற்கு மத்தியிலும் வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் 19 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் 16.2 சதவீதத்தால் அதிகரித்தன. அதேவேளை திரவச் சொத்துக்கள் 1995 இன் 7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 16.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இதன் விளைவாக கேள்வி வைப்புக்கள் திரவத்தன்மை விகிதம்1995 இறுதியின் 196 சதவீதத்திலிருந்து 1996 இறுதியில் 200 சதவீதமாக அதிகரித்தது.

## சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் அமைப்பு

வர்த்தக வங்கிகளின் மொத்த மூலவளங்கள் 1995 இன் ரூபா 437,720 இலட்சம் (19 சதவீதம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூபா 542,830 இலட்சம் (16.2 சதவீதம்) உயர்வடைந்தன. 1996 நடுப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் மந்தம் அடைந்ததனைத் தொடர்ந்து கடன்களினதும் முற்பணங்களினதும் விரிவாக்கத்திலும் குறைவொன்று ஏற்பட்டது. திருப்பிச் செலுத்தப்படாத பணிக்கப்பட்ட கொடுகடன்களுக்குப்பதிலாக 1996 ஒத்தோபரில் இரு அரச வங்கிகளுக்கும் வழங்கப்பட்ட அரச முறிகளும் சொத்துக்களை வகைப்படுத்தலில் தாக்கத்தினைக் கொண்டிருந்தன. இதன் விளைவாக மொத்த மூலவளங்களில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் பங்கு 1995 இன் 56 சதவீதத்திலிருந்து 1996 இல் 51.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. (முறிவழங்கல் நீங்கலான இவ் விகிதம் 56.8 சதவீதமாக விளங்கியது). வர்த்தக வங்கிகளின் கடன்களினதும் முற்பணங்களினதும் மொத்தப் பெறுமானம் 1995 இன் 31 சதவீதத்துடன் (ரூ.437,720 இலட்சம்) ஒப்பிடுகையில் 1996 இல் 8.3 சதவீத (ரூ.154,300 இலட்சம்) மிதமான அதிகரிப்பொன்றினைப் (முறிவழங்கல் நீங்கலாக 18.5 சதவீதம்) பதிவு செய்தது. இது இறக்குமதி உண்டியல்களுக்கு எதிராக வழங்கப்பட்ட வசதிகளின் பேரிலான 38.1 சதவீத (ரூ.34,160 இலட்சம்) அதிகரிப்பு, ஏற்றுமதி உண்டியல் நிதியிடலின் 10.6 சதவீத (ரூ.5,940 இலட்சம்) அதிகரிப்பு மற்றும் ஏனைய கடன்களின் 9.4 சதவீத (ரூ. 100,750 இலட்சம்) அதிகரிப்பு என்பன வற்றை உள்ளடக்கியிருந்தது.

பொறுப்புக்கள் பக்கத்தில் வைப்புப் பொறுப்புக்கள் வங்கிகளுக்கிடையேயான உள்நாட்டுக்கடன் பெறுகைகள், செலுத்தப்பட்ட மூலதனம், ஒதுக்கங்களும் பகிரப்படாத இலாபங் களும் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் என்பன வற்றில் பாரிய அதிகரிப்புக்கள் பதிவு செய்யப் பட்டன. 1996 இல் மொத்த வைப்புக்கள் 14.8

சதவீதத்தால் (ரூ.336,750 இலட்சம்) அதிகரித்தமைக்கு கேள்வி வைப்புக்கள், தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் முறையே 14.8 சதவீதத்தினாலும் (ரூ.62,910 இலட்சம்) 14.7 சதவீதத்தினாலும் ரூ. 273,840 இலட்சம் அதிகரித்தமை வருமானத்தின் மெதுவான வளர்ச்சியின் விளைவாக வைப்புத்திரட்டலில் ஏற்பட்ட சிறியளவிலான குறைப்பினைப் பிரதிபலித்து மொத்த மூலவளங்களின் சதவீதமாக மொத்த வைப்புக்கள் 1995 இன் 69 சதவீதத்திலிருந்து 1996 இல் 67 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றன. வங்கிகள் அவற்றினது குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளுக்கு வெளிநாட்டுக்கடன் பெறுகைகளிலும் பார்க்க பெரும்பாலும் உள்நாட்டு வங்கிகளுக்கிடையேயான கடன் பெறுகைகளிலேயே தங்கியிருந்தன. வங்கிகளுக்கிடையேயான உள்நாட்டுக் கடன்பெறுகைகள் 83.8 சதவீதத்தால் (ரூ. 119,490 இலட்சம்) அதிகரித்த வேளையில் வெளிநாட்டு கடன்பாடுகள் இவ்வாண்டில் 28.6 சதவீதத்தினால் (ரூபா 7,970 இலட்சம்) வீழ்ச்சியுற்றன.

செலுத்தப்பட்ட மூலதனம், ஒதுக்கு நிதியங்கள் பகிரப்படாத இலாபங்கள் என்பன 1995 இன் 18.3 சதவீத (ரூ. 51,810 இலட்சம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் 17.3 சதவீதத்தால் (ரூ. 57,780 இலட்சம்) அதிகரித்தன. மொத்தச் சொத்துக்களுக்கான மூலதனம், ஒதுக்குகள், பகிரப்படாத இலாபங்கள் என்பனவற்றின் விகிதம் இவ்வாண்டில் மாற்றமின்றி (ஏறத்தாழ 10 சதவீதம்) இருந்தது.

## நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும்

நிதிகளின் மொத்த தேறிய கிடைப்பனவு 1995 இன் ரூ. 134,780 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 209,450 இலட்சத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பின் குறிப்பிடத்தக்க பாகத்திற்கு அரசினால் அரச வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நீண்டகால முறிகளே காரணமாகும்.(முறிகளின்றி 1996 இல் நிதியத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 85,910 இலட்சத்தை எட்டியது). 1996 இல் வங்கித் தொழில் துறைக்கு நிதிகளை அளித்த பிரதான வழங்குநர்களாக உள்நாட்டுத் தனியார்துறையும் வெளிநாட்டுத் துறையும் விளங்கிய வேளையில் கூட்டுறவு அமைப்புக்களும் அரச கூட்டுத்தாபனங்களும் குறிப்பிடத்தக்க தொகையை வழங்கின. வங்கி மூலங்களின்

அட்டவணை **10.5**
வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடுகளும்

தொகை ப.இ. ரூபாய்களில்

| வகை | மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|
| | 1995 | | 1996 | |
| | மூலங்கள் | பயன்பாடுகள் | மூலங்கள் | பயன்பாடுகள் |
| 1. அரசதுறை | **595** | | | **2,471** |
| அரச பிணைகளின் உடமைகள் | 4,186 | | | 4,066 |
| வைப்புக்கள் | 193 | | 3,419 | |
| இறக்குமதி உண்டியல்கள் | | 2,548 | | 1,631 |
| குறுங்காலக் கொடுகடன் | | 857 | | 619 |
| மேலதிகப் பற்றுக்கள் | | 380 | 427 | |
| 2. மத்திய வங்கி | | **4,774** | | **5,227** |
| கடன்பாடுகள் | | 428 | 425 | |
| ஒதுக்குகள் | | 7,180 | | 3,310 |
| மத்திய வங்கிப் பிணைகளிலான முதலீடுகள் | 3,146 | | 88 | |
| கையிலுள்ள பணம் | | 312 | | 2,429 |
| 3. அரசு கூட்டுத்தாபனங்கள் | **35** | | **383** | |
| வைப்புகள் | 3,399 | | 1,794 | |
| முற்பணங்கள் | | 3,363 | | 1,411 |
| 4. கூட்டுறவுகள் | | **1,832** | **1,639** | |
| வைப்புக்கள் | | 434 | | 835 |
| முற்பணங்கள் | | 1,398 | 2,474 | |
| 5. ஏனைய உள்நாட்டுத் தனியார்துறை | | **6,873** | **12,598** | |
| வைப்புக்கள்(ஆ) | 31,303 | | 23,721 | |
| உள்நாட்டு உண்டியல்கள் | | 449 | | 1,025 |
| இறக்குமதி உண்டியல்கள் | | 471 | | 693 |
| மேலதிகப் பற்றுக்கள் | | 15,956 | | 3,483 |
| கடன்கள் | | 20,705 | | 8,329 |
| பிணைகளிலும் முறிகளிலும் முதலீடு | | 595 | | 3,708 |
| தொகுதிக் கடன்கள் | | | 6,115 | |
| 6. வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள் | **2,005** | | **2,169** | |
| உள்நாட்டு வங்கிகளுடனான நிலுவை | | 2,090 | | 1,012 |
| உள்நாட்டு வங்கிகளுடனான வைப்புகளும் கடன்பாடுகளும் | 4,095 | | 3,181 | |
| 7. வெளிநாட்டுத்துறை | **6,372** | | **4,156** | |
| கடன்பாடுகள் | 683 | | | 797 |
| வைப்புக்கள் | 3,786 | | 6,057 | |
| வெளிநாட்டு நிலுவைகள் ஏற்றுமதிஉண்டியல்கள் உட்பட | 1,904 | | | 1,103 |
| 8. ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும் | **4,471** | | | **13,248** |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 5,182 | | 5,778 | |
| நிலையான ஒதுக்குகளும் | | 1,342 | | 1,496 |
| நீண்டகால அரச முறிகள் | | | | 19,392 |
| மீளமைப்பு முறிகள் | | | | |
| ஏனைய சொத்துக்கள் | | 6,032 | | 3,571 |
| ஏனைய பொறுப்புக்கள் | 6,663 | | 5,433 | |
| மொத்த தேறிய மூலங்கள் /பயன்பாடுகள் | **13,478** | **13,478** | **20,945** | **20,945** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தடித்த எழுத்திலுள்ள எண்தொகைகள் ஒவ்வொரு துறைக்குமான தேறிய மூலங்களை அல்லது தேறியபயன் பாட்டினை அவை பொருந்துமிடங்களைப் பொறுத்துக் குறிக்கின்றன.

(ஆ) சிறப்புச் சேமிப்புத் திட்டத்தின் கீழ் இரு அரச வங்கிகளாலும் சேகரிக்கப்பட்ட நீண்டகால வைப்புக்களை உள்ளடக்கும்

அட்டவணை **10.6**

நோக்கங்களின்படியும் முதிர்ச்சிக் காலங்களின்படியும் வர்த்தக வாங்கிகளின் முற்பணங்கள்(அ)

| வகை | குறுங்காலம் | | நடுத்தரக்காலம் | | நீண்ட காலம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) தொகை ரூ.ப.இ | (2) (7) இன்% ஆக (1) | (3) தொகை ரூ.ப.இ | (4) (7) இன்% ஆக (3) | (5) தொகை ரூ.ப.இ | (4) (7) இன்% ஆக (5) | (7) தொகை ரூ.ப.இ | (8) மொத்தத் தின் சதவீத மாக (7) |
| 1. வர்த்தகம் | | | | | | | | |
| செத்தெம்பர் 1995 | 58,330 | 76.0 | 13,384 | 17.4 | 5,034 | 6.6 | 76,749 | 43.7 |
| திசெம்பர் 1995 | 60,946 | 75.7 | 14,802 | 18.4 | 4,783 | 5.9 | 80,530 | 43.8 |
| செத்தெம்பர் 1996 | 69,658 | 78.5 | 15,089 | 17.0 | 3,981 | 4.5 | 88,728 | 43.8 |
| 2. நிதியியல் | | | | | | | | |
| செத்தெம்பர் 1995 | 5,428 | 67.0 | 2,045 | 25.2 | 629 | 7.8 | 8,102 | 4.6 |
| திசெம்பர் 1995 | 3,994 | 50.5 | 3,194 | 40.4 | 720 | 9.1 | 7,908 | 4.3 |
| செத்தெம்பர் 1996 | 4,975 | 58.7 | 2,709 | 32.0 | 793 | 9.4 | 8,476 | 4.2 |
| 3. வேளாண்மை | | | | | | | | |
| செததெம்பர் 1995 | 7,248 | 69.2 | 2,423 | 23.1 | 802 | 7.7 | 10,473 | 6.0 |
| திசெம்பர் 1995 | 7,312 | 62.9 | 3,480 | 30.0 | 826 | 7.1 | 11,618 | 6.3 |
| செத்தெம்பர் 1996 | 7,178 | 65.9 | 2,753 | 25.3 | 959 | 8.8 | 10,890 | 5.4 |
| 4. கைத்தொழில் (ஆ) | | | | | | | | |
| செத்தெம்பர் 1995 | 17,833 | 72.9 | 3,988 | 16.3 | 2,639 | 10.8 | 24,460 | 13.9 |
| திசெம்பர் 1995 | 17,145 | 71.5 | 4,186 | 17.5 | 2,640 | 11.0 | 23,971 | 13.0 |
| செத்தெம்பர் 1996 | 18,112 | 65.2 | 6,508 | 23.4 | 3,144 | 11.3 | 27,764 | 13.7 |
| 5. சுற்றுலா | | | | | | | | |
| செத்தெம்பர் 1995 | 1,441 | 50.6 | 557 | 19.5 | 853 | 29.9 | 2,851 | 1.6 |
| திசெம்பர் 1995 | 1,368 | 48.1 | 665 | 23.4 | 813 | 28.6 | 2,846 | 1.5 |
| செத்தெம்பர் 1996 | 1,753 | 54.7 | 625 | 19.5 | 824 | 25.7 | 3,202 | 1.6 |
| 6. வீடமைப்பு | | | | | | | | |
| செத்தெம்பர் 1995 | 4,323 | 21.2 | 6,138 | 30.1 | 9,899 | 48.6 | 20,359 | 11.6 |
| திசெம்பர் 1995 | 4,688 | 21.1 | 7,143 | 32.2 | 10,349 | 46.7 | 22,180 | 12.1 |
| திசெம்பர் 1996 | 5,525 | 21.4 | 9,507 | 36.8 | 10,800 | 41.8 | 25,832 | 12.8 |
| 7. நுகர்வு | | | | | | | | |
| செத்தெம்பர் 1995 | 7,655 | 57.2 | 2,959 | 22.1 | 2,772 | 20.7 | 13,386 | 7.6 |
| திசெம்பர் 1995 | 8,356 | 60.3 | 2,669 | 19.3 | 2,822 | 20.4 | 13,847 | 7.5 |
| செத்தெம்பர் 1996 | 8,847 | 58.3 | 3,216 | 21.2 | 3,122 | 20.6 | 15,184 | 7.5 |
| 8. ஏனைய கடன்கள் | | | | | | | | |
| செத்தெம்பர் 1995 | 12,379 | 63.7 | 5,596 | 28.8 | 1,447 | 7.4 | 19,422 | 11.0 |
| திசெம்பர் 1995 | 13,701 | 65.1 | 5,758 | 27.4 | 1,588 | 7.5 | 21,047 | 11.4 |
| செத்தெம்பர் 1996 | 14,192 | 63.6 | 5,903 | 26.5 | 2,210 | 9.9 | 22,304 | 11.0 |
| 9. மொத்தம் | | | | | | | | |
| செத்தெம்பர் 1995 | 114,637 | 65.2 | 37,090 | 21.1 | 24,074 | 13.7 | 175,800 | 100.0 |
| திசெம்பர் 1995 | 117,509 | 63.9 | 41,897 | 22.8 | 24,541 | 13.3 | 183,946 | 100.0 |
| செத்தெம்பர் 1996 | 130,239 | 64.4 | 46,307 | 22.9 | 25,833 | 12.8 | 202,379 | 100.0 |

(அ) முற்பணங்கள் சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி ஏனைய கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

(ஆ) பொறியியல், கட்டடவாக்கம், சுரங்கம் அகழ்தல், கடற்றொழில் ஆகியதுறைக்கு வழங்கப்பட்ட முற்பண்ங்களை உள்ளடக்கும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பிரதான பயன்பாட்டாளராக மத்திய வங்கியும் அரச துறையும் விளங்கின. நியதி ஒதுக்குக ளினூடாக மத்திய வங்கி நிதிகளை ஈர்த்துக் கொண்டது.

நிதிகளின் பிரதான பயன்பாட்டாளராக (அதாவது, கூட்டுத்தாபனங்கள் கூட்டுறவு அமைப் புக்கள் நீங்கலாக) விளங்கிய ஏனைய உள்நாட்டு தனியார்துறை கடந்த சில ஆண்டு அனுபவத்திற்கு மாறாக 1996 இல் வங்கித்தொழில் துறைக்கு நிதி வழங்கும் பிரதான தேறிய மூலமாக உருவெடுத் தது. இந்த மாற்றமானது முதன்மையாக கடன்க ளுக்கும் மேலதிகப் பற்றுக்களுக்குமென ஈர்த்துக் கொண்ட நிதிகளுக்கு ஏற்பட்ட மிகக்குறைந்த அதிகரிப்பின் விளைவால் நிகழ்ந்ததாகும். வங்கிகள் அவற்றினது கடன் வழங்கல் தொழிற்பாடுகளில் மிகுந்த எச்சரிக்கையாய் இருந்தமையே இக்குறைக் கப்பட்ட ஈர்ப்புக்கான பிரதான ஏதுக்காரணி யாகும். ஏனைய உள்நாட்டுத்தனியார்துறை 1995 இல் வங்கித்தொழில் துறையிலிருந்தான அதன் ரூ. 68,730 இலட்சம் ஈர்த்தலுக்கு மாறாக 1996

இல் வங்கித்தொழில் துறைக்கு ரூ. 125,980 இலட்சத்தினை வழங்கியது.

1995 இனைப் போன்றே வெளிநாட்டுத்துறை 1996 இல் மூலவளங்களின் தேறிய வழங்குநராக விளங்கியது. 1995 இன் வைப்புக்களினதும் வெளிநாட்டு கடன்பெறுகைகளினதும் ஊடாக ஏற்பட்ட ரூ. 63,720 இலட்சம் உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 1996 இல் வர்த்தக வங்கிகளுடனான வெளிநாட்டு வைப்புக்களின் அதிகரிப்புக்களூடாக ரூ. 41,560 இலட்சம் கொண்ட தேறிய உட்பாய்ச்சல் ஏற்பட்டது. எனினும், கடன்பாடுகள் மற்றும் ஏற்றுமதி உணடியல்களை உள்ளடக்கிய வெளிநாட்டு உண்டியல்கள் என்பன 1995 இல் வழங்குநர்களாக இருந்தபோதிலும் 1996 இல் நிதிகளின் பயன்பாட்டாளர்களாக விளங்கின.

கூட்டுறவு நிலையங்களும், அரச கூட்டுத் தாபனங்களும் முறையே ரூ. 16,390 இலட்சத்தினையும் ரூ. 3,830 இலட்சத்தினையும் வழங்கி தேறிய மூலவளங்களின் அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தன. இவ்விடயத்திலும்கூட அரச முறிகளின் வழங்கல் மூலவளங்களின் கிடைப்பனவில் தாக்கத்தினைக் கொண்டிருந்தது. நெல் சந்தைப் படுத்தும் சபையின் நெல் கொள்வனவு நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக வங்கிகள் கொடுகடன் வழங்கியதால் 1995 இல் வர்த்தக வங்கி நிதிகளின் தேறிய பயன்பாட்டாளராக கூட்டுத் துறை விளங்கியது. (வங்கிகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களானது 1995 இலும் 1996 இலும் நிதிகளின் மூலமாக விளங்கின).

1995 இல் நிதிகளின் மூலங்களாக இருந்ததற்கு மாறாக பயன்பாட்டு பக்கத்தில் வர்த்தக வங்கிகளின் ஏனைய சொத்துக்களும் ஏனைய பொறுப்புக்களும் 1996 இல் ரூபா132,480 இலட்சம் ஈர்த்துக்கொண்டன. அரசு உத்தரவாதமளித்த கடன்களுக் கெதிராக 1996 ஒத்தோபரில் இரு அரச வங்கிகளுக்கும் வழங்கப்பட்ட நீண்டகால முறிகள் வங்கிகளின் ஏனைய சொததுக்களில் அதிகரிப்பினை ஏற்படுத்தியது. வைப்புப் பொறுப்புக்களுக் கெதிராக பேணப்படவேண்டிய நியதி ஒதுக்குகள் வாயிலான வர்த்தக வங்கிகளிடமிருந்து ரூ,33,100 இலட்சம் பெறுமதியான நிதிகளை மத்திய வங்கி ஈர்த்தது. அதிகரித்த அரசிறைப் பற்றாக்குறையின் காரணமாக அரச பிணையங்கள், இறக்குமதி உண்டியல்கள் மற்றும் குறுங்கால கொடுகடன்கள் வாயிலாக ரூ.57,580 இலட்சம் பெறுமானங்கொண்ட வர்த்தக வங்கி நிதிகளை அரசதுறை ஈர்த்தது. எனினும், இத்துறை அரச வைப்புக்களாக ரூ. 34,190 இலட்சத்தினைப் பங்களிப்புச் செய்தது. ஆகையால் தேறிய அடிப்படையில் வங்கித்தொழில் துறைக்கு அரசதுறை 1996 இல் ரூ. 24,710 இலட்சத்தினை ஈர்த்தது. இதற்கு மாறாக 1995 இல் அது ரூ. 5,950 இலட்சம் பெறுமதியான நிதிகளை வழங்கியிருந்தது.

### வாத்தக வங்கிகளின் கடன்களும் முற்பணங்களும்[1]

தனியார் துறை, அரச தொழில் முயற்சிகள் மற்றும் கூட்டுறவு நிறவனங்கள் ஆகியவற்றிற்கான வாத்தக வங்கிகளின் கடன்களும் முற்பணங்களும் 1995 செத்தெம்பர் இறுதியுடன் முடிவடைந்த பன்னிரண்டு மாதங்களுக்கான 23.2 சதவீத அதிகரிப்புடன் (ரூ.265,790 இலட்சம்) ஒப்பிடுகையில் 1996 செத்தெம்பருடன் முடிவடைந்த பன்னிரண்டுமாதங்களுக்கு 15.1 சதவீதம் (ரூ. 265,790 இலட்சம்) அதிகரிப்பினைப் பதிவு செய்தன. மொத்தக் கொடுகடனில் குறுங்கால மற்றும் நடுத்தர கால கொடுகடனின் பங்கு 1995 இன் 86.3 சதவீதத்திலிருந்து1996 இல்87.3 சதவீதத்திற்கு (ரூபா 721,400 இலட்சம்) உயர்வடைந்த வேளையில் நீண்ட கால முற்பணங்களின் பங்கு 1996 இறுதியில் 12.7 சதவீதமாக (ரூ. 258,330 இலட்சம்) விளங்கியது.

கடந்தகால போக்கினைத் தொடர்ந்து வர்த்தக வங்கி கடன் வழங்கத்தக்க நிதியத்தின் பெரும்பகுதி வர்த்தக நடவடிக்கைகளினால் ஈர்த்துக் கொள்ளப்பட்டன. மொத்தத் தொகையில் இது 44 சதவீதமாகும். வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான கொடுகடன் 1996 செத்தெம்பரில் முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில் 15.6 சதவீதத்தினால் (ரூ. 119,800 இலட்சம்) உயர்வடைந்தது. வர்த்தகவங்கிக் கொடுகடனின் பொதுவான நன்மைக்கு இசைந்ததாக வர்த்தக நடவடிக்கைகளுக்கான கொடுகடனில் 78.5 சதவீதமானவை குறுங்கால வசதிகள் வடிவிலிருந்தன. வர்த்தக நடவடிக்கைகளுக்கான நடுத்தரகால, நீண்டகால

1 இப் பகுப்பாய்வு 1996 இன் முதல் மூன்று காலாண்டுகளுக்கான தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

கொடுகடனின் பங்கு 1996 காலப்பகுதியில் மேலும் வீழ்ச்சியுற்றது.

வர்த்தக வங்கிகளிடமிருந்தான கைத் தொழில் நோக்கங்களுக்கான கொடுகடன் 1996 செத்தெம்பருடன் முடிவடைந்த 12 மாதகாலப் பகுதியில் 13.5 சதவீதத்தால் (ரூ.33,040 இலட்சம்) உயர்வடைந்த வேளையில் நடுத்தரகால மற்றும் நீண்டகால கொடுகடன் உயர்வடைந்தவேளையில் மெத்தக்கொடுகடனின் விகிதமொன்றாக 1995 செத்தம்பரில் 13.7 சதவீதத்திலிருந்து (ரூ.244,600 இலட்சம்) சிறிய அளவால் வீழ்ச்சியுற்றது. கைத்தொழில் நோக்கங்களுக்கான குறுங்கால கொடுகடன் 1996 இல் வீள்ச்சியடைந்த வேளையில் நடுத்தர மற்றும் நீண்ட கால கொடு கடன்கள் உயர்வடைந்தன.

வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தித் துறைக்கான கொடுகடன் 1995 செத்தெம்பருடன் முடிவடைந்த ஆண்டின் 4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1996 செத்தெம்பரில் முடிவடைந்த 12 மாதங்களில் 27 சதவீதத்தினால் வளர்ச்சிய டைந்தது. வெளிநின்ற மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்திக் கொடுகடனின் பங்கு 1995 செத் தெம்பருடன் முடிவடைந்த ஆண்டின் 11.6சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1996 செத்தெம்பரி றுதியில் 12.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.

நுகர்வு நோக்கங்களுக்கான கொடுகடனின் வளர்ச்சி 1996 இல் மேலும் வீழ்ச்சியுற்றதுடன் அனைத்துக் கொடுகடனிலும் பார்க்க குறைந்த வேகத்திலேயே வளர்ச்சியடைந்தது. இவ்வகைக் கான கொடுகடன் 1995 இன் 22 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996இல் 1304 சதவீதத்தினால் மட்டுமே உயர்வடைந்தது. மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களில் நுகர்வுக்கட்டனங்களின் பங்கானது 1995 செத்தெம்பர் இறுதியின் 7.6 சதவீதத்திலிருந்து 1996 செத்தெம்பர் இறுதியில் 7.5 வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் வேளாண்மை, நிதியியல் மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கான கொடுகடன் 1996 செத்தெம்பரில் முடிவடைந்த 12 மாதகாலப் பகுதியில் முறையே 4.0 சதவீதமாகவும் (ரூ.4,170இலட்சம்) 4.6 வீதமாகவும் (ரூ. 3,740 இலட்சம்) 12.3 சதவீத மாகவும் (ரூ. 3,510 இலட்சம்) அதிகரித்து.

அனைத்துக் கடன்கள் முற்பணங்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வட்டிவீதம்

**அட்டவணை 10.7**
**பிணைகளின்படி முற்பணங்கள் (அ)**

| விடயம் | 1995 செத்தெம்பர் 30 | | 1995 திசெம்பர் 31 | | 1996 செத்தெம்பர் 30 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (ரூ.ப.இ) | மொத்தத் தின் % | தொகை (ரூ.ப.இ) | மொத்தத் தின் % | தொகை (ரூ.ப.இ) | மொத்தத் தின் % |
| 1. ஆவணஉண்டியல்கள் | 5,706 | 3.2 | 4,943 | 2.7 | 6,038 | 3.0 |
| 2. அரச பிணைகள் | 6,237 | 3.5 | 6,809 | 3.7 | 9,007 | 4.5 |
| 3. கூட்டுப்பங்கு நிலையங்களின் பங்குகள் முறிகள் தொகுதிக் கடன்கள் ஆயுடகாப்புறுதியின் காசுப் பெறுமதியை உள்ளடக்கிய விடயங்கள் | 3,162 | 1.8 | 3,012 | 1.6 | 2,906 | 1.4 |
| 4. நிலையான, சேமிப்பு மற்றும் காசுவைப்பு, வைப்புச்சான்றிதழ்கள் | 15,541 | 8.8 | 16,067 | 8.7 | 18,406 | 9.1 |
| 5. வர்த்தக இருப்புக்கள் | 15,140 | 8.6 | 14,688 | 8.0 | 16,493 | 8.1 |
| 6. அசைவற்றசொத்து, பொறித்தொகுதி, பொறி | 43,180 | 24.6 | 45,391 | 24.7 | 50,476 | 24.9 |
| 7. தனியாள் உத்தரவாங்கள், வாக்குறுதிப்பத்திரங்கள் | 24,680 | 14.0 | 27,902 | 15.2 | 32,005 | 15.8 |
| 8. நம்பிக்கைப் பற்றுச்சிட்டுக்கள் | 10,197 | 5.8 | 10,240 | 5.6 | 10,510 | 5.2 |
| 9. தவணைக் கொள்வனவு உடன்படிக்கைள் | 1,051 | 0.6 | 2,085 | 1.1 | 1,991 | 1.0 |
| 10. உழவுப் பொறிகளும், உந்து ஊதிகளும் | 2,220 | 1.3 | 2,495 | 1.4 | 2,935 | 1.5 |
| 11. ஏனைய பிணைகள் | 27,417 | 15.6 | 26,501 | 14.4 | 28,731 | 14.2 |
| 12. பிணைகளற்றவை | 21,268 | 12.1 | 23,814 | 12.9 | 22,880 | 11.3 |
| மொத்தம் | 175,800 | 100.0 | 183,946 | 100.0 | 202,379 | 100.0 |

(அ) சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்களும் உத்தரவாத விலைத்திட்டத்தின்ன கொள்வனவுகளை நிதியிடுதற்காக வழங்கப்பட்ட முற்பணங்களும் நீங்கலாக

மூலம்: இலங்கை மத்திய வங்கி

*1995 இறுதியின் ஆண்டுக்கு 20.7 சதவீதத்திலிருந்து 1996 செத்நெம்பர் இறுதியில் ஆண்டுக்கு 21.0 சதவீதமாக உயர்வடைந்தது. மொத்தக் கடன்கள் முற்பணங்களில் 36 சதவீதமானவை 20 சதவீதத் திற்கும் கீழான வட்டி வீதங்களையும், 44 சத வீதமானவை 20 – 25 சதவீத வீச்சிலான வட்டி வீதங்களையும் 9 சதவீதமானவை 25 சதவீதத்திற்கு மேற்பட்ட ஆனால் 30 சதவீதத்திற்கு குறைவான வட்டி வீதங்களையும் மற்றும் 11 சதவீதமானவை 30 சதவீதத்திற்கு மேற்பட்ட வட்டிவீதங்களையும் கொண்டிருந்தன.*

*பிணையங்களின் நோக்கப்பாட்டிலிருந்து நோக்கும்போது மொத்தக் கடன்கள் முற்பணங் களில் 89 சதவீதமானவை காப்பளிக்கப்பட்டி ருந்தன. மொத்த கடன்கள், முற்பணங்களில் 25 சதவீதமான அசையாச் சொத்துக்கள் பொறிகள், எந்திரங்கள் என்பனவற்றிற்கெதிராக வழங்கப் பட்ட வேளையில 16 சதவீதமானவை தனிப்பட்ட உத்தரவாதங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்களால் காப்புச் செய்யப்பட்டிருந்தன.*

## 10.5 மத்திய வங்கித் தொழில்

*சென்மதி நிலுவையில் ஏற்பட்ட திரண்ட பற்றாக்குறையினைப் பிரதிபலித்து மத்திய வங்கி யின் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் 1996 இல் வீழ்ச்சியடைந்தன. எனினும், மத்திய வங்கியிட மிருந்தான அதிகரித்த அரச கடன் பெறுகை களின் முதன்மைக் காரணத்தினால் உள்நாட்டுச் சொத்துக்கள் அதிகரித்து 1995 இன் 11.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மொத்தச் சொத்துக் களின் 4.6 சதவீத பொதுவானதொரு அதிகரிப் பிற்கு வழிவகுத்தன. பொறுப்புக்கள் பக்கத்தில் இவ்வதிகரிப்பானது நாணய வெளியீட்டிலும், வைப்புப் பொறுப்புக்களிலும் வெளிக்காட்டப் பட்டது. மொத்த மூலவளங்களில் ஏற்பட்ட இம் மாற்றங்கள் மற்றும் சார்புரீதியாக இறுக்கமான தொரு நாணயக் கொள்கையின் தொடர்ச்சி என்பனவற்றினைப் பிரதிபலித்து நாணயத்தளம (ஒதுக்கு அல்லது உயர்வலு நாணயம்) 1995 இன் 15.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.8 சதவீதத் தினால் அதிகரித்தது.*

### சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அமைப்பு

*மத்திய வங்கியின் மொத்த மூலவளங்கள் 1996 திசெம்பர் இறுதியில் ரூ. 1,815,640 இலட்சமாக விளங்கி 1995 இன் 11.3 சதவீத (ரூ. 175,480 இலட்சம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீத (ரூ. 180,530 இலட்சம்) மிதமான அதிகரிப் பினை இவ்வாண்டில் பதிவு செய்தன.*

*சொத்துக்கள் பக்கத்தில் இவ்வதிகரிப் பானது மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக் களில் முழுமையாக பிரதிபலித்தது. 1995 இன் 12.1 சதவீதத்துடன் (ரூ 73,230 இலட்சம்) ஒப்பிடு கையில் 1996 இல் சொத்துக்கள் 15.8 சதவீதத்தி னால் (ரூ. 107,100 இலட்சம்) வளர்ச்சியடைந்தன. உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு திறைசேரி உண்டியல் உடைமைகள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பனவற்றின் அதிகரிப் புக்களினூடாக அரசுக்கான தேறிய கொடுகடன் அதிகரித்தமையே பெருமளவு காரணமாகும்.*

*சென்மதி நிலுவையில் ஏற்பட்ட திரண்ட பற்றாக்குறைக்கு இசைந்ததாக மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகள் 1995 இன் ரூ. 1,058, 960 இலட்சத்திலிருந்து 1996 இல் 1,032,440 இலட்சத் திற்கு வீழ்ச்சியுற்றன. இக்குறைப்பானது முக்கிய மாக 11.7 சதவீதத்தினால் (ரூ. 46,890 இலட்சம்) வீழ்ச்சியுற்ற வெளிநாடுகளில் வைத்திருக்கப்படும் காசு நிலுவைகளில் பிரதிபலித்தது.*

*பொறுப்புக்கள் பக்கத்திலிருந்து நோக்கும் பொழுது மத்திய வங்கியின் நாணய வெளியீடு 1996 இல் 6.0 சதவீதத்தினால் (ரூ. 27,960 இலட் சம்) உயர்வடைந்த வேளையில், வைப்புப் பொறுப்புக்கள் 2.7 சதவீதத்தினால் (ரூ.20,680 இலட்சம்) உயர்வடைந்தன. மத்திய வங்கியுடனான வைப்புப் பொறுப்புக்களின் அதிகரிப்பானது இக்காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளின் வைப் புக்கள் 12.7 சதவீதத்தினாலும் (ரூ. 40,540 இலட்சம்) அரசின் வைப்பக்கள் 15.5 சதவீதத்தி னாலும் (ரூ. 4,700 இலட்சம்) மற்றும் அரச முகவராண்மைகளின் வைப்புக்கள் 14.9 சதவீதத் தினாலும் (ரூ. 730 இலட்சம்) அதிகரித்தமையினால் விளைந்ததாகும். பன்னாட்டு அமைப்புக்களின் வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்கள் என்பன*

முறையே13.8 சதவீதத்தினாலும் (ரூ. 15, 670 இலட்சம்) 58.8 சதவீதத்தினாலும் (ரூ.9,630 இலட்சம்) வீழ்ச்சியுற்றதனால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது.

## 10.6 வங்கித் தொழில் அபிவிருத்தி

### கிளை விரிவாக்கம்

8 உள்நாட்டு வங்கிகளுடனும் 18 வெளிநாட்டு வங்கிகளுடனும் நாட்டில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை 26 ஆக மாறாது காணப்பட்டது. (1997 மாச்சில் அதனது வாணிபத்தைத் தொடங்கிய சொயிட்டி ஜனராலே என்ற வெளிநாட்டு வர்த்தக வங்கிக்கு கிளையொன்றை நிறுவுவதற்காக 1996 திசெம்பரில் உரிமம் வழங்கப்பட்டது). எனினும் வங்கிக்கிளை வலையமைப்பு குறிப்பாக உள்நாட்டு தனியார் வங்கிகளின் கிளையமைப்பு இவ்வாண்டில் விரிவடைந்தது. உள்நாட்டு வங்கிகளினால் தொழிற்படுத்தப்பட்ட கிளைகளின் மொத்த எண்ணிக்கை 899 இலிருந்து 1996 இல் 1022 இற்கு அதிகரித்த வேளையில் வெளிநாட்டு வங்கிக்கிளைகள் 37 இலிருந்து 38 க்கு அதிகரித்ததன் விளைவாக வங்கிக்கிளைகளின் மொத்த எண்ணிக்கை 124 இனால் 1060 இற்கு அதிகரித்தது. இவ்வாண்டில் தேசிய சேமிப்பு வங்கி 2 கிளைக ளைத் திறந்த வேளையில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 4 கிளைகளைத் திறந்து வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 1995 இன் 1202 இலிருந்து 1996 இல் 1,332 இற்கு உயர்வடையச் செய்தன. வங்கிக்கிளை எண்ணிக்கையின் இந்த மாற்றங்கள் ஒவ்வொரு 10,000 குடித்தொகைக்கும் மொத்த வங்கிக் கிளைகளினால் அளவிடப்பட்டவாறான வங்கித்தொழில் செறிவில் தாக்கத்தினைக் கொண்டிருந்ததோடு 1996 இல் 0.7251 இற்கு அதிகரிக்கச் செய்தன.

மக்கள் வங்கி நகை அடவு பிடிக்கும் நிலையங்களை பலவற்றினைத் திறந்தபோதிலும் மொத்தக் கிளைகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டி னைப் போலவே 325 இல் மாறாது காணப்பட்டது. இலங்கை வங்கியின் விவசாயப் பணி நிலையக்கிளைகள் இரண்டு முதன்மைக் கிளைகளாக தரமுயர்த்தப்பட்டதையும் 2 கிளைகள் ஒருங்கிணைக்கப்பட்டதையும் தொடர்ந்து இலங்கை வங்கியின் முதன்மைக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1995 இன் 273 இலிருந்து 1996 இல் 274 இற்கு அதிகரித்தது. இதன்படி, இலங்கை வங்கியின் மொத்தக் கிளையமைப்பு 274 முதன்மைக் கிளைகளையும் 4 வெளிநாட்டுக் கிளைகளையும் 17 விவசாயப் பணி நிலைய கிளைகளையும் 23 கச்சேரி கிளைகளையும் 21 விரிவாக்க அலுவலகங்களையும் 3 செலுத்தும் அலுவலகங்களையும் உள்ளடக்கியிருந்தது.

இவ்வாண்டில் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி 10 புதிய கிளைகளைத் திறந்ததுடன் அதனது பொகவந்தலாவை விரிவாக்க அலுவலகத்தை முழுமையான கிளையாகத் தரமுயர்த்திய வேளையில் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி ஐந்து கிளைகளை நிறுவியது. வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ஐந்து கிளைகளை நிறுவியதன் மூலமும் அதனது இடம்பெயர் வங்கித் தொழில் நிலையங்கள் இரண்டினைத் தரமுயர்த்தியதன் மூலமும் அதனது கிளைவலையமைப்பை விரிவுபடுத்தியது. இவ்வாண்டில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி வரையறுக்கப்

அட்டவணை **10.8**

வங்கிக் கிளைகளின் பரம்பல்

| வகை | 1995 | 1995 |
|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை | 44 | 44 |
| வர்த்தக வங்கிகள் | 26 | 26 |
| உள்நாட்டு வங்கிகள் | 8 | 8 |
| வெளிநாட்டுவங்கிகள் | 18 | 18 |
| சேமிப்பு வங்கிகள் | 1 | 1 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (அ) | 17 | 17 |
| 2. வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை (ஆ) | 1,202 | 1,332 |
| வர்த்தக வங்கிக் கிளைகள் | 936 | 1,060 |
| உள்நாட்டு வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை | 899 | 1,022 |
| முதன்மைக் கிளைகள் | 797 | 828 |
| வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் | 19 | 17 |
| கச்சேரிக் கிளைகள் | 23 | 23 |
| விரிவாக்க/கொடுப்பனவு அலுவலகங்கள் | 41 | 49 |
| அடைவுபிடிக்கும் நிலையங்கள் | 15 | 101 |
| கடல் கடந்த கிளைகள் | 4 | 4 |
| வெளிநாட்டு வங்கிக்கிளைகள் (இ) | 37 | 38 |
| தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் | 95 | 97 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகள் | 171 | 175 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) 1985 இன் 15 ஆம் இலக்க பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவப்பட்டது.

(ஆ) தலைமை அலுவலகங்கள் உட்பட.

இ) துணைக் கிளைகளையும் உள்ளடக்கும்.

பட்ட கொழும்பு யூனியன் வங்கி ஆகிய ஒவ்வொன்றும் மூன்று கிளைகளைத் திறந்தன. இவ்வாண்டில் இரு வெளிநாட்டு வங்கிகளான கொங்கொங் அன்ட சங்காய் பாங்கிங் கோப்பிரேசனும் வரையறுக்கப்பட்ட முஸ்லீம் கொமர்சல் வங்கியும் ஒவ்வொரு கிளையைதிறந்த வேளையில் ஸ்ராண்டட் சாட்டட் வங்கி அதன் கிளையொன்றினை மூடி விட்டது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 17 இல் மாறாது காணப்பட்டது. எனினும் களுத்துறை, மாத்தறை,கண்டி மற்றும் கம்பகா பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதிய கிளையினை திறந்ததன் மூலம் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை 175 இற்குக் கொண்டுவரப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கி இரண்டு புதிய கிளைகளை நிறுவியதன் மூலம் அதனது கிளைகளின் மொத்த எண்ணிக்கை 97 இற்கு உயர்வடைந்தது.

## வங்கித்தொழில் வசதிகள்

வர்த்தகப் பத்திரங்களைப் புறக் குறிப்பீடு செய்தல், தன்னியக்கக் கூற்றுப்பொறிகளை நிறுவுதல் குத்தகை நகை அடைவு பிடித்தல் மற்றும் ரெலி பேங்கிங் போன்ற விரிவாக்கப்பட்ட புதிய வங்கித்தொழில் வசதிகளுடனும் புதிய வைப்பு மற்றும் கடன் திட்டங்களுடனும் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட வங்கித் தொழில் வசதிகள் இவ்வாண்டில் மேலும் அதிகரிக்கப்பட்டன.

வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புத் திரட்டல் முயற்சிகளின் பாகமொன்றாக சிறுவர்கள் சேமிப்புத் திட்டம் போன்ற பல புதிய விடயங்களை வர்த்தக வங்கிகள் அறிமுகப்படுத்திய வேளையில் சில வங்கிகள் வைப்புக்களைக் கவரும் பொருட்டு வைப்புத்திட்டங்களை லொத்தர் முறை, கடன் வசதிகள், காப்புறுதி நன்மைகள் என்பனவற்றுடன் இணைத்துள்ளன. இதே வேளையில் குறிப்பாக சிறுவர்கள், குடும்பங்கள், சமுர்தி நன்மை பெறுநர்கள், வைத்தியர்கள் தொடர்புச்சாதன ஆளணியினர், ஆசிரியர்கள் போன்ற இலக்கிடப்பட்ட வகையினருக்கான பல தரப்பட்ட வைப்புத் திட்டங்களின் ஊடாக வங்கிகள் தொடர்ந்தும் வைப்புக்களைத் திரட்டின.

பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கிடையில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக மக்கள் வங்கி "சிசு உதான" என்ற புதிய வைப்புத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. இக் கணக்குகளை வைத்திருக்கும் மாணவர்கள் குறித்துரைக்கப்பட்ட வைத்திய நோக்கங்களுக்காக ரூபா. 200,000/= வரையிலான செலவீட்டுக்கு உரித்துடைய வர்களாவதோடு பரிசுகளைப் பெறுவதற்கும் உரித்துடையவர்களாவர். "சுவசெவன" என்ற பெயரில் கடன்வசதிகளுடன் இணைக்கப்பட்ட இன்னுமொரு புதிய வைப்புத் திட்டமும் மக்கள் வங்கியினால் அறிமுகப்படுத்தப் பட்டது. இக் கணக்குகளின் இலக்கிடப்பட்ட குழுவினராக சுகாதாரப் பணிகளின் ஊழியர்கள் காணப் பட்டனர். இலங்கை வங்கி " ரன்கெதல்ல" என்ற பெயரில் புதிய சேமிப்புத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. இது லொத்தர் ஒன்றுடன் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளதுடன் சில சில்லறை விற்பனைக் கடைகளில் கணக்கு வைத்திருக்கும் குடும்ப அலகுகளுக்கு கழிவுகளும் வழங்கப்படுகின்றன.

"சில்வர் லயின் இன்வெஸ்ட்மன்ட்" திட்டம் என்ற பெயரில் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி புதிய வைப்புத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இதன் கீழ் வைப்பாளர்களுக்கு ஆயுட்காப்புறுதி வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அட்டன் நசனல் வங்கி "பத்தும் உதாணய" என்ற சீட்டிழுப்பு முறையொன்றை வதிவற்ற வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவுடைய வெளிநாட்டு நாணயக் கணக்கு ஆகியவற்றை " வைத்திருப்போருக்காக அறிமுகப்படுத்தியது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி "முன்னேற்றகரமான சேமிப்பாளர் கணக்கு" என்ற பெயரில் புதிய சேமிப்புக் கணக்கு ஒன்றை அறிமுகப்படுத்தியது. இத்திட்ட தின் கீழ் கணக்கிலிருந்து எடுப்பனவுகள் காணப் படாவிடில் சேமிப்புக்கணக்கின் வட்டியில் 25 சதவீதம் மிகைக் கொடுப்பனவாக வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தப்படும் வரையறுக்கப்பட்ட பான் ஆசியா வங்கி சிறுவர்களுக்காக " லமா செத்த" என்ற புதிய வைப்புத்திட்டமொன்றைத் தொடக்கி வைத்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட மீன்பிடித்துறை சனசமூக அபிவிருத்திக் கடன் திட்டம், வடமத்திய மாகாண உட்கட்ட

மைப்பு அபிவிருத்திக் கடன் நிகழ்ச்சித்திட்டம், வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பனவற்றின் பங்கேற்கும் கொடு கடன் நிறுவனமாக மக்கள் வங்கி செயற்பட்டது. மீனவர்களினால் மேற்கொள்ளப்படும் சுயதொழில் நடவடிக்கைகளுக்கு கடன் வழங்குவதற்காக 1996 இல் இலங்கை வங்கி பாதுக்க என்னுமிடத்தில் அலங்கார மீன் வளர்ப்பு முன்னோடித் திட்டமொன்றினை தொடக்கிவைத்தது.

அட்டன் நசனல் வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன சமுர்த்தி திட்டத்தின் ஊடாக சமுர்த்தி நன்மைபெறும் குடும்பங்களிடமிருந்து சேமிப்புத் திரட்டலையும் தொடங்கின. இத்திட்டதின் கீழ் கிராமங்களில் வாழும் குறைந்த வருவாயைக் கொண்ட குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட சமுர்த்தி முன்னோடிகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டன.

தொழில் வாய்ப்பற்ற ஆனால் சிறு அளவு விவசாய மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் மற்றும் சிறு அளவு வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்க விரும்பும் சமுர்த்தி நன்மைபெறுநர் அல்லாதவர்களுக்கு நிதி வசதிகளை வழங்குவதற்காக இந்த மூன்று வங்கிகளும் "சுரதுர" என்ற கடன் திட்டத்தினைத் தொடங்கிவைத்தன.

இதற்கு மேலதிகமாக வெகுசன தொடர்பு ஆளணியினருக்கு மின்னியல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் அரசாங்க சேவையில் இல்லாத பல வைத்தியர்களுக்கு தனியார் வைத்தியப் பணிக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் மக்கள் வங்கி இரண்டு புதிய கடன் திட்டங்களைத் தொடக்கிவைத்தது. மேலும் சகாய விலையில் உந்து ஈருருளிகளைக் கொள்வனவு செய்வதற்காக மக்கள் வங்கி கிராம சேவையாளர்களுக்கான கடன் திட்டமொன்றினையும் அறிமுகப்படுத்தியது. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவியுடன் வெளிநாட்டுத் தொழிலுக்காக தென்கொரியா செல்லும் இளைஞர்களுக்கு உதவுவதற்காக மக்கள் வங்கி இன்னுமொரு கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இலங்கை வங்கி விவசாய அமைப்புக்களின் ஊடாக விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்கிய வேளையில் வரையறுக்கப்பட்ட பான் ஏசியா வங்கி உழைக்கும் போதே செலுத்தும் கடன் திட்டம், கார் ஒன்றினைச சொந்தமாக்கும் கடன் திட்டம், வீட்டுடைமைக் கடன்திட்டம் ஆகிய மூன்று கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

1996 இல் இலங்கை வங்கி இலண்டன் வங்கிகளுக்கிடையிலான 6 மாத வழங்கல் வீதத்திற்கு மேலான குறிப்பீடு ஒன்றுடனான வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தில் மாறுபடும் வீத வைப்புச் சான்றிதழ்களின் வழங்கலின் மூலம் இலங்கைச் சந்தைக்கு இன்னுமொரு உபகரணத்தையும் அறிமுகப்படுத்தியது. இவ்வாண்டில் வரயறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கி "வட்டிவீத உச்சவரம்பு ஒழுங்குபடுத்தலிலும்" "வட்டிவீத அடிமட்ட மற்றும் உச்சவரம்பு ஒழுங்குபடுத்தல்களிலும்" ஈடுபட்டது. அவர்களது கூட்டுரிமை வாடிக்கையாளர்களினால் வர்த்தகப் பத்திரங்களின் வழங்கலுக்கான வங்கியாளர்களாகவும் சில வர்த்தக வங்கிகள் பணியாற்றின. தன்னியக்கக் கூற்றுப்பொறிகளின் விரிவாக்கலில் 1996 இல் 9 வங்கிகள் 26 தன்னியக்கப்பொறிகளை நிறுவியதன் மூலம் 1996 இன் இறுதியில் நாட்டில் தொழிற்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் எண்ணிக்கை 160 இற்கு அதிகரிக்கப்பட்டது.

## 10.7 கொடுகடன் தகவல் பணியகம்

1996 சனவரியில் குண்டுவெடிப்பின் பின்னர் தீயினால் முழுமையாகச் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து பணியகம் பாரிய பின்னடைவினைக் கண்டது. எனினும், ஒருமாத காலத்தினுள் பணியகம் புதிய அமைவிடமொன்றில் நிறுவப்பட்டதுடன் புதிய உபகரணங்களையும் கொள்வனவு செய்து 1996 மார்ச்சிலிருந்து தனது தொழிற்பாட்டைத் தொடங்கியது. அனைத்து ஆவணங்களும் உபகரணங்களும் தீயினால் சேதமாக்கப்பட்ட போதிலும் இரண்டாம்பதிப்பு நாடாக்களினால் கொடுகடன் தகவல் மீள நிறுவப்பட்டு தரவுத்தளம் மீளமைக்கப்பட்டது.

இவ்வாண்டில் பணியகம் பங்குதாரர்களுக்கு 70,110 அறிக்கைகளை வழங்கியது. அறிவிக்கும் தரம், ஒழுங்கற்ற கடன் கணக்குகள் தொடர்பாக ரூ.100,000 ஆகவும் ஒழுங்கான கடன்கணக்குகள் தொடர்பாக ரூ. 500,000 ஆகவும் காணப்பட்டது. அதனது தரவுத் தளத்தினை

கிரமமாக புதுப்பித்திலின் மூலம் அறிக்கைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்தது. ஒழுங்கற்ற கடன் கணக்குகளின் புதுப்பித்தல் மாதந்தோறும் மேற்கொள்ளப்பட்ட வேளையில் இது வரை காலமும் காலாண்டுக்கொருமுறை புதுப்பிக்கப்பட்ட ஒழுங்கான கடன் கணக்குகள் மேல்மாகாணத்தைப் பொறுத்தவரை மாதந் தோறும் புதுப்பிக்கப்பட்டன. இது வங்கித்தொழில் சமூகத்தின் மிக முக்கிய பிரிவொன்றுக்கு மிகச் சரியான கொடுகடன் தகவலை வழங்குவதற்கு பணியகத்துக்கு இயலச் செய்தது. ஆண்டின் இறுதியில் பணியகத்தின் தகவல் தளம் 72, 700 கடன் கணக்குகளைக் கொண்டிருந்தது.

எதிர்கால கடன்பாட்டாளர்களினால் கோரப்படுமிடத்து தாம் தொடர்பாக பணியகத்தினால் வழங்கப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அவர்களை இயலச் செய்யும் வகையிலான ஒழுங்கு விதிகளை வடிவமைத்ததன் மூலம் 1995 ஆண்டின் இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகச் சட்டத்தினைப் பணியகம் பயனுறச் செய்தது.

இவ்வாண்டில் உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றும் நிதிக் கம்பனியொன்றும் பணியகத்தின் பங்குதாரர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் மூலம் பங்குதாரர்களின் மொத்த எண்ணிக்கை ஐம்பத்தெட்டாகியது.

## 10.8 கிராமிய வங்கித் தொழிலும் கிராமியக் கொடுகடனும்

### கிராமிய கொடுகட்ன் கொள்கையும் முக்கிய அபிவிருத்திகளும்

1996 இல் முன்னெடுத்துச் செல்லப்பட்ட கிராமிய கொடுகடன் கொள்கையின் முக்கிய பண்பொன்று யாதெனில் தொழில் வாய்ப்பற்றோருக்கு குறிப்பாக படித்த இளைஞர்களுக்கிடையில் சுயதொழில் வாய்ப்பை மேம்படுத்துவதற்காக நுண்பாகநிதியிடல் முறைக்கு வழங்கப்பட்ட வலியுறுத்தலாகும். குறித்துரைக்கப்பட்ட

அட்டவணை **10.9**

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்குட்பட்ட கடன்கள்

(31 திசெம்பர் 1996 இல் உள்ளவாறு)

ரூ. ப. இலட்சம்

| போகம் | அரச வங்கிகள் | | | உள்நாட்டுத்தனியார் வங்கிகள் (அ) | | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | மொத்தக் கடன்கள் (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | துணை உணவுப் பொருட்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பொருட்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பொருட்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பொருட்கள் | மொத்தம் |
| *1991/92 பெரும்போகம்* | 365 | 94 | 459 | 18 | 5 | 23 | 100 | 49 | 149 | 484 | 148 | 632 |
| *1992 சிறுபோகம்* | 96 | 57 | 153 | 1 | 4 | 5 | 38 | 38 | 76 | 134 | 99 | 233 |
| பயிர்ச்செய்கை ஆண்டு1992 | 461 | 151 | 612 | 19 | 10 | 29 | 138 | 87 | 225 | 618 | 247 | 865 |
| *1992/93 பெரும்போகம்* | 315 | 89 | 404 | 17 | 15 | 32 | 87 | 81 | 168 | 418 | 185 | 603 |
| *1993 சிறுபோகம்* | 140 | 76 | 216 | 2 | 6 | 8 | 43 | 51 | 94 | 185 | 132 | 317 |
| பயிர்ச்செய்கை ஆண்டு1993 | 455 | 165 | 620 | 19 | 21 | 40 | 130 | 132 | 262 | 603 | 317 | 920 |
| *1993/94 பெரும்போகம்* | 308 | 85 | 393 | 23 | 22 | 45 | 122 | 73 | 195 | 453 | 180 | 633 |
| *1994 சிறுபோகம் (இ)* | 136 | 64 | 200 | 8 | 35 | 43 | 62 | 38 | 100 | 207 | 136 | 343 |
| பயிர்ச்செய்கை ஆண்டு1994 | 444 | 149 | 593 | 31 | 57 | 88 | 184 | 111 | 295 | 660 | 316 | 976 |
| *1994/95 பெரும்போகம்* | 516 | 182 | 698 | 18 | 18 | 36 | 37 | 22 | 59 | 571 | 222 | 793 |
| *1995 சிறுபோகம்* | 179 | 131 | 310 | 8 | 23 | 31 | 34 | 22 | 56 | 221 | 176 | 397 |
| பயிர்ச்செய்கை ஆண்டு1995 | 695 | 313 | 1,008 | 26 | 41 | 67 | 71 | 44 | 115 | 792 | 398 | 1,190 |
| *1995/96 பெரும்போகம்* | 265 | 76 | 341 | 18 | 28 | 46 | 25 | 33 | 58 | 308 | 137 | 445 |
| *1996 சிறுபோகம்* | 71 | 33 | 104 | 3 | 12 | 15 | 14 | 8 | 22 | 88 | 53 | 141 |
| பயிர்ச்செய்கை ஆண்டு1996 | 336 | 109 | 445 | 21 | 40 | 61 | 39 | 41 | 80 | 396 | 190 | 586 |

(அ) அட்டன் நசனல் வங்கி, வர்த்தக வங்கி, செலான் வங்கி மட்டும்

(ஆ) 1992 ஆம் ஆண்டுக்கான மொத்தம் ப.நோ. கூ. சங்கத்தினால் வழங்கப்பட்ட சிறுதொகைக் கொடுகடனையும் உள்ளடக்கும்.

(இ) 1994 ஏப்பிறலில் மீள்நிதியிடப்படும் திட்டம் அகற்றப்பட்டு வட்டி உதவுத் தொகை கொண்டுவரப்பட்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கிராமியக் கொடுகடன் திட்டங்களில் தங்கியிருக்கும் கொள்கையினைத் தொடர்ந்து மேற்கொண்ட வேளையில் இவ்வாண்டில் அரச நிதியங்களின் மூலம் இரண்டு புதிய நுண்பாக நிதியிடல் திட்டங்கள் தொடக்கிவைக்கப்பட்டன. அவை யாவன சமுர்த்தி அபிவிருத்தி கடன்திட்டம் அல்லது "சசன" மற்றும் சமுர்த்தி நன்மை பெற்றுக்கொள்ளாதோருக்கான நுண்பாக தொழில் முயற்சி கடன் திட்டத்தினூடாக சுய தொழில் வாய்ப்பு மேம்படுத்தல் அல்லது "சுரதுர ஊக்குவிப்பு" என்பனவாகும். இவ்விரண்டு திட்டங்களினாலும் ஏற்கப்பட்ட உபாயம் என்னவெனில் பயிற்சி, சந்தைப்படுத்தல், கட்டாய சேமிப்பு மற்றும் பாரிய அளவு தயாரிப்பாளர் களுடனான துணை ஒப்பந்தம் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்த தொகுதிக்குமான கடன் வழங்கலாகும். கடன் வழங்கும் உபாயமானது எதிர்கால கடன் பாட்டாளர்கள் தமது முயற்சிகளில் வெற்றியடைவதற்கான சூழ்நிலை ஒன்றினை உருவாக்குவதாகும்.

1994 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வட்டி சலுகைகளுக்கு ஆதரவளிக்கும் அரசாங்க உதவிக் கொடுப்பனவுடன் வங்கித்தொழில் துறையினுள் உருவாக்கப்பட்ட மூலங்களின் ஊடாக நிதியிடல் ஆய்வுக்குரிய ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ்வரும் நெல் மற்றும் ஏனைய துணைப்பயிர்களின் பயிர்ச்செய்கைக்காக கடன்கள் வழங்கப்பட்டன.

ஆய்வுக்குரிய ஆண்டின் முக்கிய விடயமொன்று என்னவெனில் மாகாணமொன்றினுள்ள மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை மாகாண அடிப்படையில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியாக ஒருங்கிணைத்து பிரதேச அபிவிருத்தி வங்கிகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கையாகும். இதே வேளையில், பொருளதாதாரத்தின் கிராமியத்துறையின் அபிவிருத்தி மற்றும் நிதியியல் நடவடிக்கைகளுக்கு வசதிசெய்து கொடுப்பதற்காக அபிவிருத்தி மற்றம் சேமிப்பு வங்கிகளை நிறுவுவதில் ஈடுபட்டுள்ள தனியார்துறை நிறுவனங்கள் பல தமது பூர்வாங்க வேலைகளை முற்றுபெறச் செய்திருந்தன. 1996 இல் முறைசாரத்துறையில் உறுப்பினர்களிடமிருந்து சேமிப்புக்களைத் திரட்டி அவற்றினை உறுப்பினர்களுக்கே சிறுகடன்களாக வழங்கும் சிறு அளவு சேமிப்புக்கடன் வழங்கும் சங்கங்களின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவு செய்தன. கிராமிய கொடுகடன் தோற்றப்பாட்டில் மக்களை அடிப்ப டையாகக் கொண்ட அத்தகைய அமைப்புக்கள் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட பங்கேற்கும் கொடுகடன் நடவடிக்கைகளில் நலமான அபிவிருத்தியொன்றாகக் கருதப்படுகின்றது.

## புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்

1996 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வங்கிகளினால் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ. 5,860 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டில் எய்திய மட்டத்தினை விட 51 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. நேரிணையாக வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1995 இன் 82,000 இலிருந்து 1996 இல் 30,810 இற்கு வீழ்ச்சியடைந்தது. 1996 இல் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டதின் மோசமான செயலாற்றத்திற்கு பல காரணிகள் பங்களிப்புச் செய்தன. ஆண்டுக் காலப்பகுதியில் நிலவிய கடுமையான வரட்சியின் காரணமாக பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பில் ஏற்பட்ட குறைப்பை கடன் நிலுவையின் 25 சதவீதத்தைச் செலுத்துவதன் மூலம் 1994 இல் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட விவசாயிகளுக்கான நிவாரணத்தொகுதியின் நிபந்தனைகளுக்கு இசைவாக நடந்துகொள்ளாமையின் காரணமாக விவசாயிகள் புதிய கடன் பெறுகைக்கான தகுதியினை இழந்தமை, 1995 இல் மீளச் செலுத்தல்கள் கணிசமான அளவில் தவறவிடப்பட்டமையின் காரணமாக கிராமிய கடன் வழங்கலில் வங்கிகள் எச்சரிக்கையுடனான அணுகுமுறையினைக் கடைப்பிடித்தமை என்பனவே இக் காரணிகளாகும். பகிர்ந்தளிப்புக்களில் 1995/1996 பெரும் போகம் ரூ 4,450 இலட்சமாக விளங்கிய வேளையில் எஞ்சிய தொகையான ரூ. 1,410 இலட்சம் 1996 இன் சிறுபோகத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது. என்றும் போலவே (68 சதவீதத்திற்கு வகைகூறும்) கொடு கடனின் பாரிய பங்கொன்று நெல்லினால் ஈர்த்துக் கொள்ளப்பட்ட வேளையில் எஞ்சிய

## அட்டவண 10.10

### வைப்புக்களும் முற்பணங்களும் – கிராமியத்துறை

ரூ. ப. இ

| | கூட்டுறவு கிராமிய வங்கிகள் | | வேளாண்மைப்பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் துணை அலுவலகம் | | பிரதேச கிராமிய அபிவிருத்து வங்கிகள் | | சிக்கனக் கொடு கடன்கூட்டுறவுச் சங்கம் | | சர்வோதய | | சனசக்தி வங்கி அம்பாந்தோட்டை | | சமுர்த்தித் திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 |
| 1. மொத்தச் சேமிப்புக்கள்(ஆ) | 7,500 | 7,927 | 197 | 234 | 1,945 | 2,035 | 2,038 | 2,397 | 100 | 157 | 26 | 29 | - | 1,366 |
| சேமிப்புக்கள் | - | வி.கி | 169 | 194 | 1,595 | 1,596 | 1,049 | 1,152 | 73 | 121 | 6 | 6 | - | 8 |
| சிறப்புச் சேமிப்புக்கள் | - | வி.கி. | 4 | 5 | 8 | 22 | 509 | 631 | 27 | 36 | 7 | 9 | - | 1,347 |
| நிலையான வைப்புக்கள் | - | வி.கி. | 24 | 35 | 342 | 417 | 178 | 267 | - | - | 1 | 1 | - | 11 |
| பங்குகள் | - | - | - | - | - | - | 302 | 347 | - | - | 12 | 13 | - | - |
| 2. வழங்கப்பட்ட மொத்தக்கடன் | 805 | 1,067 | 83 | 101 | 2,020 | 2,294 | 1,677 | 1,888 | 542 | 753 | 174 | 508 | - | 4 |
| வேளாண்மை | 106 | 94 | 45 | 45 | 321 | 267 | 208 | 259 | 193 | 235 | 108 | 127 | - | வி.கி |
| விலங்கு வளர்ப்பு | 29 | 35 | 1 | 1 | 30 | 24 | 43 | 38 | 22 | 29 | - | - | - | வி.கி |
| மீன்பிடி | - | - | - | - | 15 | 25 | - | - | - | 3 | 4 | 5 | - | வி.கி |
| சிறு கைத்தொழில்கள் | 40 | 43 | 3 | 6 | 130 | 201 | 126 | 99 | 64 | 101 | 12 | 165 | - | வி.கி |
| விடமைப்பு மின்னூட்டல் நிர் வழங்கல் | 385 | 584 | 5 | 9 | - | - | 156 | 179 | - | - | 4 | 6 | - | வி.கி |
| செயற்றிட்ட/ வர்த்தகம் | 104 | 158 | 15 | 24 | 1,087 | 1,064 | 732 | 649 | 45 | 82 | 36 | 50 | - | வி.கி |
| எனையவை | 141 | 154 | 14 | 16 | 437 | 714 | 412 | 664 | 218 | 303 | 10 | 155 | - | வி.கி |

(அ) 31 திசெம்பர் 1996 இல் சேமிப்புக்கள்
(ஆ) 1995, 1996 இல் வழங்கப்பட்ட கடன்கள்

மூலங்கள்: இலங்கை வங்கி
மக்கள் வங்கி
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்
இலங்கை சமுர்த்தி மேலாண்மைச்சபை
சிக்கனக்கொடுகடன் கூட்டுறவுச்சங்கம்
சர்வோதய மகளிர் அபிவிருத்தி கூட்டமைப்பு
அம்பாந்தோட்டை.

தொகை துணை உணவுப்பயிர்களுக்கு வழங்கப் பட்டது.

1994 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டத் தின் கீழான பயிர்ச்செய்கைக் கடன்களுக்கான வட்டி உதவிக் கொடுப்பனவுத் திட்டதின் கீழ் விவசாயக் கடன்கள் மீது ஆண்டொன்றுக்கு 7.5 சதவீதப் புள்ளிகளைக் கொண்ட வட்டி உதவிக் கொடுப்பனவு ஒன்று ஆகக்கூடியது 270 நாட் களுக்காக அரசாங்கத்தினால் கடன் வழங்கும் வங்கிகளுக்கு செலுத்தப்பட்டது. தமது நிதியங்க ளின் செலவினைக் கருத்திற்கொள்ளாது ஆண் டொன்றுக்கு 16 சதவீதத்தில் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதனை கடன் வழங்கும் வங்கி களுக்கு இது இயலச் செய்தது. 1995 சிறுபோகத் திலும் 1995/1996 பெரும்போகத்திலும் பகிர்ந்தளிக் கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்களுக்காக 1996 இல் வங்கிகளுக்குச் செலுத்தப்பட்ட வட்டி உதவிக்கொடுப்பனவின் மொத்தப் பெறுமதி ரூ. 145 இலட்சமாகக் காணப்பட்டது.

1986 சிறுபோகத்திற்கும் 1993/1994 பெரும் போகத்திற்கும் இடையில் கடன்களைச் செலுத்தத் தவறிய விவசாயிகளுக்கு 1997 சிறுபோகம்வரை 1994 இன் விவசாயிகளுக்கான நிவாரணத் தொகுதியின் கீழான நிவாரணங்களைப் பெற அனுமதிப்பதற்கு அரசாங்கம் இணங்கியது. இந்த வகையிலான நிவாரண நீடிப்பானது பங்கேற்பு கடன் பதிவழிப்புத்திட்டத்தின் கீழ் அவர்களது கணக்குகளை ஒழுங்குமுறைப்படுத்தி செலுத்தத் தவறிய விவசாயிகளுக்கு நிறுவன அமைப்பினுள் நுழைவதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சிறந்த கடன்பாட்டாளர் களாக புதிய கடன்களைப் பெறுவதற்கான தகைமையினை இது அவர்களுக்கு வழங்குகின்றது. கடன் உத்தரவாதத்தின் முழுத்தொகைக்குமான தகைமையினைப் பெறுவதற்கு வங்கிகள் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டுமென்ற மத்திய வங்கியின் தேவைப்பாட்டிற்கு விலக் களிப்பதன் மூலம் கொடுகடன் விதிகளைத் தளர்த்துமாறு அரசாங்கத்தின் நிவாரணத் தொகுதி வேண்டிநின்றது. இந்த விலக்களிப்பின்

நியதிகளின் படி விவசாயிகளிடமிருந்து 25 சதவீத முற்பணத்தைச் சேகரித்ததன் பின்னர் எஞ்சியுள்ள இழப்பின் முதன்மைத் தொகையின் அரைப்பங்கினைச் செலுத்துவதற்கு மத்திய வங்கி இணங்கியது.

## பயிர்க்காப்புறுதித் திட்டங்கள்

ஆய்வுக்குரிய ஆண்டுப்பகுதியில் விவசாயக் காப்புறுதிச் சபையினால் வழங்கப்பட்ட விவசாயக் காப்புறுதித் திட்டங்களின் உள்ளடக்கத்தில் அதிகரிப்பொன்று காணப்பட்டது. விவசாயக் காப்புறுதிச் சபையினால் உள்ளடக்கப்பட்ட புதிய விடயங்கள் கால்நடை (கோழிப்பண்ணை தவிர்ந்த), சோளம், கரும்பு, தெங்கு (4 ஆண்டுகள்வரை), வெற்றிலை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. விவசாயச் சமூகத்தின் நேரடியான வரவேற்பினைப் பெற்ற இப்புதிய காப்புறுதித் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் தொழிற்படுத்தப்பட்டன. இதே வேளையில் தனியார் காப்புறுதிக் கம்பனி ஒன்றான செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி மட்டுப்படுத்தப்பட்ட அளவில், 1995இல் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் காப்புறுதி நடவடிக்கைகளை தொடர்ந்து விரிவுபடுத்தியது. இந்த கம்பனியின் காப்புறுதி திட்டத்தின் கீழ் நெல், சோளம், பழவகைகள், மரக்கறிவகைகள், கால் நடை, உருளைக்கிழங்கு ஆகியன உள்ளடக்கியிருந்ததோடு இவை தெரிந்தெடுக்கப்பட்ட பயிர்ச்செய்கை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1996 இல் விவசாயக் காப்புறுதிச் சபையினால் காப்புறுதி செய்யப்பட்ட நெற் காணிகளின் பரப்பு 26,000 கெக்டேயர்களாக விளங்கி 1995 இன் பதிவு செய்யப்பட்ட 71,000 கெக்டேயர்களுடன் ஒப்பிடு கையில் கடுமையான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் உட்படுத்தப்பட்ட பரப்பின் மூலம் இது விளக்கப்படுகின்றது. விவசாயக் கடன்களுக்கான பிணையாக அவற்றினது காப்புறுதிப் பத்திரங் களை ஏற்றுக்கொள்வதற்கு வங்கிகள் அனுமதிக்கப்பட்டிருந்தால் தனியார் பயிர்க்காப்புறுதிகளின் நடவடிக்கைகள் மேலும் விரிவடைந்திருக்கும். 1996 இல் பயிர்காப்புறுதிச் சபையினால் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணம் ரூ. 161 இலட்சமாக காணப்பட்ட வேளையில் செலுத்தப்பட்ட இழப்பீடுகள் ரூ. 185 இலட்சமாக விளங்கி காப்புறுதித் தொழிற்பாட்டில் ரூ. 24 இலட்சம் கொண்ட குறையினை விளைவித்தது. வரையறுக்கப்பட்ட செலிங்கோ இன்சுரன்ஸ் ரூ. 3.3 இலட்ச கட்டுப்பணத்தைச் சேகரித்து ரூ. 2.1 இலட்சத்தினை இழப்பீடாக வழங்கியது.

## நுண்பாக நிதியிடல் மற்றும் சேமிப்புத் திட்டங்கள்

### சமுர்த்தி அபிவிருத்திக் கடன் திட்டம் அல்லது "சசனா" திட்டம்

சமுர்த்தி நன்மைபெறுநர்களின் வருவாய் மட்டங்களையும் வாழ்க்கைத் தரங்களையும் உயர்த்தும் நோக்கில் ஏற்கெனவேயுள்ள சமுர்த்தி வழிகாட்டிகளையும் சமுர்த்தி முகாமையாளர்களினதும் வலையமைப்பையும் பயன்படுத்தி இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் கூட்டுடன் இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை, கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் "சசனா" என்ற பெயரில் புதிய நுண்பாக தொழில் முயற்சித்திட்டமொன்று தொடக்கி வைக்கப்பட்டது. இக் கடன் திட்டத்தின் கீழ் சமுர்த்தி நன்மை பெறுநர்களின் குடும்ப உறுப்பினர்கள் புதிய வருவாயை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் ஏற்கனவேயுள்ள செய்திட்டங்களை விரிவாக்குவதற்காகவும் ரூ. 2,500 இலிருந்து ரூ. 10,000 வரையிலான சிறிய கடன்பெறுவதற்கான முற்தேவையாக சமுர்த்தி குடும்பமொன்று சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் ஆகக்குறைந்தது ரூ. 2,000 சேமிப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சமுர்த்தி நன்மைபெறுநர்களுக்கிடையில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக வேண்டி ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் 82 சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இத்தகைய சங்கங்களில் தமது தன்னிச்சையான சேமிப்புக்களுக்கு மேலதி கமாக வங்கிச் சங்கங்களின் பங்குகளில் முதலீடு செய்யுமாறும் சமுர்த்தி நன்மை பெறுநர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஆய்வுக்குரிய காலப் பகுதியின் இறுதியில் சமுர்த்தி நன்மை பெறுநர்களினால் உடைமையாக வைத்திருக்கப்பட்ட பங்குகளின் பெறுமதி ரூ. 1,070 இலட்சமாக விளங்கிய வேளையில் சேமிப்புக்கள் ரூ. 80

இலட்சமாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக கட்டாய சேமிப்புத் திட்டமொன்றில் பங்கேற்கும் படியும் சமுர்த்தி நன்மைபெறுநர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டதோடு இதன்கீழ் அவர்களுக்கு நன்மைகள் பகிர்ந்தளிக்கப்படும் போது மூலத்திலிருந்தே சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களிடமிருந்து ரூ. 500 வீதத்திலும் ரூ. 1,000 வீதத்திலும் சேமிப்புக்கள் சேகரிக்கப்பட்டன. 1996 இறுதியில் கட்டாயச் சேமிப்புக்களின் மொத்தம் ரூ. 13,475 இலட்சமாக விளங்கியது. நன்மைபெறுநர்களுக்கிடையில் நுண்பாக கடன் பகிர்ந்தளிப்புக்கான வழிகாட்டல்கள், ஒழுங்கு விதிகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பன தயாரிக்கப்படும் வரை சமுர்த்தி அதிகாரசபை இச் சேமிப்புக்களை முழுமையாகவே திறைசேரி உண்டியல்களிலும் வங்கி வைப்புக்களிலும் முதலீடு செய்துள்ளது.

## நுண்பாக தொழில் முயற்சி கடன் திட்டம் அல்லது "சுரதுர" ஊக்குவிப்புத் திட்டத்தின் ஊடாக சுயதொழில் மேம்பாடு

1996 இறுதியளவில் சமுர்த்தி நன்மை பெறுநர் அல்லாதோரை இலக்காகக்கொண்ட இரண்டாவது நுண்பாக தொழில் முயற்சி கடன் திட்டமொன்று அரசாங்கத்தினால் தொடக்கி வைக்கப்படது. "சுரதுர" ஊக்குவிப்பு என்ற பெயரைக்கொண்ட இத்திட்டம் சமுர்த்தி வழிகாட்டிகளினதும் சமுர்த்தி முகாமையாளர்களினதும் வலையமைப்பினைப் பயன்படுத்தி இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நசனல் வங்கி என்பனவற்றின் கூட்டுடன் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி பெறுநர் அல்லாத படித்த தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களும் ரூபா 50,000 வரையிலான கடனை ஆண்டுக்கு 10 சதவீத வட்டி வீதத்தில் சுயதொழில் வருமான உருவாக்கத்திற்காக பெற்றுக்கொள்ளலாம். இக்கடனானது, நன்மைபெறுநர்களை பயிற்றுவித்தல் சந்தைப்படுத்தல், பாரிய அளவு தயாரிப்பாளர்களுடனான இணைப்பு போன்ற உள்ளக்கிய பலதரப்பட்ட ஆதாரப்பணிகளுடனான அனைத்தையும் உள்ளடக்கிய தொகுதியாக வழங்கப்பட்டது. 1996 இறுதியில் இத்திட்டத்தின் கீழ் 2,400 நன்மைபெறுநர்களுக்கு ரூ. 780 இலட்சம் கொண்ட தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது.

## அம்பாந்தோட்டையில் சனசக்தி வங்கித்தொழில் சங்கங்கள்

சனசக்தி வங்கித்தொழில் சங்கங்களாவன சேமிப்புக்களைச் சேகரித்து அவற்றினது உறுப்பினர்களுக்கு சிறிய அளவு கடன்வழங்கும் குறிக்கோளுடன் அம்பாந்தோட்டை மகளிர் அபிவிருத்திக் கூட்டமைப்பினால் நிறுவப்பட்ட முறைசாரா சேமிப்பு மற்றும் கடன் சங்கங்களாகும். இத்திட்டமானது தனியாகவே பெண் உறுப்பினர்களினால் முகாமைப்படுத்தப்படும் முறைசாரா சேமிப்பு ஒழுங்குபடுத்தல்களிலிருந்து உருவான ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட முறைசார்ந்த தன்னிச்சைச் சங்கமொன்றாகும். இச் சங்கங்கள் தமது குறிக்கோள்களாக உறுப்பினர்களது வாழ்க்கைத் தரங்களை உயர்த்துதல், சமூக ஏற்பு மற்றும் சுகாதார மற்றும் ஊட்டச்சத்து மட்டங்களை தரமுயர்த்துதல் போன்றவற்றைக் கொண்டுள்ளன. 1996 இறுதியளவில் அம்பாந்தோட்டையில் 67 சனசக்தி வங்கிதொழில் சங்கங்கள் காணப்பட்டன. 1996 இறுதியில் சேமிப்புக்கள், சங்கங்களின் பங்குகளில் செய்யப்பட்ட முதலீடு என்பனவற்றின் வடிவில் உறுப்பினர்களிடமிருந்து ரூ. 280 இலட்சம் திரட்டப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் ரூ. 2,174 இலட்சமாக விளங்கிய மொத்தக் கடன் வழங்கல் முதன்மையாக விவசாயம் ,சிறுகைத் தொழில்கள் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்தன. இக்கடன்களின் மீது அறவிடப்பட்ட வட்டிவீதமானது 1996 இலும் தொடர்ந்தும் ஆண்டொன்றுக்கு 36 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது.

## சர்வோதய கிராமிய தொழில் முயற்சி

இந்த திட்டதின் கீழ் உறுப்பினர்களியடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி அவர்களது சிறியளவு நிதித்தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுவதையும் உள்ளடக்கி உறுப்பினர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் நோக்கில் சிரமதான சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1996 இன் இறுதியில் 20 மாவட்டங்களில் அத்தகைய 2,000 சங்கங்கள் நிறுவப்பட்டன. சங்கத்துடன் ஆகக்குறைந்தது 6 மாதங்களுக்கு கட்டாய சேமிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றின் பின்னர் கடன்கள் வழங்கப்படுகின்றன. உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ஆகக்கூடிய

தொகை ரூ. 30,000 ஆக காணப்பட்டது. 1996 இல் இச்செயற்றிட்டத்தின் கீழ் நுண்பாக தொழில் முயற்சிக் கடன்களாக உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபா 7,525 இலட்சம் வழங்கப்பட்டது.

### சிக்கன கடன் கூட்டுறவு சங்கங்கள் நுண்பாக நிதியிடல் திட்டம்

சிக்கன கடன் கூட்டுறவு சங்கங்கள் அல்லது சனச அமைப்பு. சனச அமைப்பானது சனச ஆரம்ப சங்கங்களில் அவர்களது சேமிப்புக்களை வைப்புக்களாக பேணும் வேளையில் அவர்களது அவசர நிதித்தேவைகளை எதிர்கொள்ளுவதற்காக உறுப்பினர்களுக்கு நுண்பாக நிதியை வழங்குகின்றது. தற்போதைய வீதங்களில் மிக இலகுவான முறைகளில் உறுப்பினர்களுக்கு சிறுகடன்கள் வழங்கப்படுகின்றன. பயன்தரு கடன் காணிப்புடன் நுண்பாக வசதிகளின் 99 சதவீத கடன மீட்பு பேணப்படுகின்றது. 1996 இல் அத்தகைய கடன் வழங்கல்களின் மொத்தம் ரூபா 18,880, இலட்சமாகும்.

## 10.9 ஏனைய நிதி நிறுவனங்கள்

### சேமிப்பு நிறுவனங்கள்

1996 இல் தேசிய சேமிப்பு வங்கி அதன் வைப்புத் திரட்டலை மேம்படுத்தியது. வங்கியின் பரந்தளவிலான கிளை வலையமைப்பின் முன்னேற்றம், போட்டிரீதியான வட்டிவீதங்கள் பேணப்பட்டமை என்பனவற்றின் காரணமாக 1995 இல் ரூ. 44,300 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 90,800 இலட்சம் கொண்ட வைப்புத் திரட்டக்கூடியதாக இருந்ததன்மூலம் 1996 இறுதியில் மொத்த வைப்புக்கள் ரூ. 668,350 இலட்சமாகியது. வங்கி சேமிப்புப் புத்தகங்கள், நிலையான வைப்புக்கள், ஓய்வூதிய திட்டங்கள், நன்கொடைத்திட்டங்கள், பரிசூதியச் சேமிப்பு முறிகள், கொடைச் சீட்டுக்கள், சேமிப்பாளர் வீடமைப்புக் கடன் திட்டம், "சுரக்கும் கினும்" போன்ற கருவிகளூடாக வங்கி சேமிப்புக்களைத் திரட்டியது. இவ்வாண்டில் நிலையான வைப்புக்கள் 15 சதவீதத்தினால் (ரூ. 54,750 இலட்சம்) அதிகரித்த வேளையில் சேமிப்பு வைப்புக்கள் 17 சத வீதத்தினால் அதிகரித்தன (ரூ. 35,950). தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வூதிய திட்டம் பரிசூதிய சேமிப்பு முறிகளையும் உள்ளடக்கிய ஏனைய வைப்புக்கள் 10.9 சதவீதமான (ரூ. 100 இலட்சம்) அதிகரிப்பினை எடுத்துக்காட்டின. மற்றைய சந்தை வீதங்களின் அசைவுடன் இணைந்துசெல்லும் விதத்தில் ஆண்டின் தொடக்கத்தில் தேசிய சேமிப்பு வங்கி வட்டி வீதங்களைக் கீழ்நோக்கித் திருத்தியது. இதன்படி, 3 மாத நிலையான வைப்புக்களுக்கு பொருந்தத்தக்க வட்டிவீதங்கள் 1996 பெப்பிரவரியில் 14 சதவீதத்திலிருந்து 12 சதவிதத்திற்கு கீழ்நோக்கி திருத்தப்பட்டன. முதிர்ச்சியில் வட்டி செலுத்தத்தக்க 12 மாத நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வீதம் 16 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. சேமிப்பு வைப்புக்கள் மீதான வட்டிவிதம் 16 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு 1996 இல் குறைக்கப்பட்டது. சேமிப்பு வைப்புக்களின் மீதான வட்டி வீதம் ஆண்டு முழுவதும் 12 சதவீதத்தில் இருந்தது.

தேசிய சேமிப்பு வங்கியினால் அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளை விரிவாக்கும் விதத்தில் ஆயுள் காப்புறுதி நன்மைத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள "சுரக்கினும்" என்ற பெயரில் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வைப்பாளர்கள் 66 மாதங்களுக்கு மாதாந்த வைப்பாக ஒரு தொகை யினை மேற்கொண்டதுடன் அதன்பின்னர் மாதாந்தக் கொடுப்பனவாக மாதாந்த வைப்பிற்குச் சமமான தொகையைப் பெறுவர்.

இந்தியாவிற்கு குடிபெயர்ந்து செல்வோரின் ஊ.சே.நிதிய சேமிப்பு கணக்குகளை பிணையாகக் கொண்டு அதற்கெதிராக கடன்களை வழங்கியதன் மூலம் தேசிய சேமிப்பு வங்கியும் அதன் கடன் வழங்கல் நடவடிக்கைகளை விரிவாக்கிக் கொண்டதுடன், தெரிந்தெடுக்கப்பட்ட வெளியூர் கிளைகளினூடாக வீடமைப்பு நோக்கங்களுக்கான கடன்களையும் வழங்கியது.

மொத்த முதலீடுகள் ரூ. 77,200 இலட்சத்தினால் அதிகரித்து 1996 இன் இறுதியில் ரூ. 602,200 இலட்சமாக விளங்கியது. பெருந்தொகையான முதலீடுகள் அரச பிணையங்களின் வடிவில் (74 சதவீதம்) இருந்த வேளையில்

திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகள் ஆண்டின் இறுதியில் மொத்த முதலீடுகளில் 11 சதவீதமாக இருந்தன.

நாட்டின் முக்கிய இளைப்பாற்று நிதியமான ஊழியர் சேமநிதியம் 1996 இன் நடவடிக்கைகளில் அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமநிதியத்தில் புதிய உறுப்பினர்கள் எவரும் சேர்த்துக்கொள்ளப்படக்கூடாது என 1996 பெப்பிரவரியில் தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதொரு தீர்மானத்தின் காரணமாக இந்நிதியத்திற்கான உதவு தொகைகளில் சில ஊ. சே. நிதியத்திற்கு வழிப்படுத்தப்படும். 1996 இல் ஊ.சே.நிதியத்தினால் பெறப்பட்ட மொத்த உதவு தொகைகள் 1995 இல் பெறப்பட்ட ரூ. 81,540 உடன் ஒப்பிடுகையில் ரூ. 90,000 இலட்சமாக இருந்தவேளையில் உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட தேறிய நன்மைகள் ரூ. 27,150 இலட்சத்திலிருந்து ரூ. 30,000 இலட்சத்திற்கு அதிகரித்தது. இக் கொடுக்கல் வாங்கல்கள் ஊ. சே. நிதிய முதலீடுகளின் மீதான வட்டியிலிருந்து கிடைத்த உட்பாய்ச்சல்களுடன் சேர்ந்து நிதியத்துடனான உறுப்பினர்களின் நிலுவை 1995 இறுதியின் ரூ. 853,860 இலட்சத்திலிருந்து 1996இன் இறுதியில் ரூ. 1,020,000 இலட்சமாக அதிகரித்தது. ஊ. சே. நிதிய முதலீடுகளின் மொத்தப் பெறுமதி ரூ 1,160,980 இலட்சமாக அமைந்து நாட்டின் தனிப்பெரும் முதலீட்டு நிதியமாக விளங்கியது. இதன் முதலீடுகளில் 97.7 சதவீதம் அரச உத்தரவாதப் பிணைகளில் காணப்பட்டது.

நாட்டின் இரண்டாவது இளைப்பாற்று நிதியமான ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்களும் உதவு தொகைகளும் 1996 இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன. ஊ. ந. நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 20 சதவீதத்தினால் அதிகரித்து 1996 இன் இறுதியில் ரூ. 169,510 இலட்சத்தினை அடைந்தது. பெறப்பட்ட மொத்த உதவுதொகைகள் 1995 இன் ரூ. 15,030 இலட்சத்திலிருந்து 1996 இல் ரூ. 16,090 இலட்சத்திற்கு அதிகரித்த வேளையில் வெளிநின்ற உறுப்பினர்களில் நிலுவைகள் 1996 இன் இறுதியில் ரூ.147,980 இலட்சத்திற்கு 20 சதவீதத்தினால் உயர்வடைந்தன. மொத்த முதலீடுகள் 1995 இறுதியின் ரூ. 132,360 இலட்சத்திலிருந்து 1996 இன் இறுதியில் 160,400 இலட்சத்திற்கு அதிகரித்தது. இம் முதலீடுகளில் பெருந்தொகை அரசபிணைகளின் வடிவில் காணப்பட்டதுடன் மொத்த முதலீட்டில் இவ்வரசபிணைகள் 1995 இல் பதிவுசெய்யப்பட்ட 68 சதவீதத்திற்கெதிராக 59 சதவீதத்திற்கு வகைகூறியது. சில பன்முகப்படுத்தும் தன்மைகள் இடம் பெற்றதன் காரணமாக அரச முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் இருந்து அரசபிணைகள் விலகிச்சென்றன. இதேகாலப்பகுதியில் அரசபிணைகளில் முதலீடுகள் ரூ. 89,320 இலட்சத்திலிருந்து ரூ. 95,210 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1995 இன் 6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் 10 சதவீதத்திற்கு வகைகூறிய வர்த்தக வங்கிகள் மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியுடனான முதலீடுகள் 1995 இன் ரூபா 7,720 இலட்சத்திலிருந்து 1996 இல் ரூ.15,250 இலட்சத்திற்கு அதிகரித்தன. தொகுதிக்கடன்கள், பங்குகள், கூறுநம்பிக்கைகள், வர்த்தக உண்டியல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய முதலீடுகள் 1995 இன் மொத்த முதலீடுகளில் 27 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 31 சதவிதத்திற்கு வகைகூறின. இவ்வகையில் காணப்பட்ட முதலீடுகள் 1996 இறுதியில் ரூ. 49,940 இலட்சத்திற்கு 14 சதவீதத் தினால் அதிகரித்தன.

## நீண்டகால கடன் வழங்கல் நிறுவனங்கள்

1996 இல் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின கடன் வழங்கல் நடவடிக்கைகள் மெதுவான போக்கினை எடுத்துக் காட்டுகின்ற வேளையில் இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1995 இன் 1,248 இலிருந்து 878 இற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகையும் ரூ. 42,590 இலட்சத்திற்கு 28 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை ரூ. 28,510 இலட்சமாக அமைந்து ரூ. 8,360 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. எனினும் வெளிநின்ற மொத்தக்கடன்கள் 1996 இறுதியில் ரூ. 104,110 இலட்சத்திற்கு 13 சதவிதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டினைப் போன்றே இவ்வாண்டிலும் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களில் பெரும்பாலானவை (56 சதவீதம்) கைத்தொழில் நோக்கங்களுக்கானதாக இருந்தது. நிதியியல் துறை பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில 18 சதவீதத்தினைப் பெற்ற வேளையில் சுற்றுலாவும் வேளாண்மைத் துறையும் மொத்தக்

அட்டவணை **10.11**

நீண்டகால கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்டதும் வழங்கப்பட்டதுமான கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு

ரூ.ப.இலட்சம்

| கடன்கள் | இ.அ. நி.கூ | | தே.அ.வ.(2) | | தே.சே.வ | | அ.ஈ.மு.வ | | கீ.அ. நி.கூ | | தே.வீ.அ. மே.ச | | மொத்தம் | | மொத்தக்கடன் களின் % | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 |
| 1. வேளாண்மை | 433 | 400 | 651 | 1.057 | - | - | 25 | 26 | - | - | - | - | 1,109 | 1,483 | 6 | 9 |
| 2. கைத்தொழில் | 3,560 | 2,223 | 3,437 | 3,979 | - | - | - | - | - | - | - | - | 6,997 | 6,202 | 36 | 36 |
| 3. சுற்றுலா | 1,056 | 447 | 11,17 | 301 | - | - | - | - | - | - | - | - | 2,173 | 748 | 11 | 4 |
| 4. வர்த்தகம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 0 | 0 | 0 | 0 |
| 5. நிதி | 434 | 569 | 70 | 35 | 1,600 | 999 | - | - | - | - | - | - | 2,104 | 1,603 | 11 | 9 |
| 6. வீடமைப்பு | - | - | 91 | 199 | 239 | 1,328 | 819 | 1,081 | 555 | 544 | 875 | 1,276 | 2,579 | 4.428 | 13 | 26 |
| 7. கடன்மீட்பு | - | - | - | - | - | - | 11 | - | - | - | - | - | 11 | 0 | 0 | 0 |
| 8. ஏனையகடன்கள் | 415 | 620 | 1,153 | 1,831 | 2,748 | 78 | 20 | 57 | - | - | - | - | 4,336 | 2.586 | 22 | 15 |
| மொத்தம் (ஒப்புதலளிக்கப் பட்டவை) | 5,898 | 4,259 | 6,519 | 7,402 | 4,587 | 2.405 | 875 | 1.164 | 555 | 544 | 875 | 1,276 | 19,309 | 17,050 | 100 | 100 |
| வழங்கப்பட்ட கடன்கள்(1) | 3687 | 2.851 | 4,011 | 5.537 | 4,587 | 2.405 | 738 | 1.164 | 469 | 468 | 373 | 519 | 13,865 | 12.944 | | |
| ஒப்புதலளிக்கப் பட்ட மொத்தக் கடன்களில் வழங்கப்பட்ட கடனின்% | 63 | 67 | 62 | 75 | 100 | 100 | 84 | 100 | 85 | 86 | 43 | 41 | 72 | 76 | | |

மூலங்கள்: இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
தேசிய சேமிப்பு வங்கி
அரச ஈட்டு முதலீட்டு வங்கி
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
தேசிய அபிவிருத்தி வங்கி
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

(1) முன்னயை ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்டு ஆய்விற்குரியஆண்டில் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்

(2) மீள் நிதுளிடல் கடன்களையும் ஒப்பரவு முதலீடுகளையும் உள்வடக்கும்

கடன் பகிர்ந்தளிப்பில் முறையே 11 சத வீதத்தினையும் 8 சதவிதத்தினையும ஈர்த்துக் கொண்டன. மின்வலு, வாயு மற்றும் நீர், சனசமூக நிலையம் மற்றும் சமூகப் பணிகள், போக்கு வரத்துப் பணிகள் போன்றவற்றை உள்ளடக்கிய மற்றைய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் 1995 இன் ரூ. 2,280 இலட்சத்திலிருந்து 1996 இல் ரூ. 2,250 இலட்சத்திற்கு வீழ்ச்சி யடைந்தன.

வெளிநின்ற மொத்தக் கடன்களில் 64 சதவீதம் நடுத்தர காலக் கடன்களாயும், 21 சதவீதம் நீண்டகாலக் கடன்களாயும், 15 சதவீதம் குறுங்காலக் கடன்களாயும் விளங்கி இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய கவனம் நடுத்தரகால நிதியிடல்களின் மீது குவிந்திருந்தமையைப் பிரதிபலித்தது. வெளிநின்ற மொத்தக் கடன்களில் 66 சதவீதம் ரூ. 50 இலட்சத்திற்கு மேற்பட்டனவாக இருந்தவேளையில் வெளிநின்ற மொத்தக் கடன்களில் 58 சதவீதம் சொத்துக்களை ஈடாகக்கொண்ட பிணைகளுக் கெதிராக வழங்கப்பட்டிருந்தன. இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் 33 சதவீதமான கடன்கள் 16 சதவீதத்திற்குக் குறைந்த வட்டிவீதங்களிலும், பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் 19 சதவீதம் 17.0 19.5 சதவீதத்தி லமைந்த வட்டி வீதத்திலும் மொத்தக் கடன்களில் 48 சதவீதம் 20 சதவீதத்திலும் அதற்குக் கூடுத லான வட்டி வீதங்களிலும் வழங்கப்பட்டன.

இ.அ.நி. கூட்டுத்தாபனம் பங்குடமை நிதியிடலாக 1994 இல் 20 கூட்டுநிலையங்களுக்கு வழங்கிய ரூ. 3,610 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ஐந்து கூட்டு நிலையங்களுக்கு ரூ. 1,310 இலட்சத்தினை வழங்கியது. பங்குடமை நிதியிடல் வசதிகளில் பெருந்தொகை (ரூ.1,080 இலட்சம்) கைத்தொழில்துறைக்கு வழங்கப்பட்ட வேளையில் ரூ. 130 இலடசம், மற்றம் ரூ.100 இலட்சம் கொண்ட தொகைகள் முறையே நிதியியல் துறைக்கும் சுற்றுலாத்துறைக்கும் வழங்கப்பட்டன.

இவ்வாண்டில் அ.நி. கூட்டுத்தாபனத்திலிருந்து நிதியத்தின் முக்கிய மூலங்களாக வாடிக்கையாளர்களின் கடன் மீள் கொடுப்பனவு மற்றும் (ரூ. 28,890 இலட்சம்) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றிலிருந்தான கடன்பாடுகள் (ரூ 9,730 இலட்சம்) என்பன விளங்கின.

மற்றொரு நீண்டகால கடன்வழங்கல் நிறுவனமான தேசிய அபிவிருத்தி வங்கி இவ்வாண்டில் 240 கடன்கள் தொடர்பாக ரூ.74,010 இலட்சம் பெறுமதியான கொடுகடனுக்கு ஒப்புதலளித்தது. ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக்கடன்கள் 1995 இனைப் போன்றே 1996 இலும் 14 சதவீதமாக காணப்பட்டது. கைத்தொழில் துறை கொடுகடனில் பெரும்பங்கினைப் பெற்று, இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் 54 சதவீதத்திற்கு வகை கூறியது. வேளாண்மைத்துறை ரூ.10,570 இலட்சத்தினைப் (மொத்தத்தில்14 சதவீதம்) பெற்றது. வேளாண்மைததுறை ரூ. 10,570 இலட்சத்தினைப் (மொத்தத்தில் 14 சதவீதம்) பெற்றது. தேறிய அபிவிருத்தி வங்கியிலிருந்து குறிப்பிடத்தக்களவு கொடுகடனைப் பெற்ற மற்றைய துறைகளாக சுற்றலா, நிதியியல், வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி என்பன விளங்கின. தேறிய அபிவிருத்தி வங்கியும் 12 செயற்றிட்டங்கள் தொடர்பாக ரூ. 6,430 இலட்சம் கொண்ட பங்குடமை நிதி வசதிகளை வழங்கியது. தேசிய அபிவிருத்தி வங்கியின் முக்கிய நிதி மூலங்களாக கடன்களின் மீளளிப்புக்கள் (55 சதவீதம்) ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றின் தொடர்கொடுகடன்களின் கீழான கடன்பாடுகள் (19 சதவீதம்) வெளிநாட்டுக்கடன்பாடுகள் (19 சதவீதம்) என்பன விளங்கின. 1995 இலும் இவையே நிதியத்தின் முக்கிய மூலங்களாக விளங்கின.

இவ்வாண்டில், அரச ஈட்டு முதலீட்டு வங்கி ரூ. 11,640 இலட்சம் பெறுமதி கொண்ட 8,348 கடன்களுக்கு ஒப்புதலளித்தது. இம் மொத்தத்தில் ரூ. 10,810 இலட்சம் பெறுமதி கொண்ட 7,986 கடன்கள் வீடமைப்புத் துறைக்கானதாக இருந்தன. வீடமைப்பு நோக்கங்களுக்கான முதன்மை வழங்குநர் என்ற அதன் பண்பினைப் பேணும் விதத்தில் 1996 இல் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் 93 சதவீதம் வீடமைப்பிற்கானதாக இருந்தவேளையில், மீதி வேளாண்மை மற்றும் கைத்தொழில் நோக்கங்களுக்கானதாக இருந்தன. வங்கியினால் வழங்கப்பட்ட பெரும்பாலான கடன்கள் ரூ.50 இலட்சத்திற்கும் குறைவாக இருந்ததுடன் நீண்டகாலக் கடன்கள் மொத்தத்தில் 94 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. அ.ஈ.மு வங்கி முக்கியமாக நிலம், சொத்து மற்றும் ஊ.சே.நிதிய நிலுவை என்பனவற்றை பிணையாகக்கொண்டு அவற்றுக்கெதிராக வசதிகளை வழங்கியது. வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 48 சதவீதம் 16 -18 சதவீத வீச்சினைக் கொண்ட வட்டிவீதத்தில் காணப்பட்ட வேளையில் 45 சதவீதமான கடன்கள் 20 சதவீதத்திற்குக் கூடுதலான வட்டியைக் கொண்டிருந்தது.

வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் வீடமைப்பு நோக்கங்களுக்கு 1995 இல் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.5,550 இலட்சம் கொண்ட 4,539 கடன்களுடன் ஒப்பிடுகையில் ரூ.5,440 இலட்சம் பெறுமதி கொண்ட 4,105 கடன்களுக்கு ஒப்புதலளித்தது. சொத்து ஈட்டிற்கு எதிராக வழங்கப்பட்ட பெரும்பாலான கடன்கள் (94 சதவீதம்) 15, 19 சதவீத வட்டி வீச்சிலேயே வழங்கப்பட்டன. வீ.அ.நி. கூட்டுத்தாபனத்தின் நிதியின் முக்கிய மூலங்களாக வெளிநாட்டிலிருந்தான கடன்பாடுகளும் நிலையான வைப்புக்களும் விளங்கின. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையும் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான கொடுகடன்களைத் தொடர்ந்தும் விரிவாக்கியது. 1996 இல் தே.வீ.அ. மேலாண்மைச் சபை வீடமைப்பு நோக்கங்களுக்காக ரூ. 127,600 இலட்சத்திற்கு ஒப்புதலளித்ததுடன் இதில் ரூ. 5,190 இலட்சம் இவ்வாண்டு காலத்தில் வழங்கப்பட்டது. இது 1995 இல் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ. 8,750 இலட்சம் பெறுமதி கொண்ட கடன்களுடனும் ரூ. 3,730 இலட்சம் மதிப்புக் கொண்ட கடன் பகிர்ந்தளிப்புக்களுடனும் ஒப்பிடத்தக்கதாகும். இவ்வனைத்துக் கடன்களும் தனியார் உத்தரவாதங்களைப் பிணையாகக் கொண்டு 14 சதவீத 15 சதவீத வட்டிகளில் வழங்கப்பட்டன. தே.வீ.அ. மேலாண்மைச் சபையினது நிதியின் மூலங்களாக அரச கொடைகள், வீடுகளின் விற்பனை, கடன் மீளமைப்புக்கள் என்பன விளங்கின.

## நிதிக் கூட்டு நிலையங்கள்

1996 இன் பெரும்பகுதியில் நாட்டில் தொழிற்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களின் எண்ணிக்கை 24 ஆகும். 1996 ஒற்றோபரில் பதிவு வழங்கப்பட்டதுடன் 1996 இன் இறுதியில் மத்திய வங்கியுடன் பதிவு செய்துகொண்ட நிதிக்கூட்டு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 25 ஆகியது. நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்தச் சொத்துக் களும் பொறுப்புக்களும் 1995 இன் ரூ. 150,850 இலட்சத்திலிருந்து 1996 இல் ரூ. 179,840 இலட்சங்களுக்கு அதிகரித்தது.

1996 இன் இறுதியில் வாடகைக் கொள்வனவு மற்றும் குத்தகை என்பனவற்றிற்கான மொத்த கடன்கள் முற்பணங்கள் ரூ. 12,860 இலட்சத்திற்கு 25 சதவீதத்தினால் அதிகரித்தன. முதலீடுகள், அரச பிணைகள், உதவுதொகைகள், இணைந்த கூட்டு நிலையங்கள், தாய்க் கூட்டு நிலையங்கள் மற்றும் ஏனைய முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய முதலீடுகள் ரூ.21,610 இலட்சத்திற்கு 10 சதவீதத்தினால் அதிகரித்தன.

அட்டவணை 10.12
பதிவு செய்யப்பட்ட நிதிக் கூட்டுநிலையங்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும்

ரூ. ப. இலட்சம்

| விடயம் | 1995 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 996 மார்ச் 31இல் உள்ளவாறு | 1996 யூன் 31இல் உள்ளவாறு | 1996 செத்தெம்பர் 31இல் உள்ளவாறு | 1996 திசெம்பர் 31இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | | | | |
| 1. மூலதனக் கணக்கு | 2,326 | 2,220 | 2,432 | 2,533 | 2,605 |
| 2 வைப்புக்கள் | 8,227 | 8,793 | 9,536 | 9,876 | 10,202 |
| 3 கடன்பாடுகள் | 1,812 | 1,243 | 1,124 | 1,269 | 1,454 |
| 4 ஏனைய பொறுப்புக்கள் | 2,720 | 3,372 | 2.962 | 3.137 | 3,724 |
| மொத்தம் | 15,085 | 15,628 | 16,053 | 16,815 | 17.984 |
| பொறுப்புக்கள் | | | | | |
| 1 கடன்களும் முற்பணங்களும் | 9.664 | 10,474 | 10,763 | 11,461 | 12,086 |
| 2 பங்கு முதலீடுகள் | 988 | 1,045 | 1,019 | 984 | 1,036 |
| 3 திறைசேரி உண்டியல்கள் | 976 | 951 | 1,080 | 1,031 | 1,125 |
| 4 ஏனைய சொத்துக்கள் | 3,457 | 3,158 | 2.192 | 3,329 | 3,737 |
| மொத்தம் | 15,085 | 15,628 | 16,053 | 16,815 | 17,984 |
| மத்திய வங்கிக்கு அறிக்கையிட்ட நிதிக் கூடுநிலையங்கள் | 24 | 24 | 24 | 24 | 24 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள நிதிக்கம்பனிகள் மட்டுமே நிதியியல் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள ஏனைய நிதிக் கம்பனிகள் மூடுவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குமாறு பணிக்கப் பட்டுள்ளன.

பொறுப்புக்களைக் கருத்திற் கொள்ளுகையில் 1996 இல் நிதிக் கூட்டுநிலையங்களின் வைப்புக்கள் 1995 இன் ரூ. 14,390 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 19,750 இலட்சத்தினால் உயர்வடைந்தன. நிதிக்கூட்டு நிலையங்களின் கடன்பாடுகள் 1995 இன் ரூ 18,120 இலட்சத்திலிருந்து ஒப்பிடுகையில் 1996இல் ரூ. 14,540 இலட்சத்தினால் உயர்வடைந்தன. அதேவேளை நிதிக்கூட்டு நிலையங்களின் மூலதனமும் ஒதுக்கு களும் இவ்வாண்டுக் காலத்தில் ரூ. 2,790 இலட்சத்தினால் அதிகரித்தன.

1996இல் ஓராண்டு நிலையான வைப்புக ளுக்கான வட்டி வீதங்கள் 18 சதவீதத்திற்கும் 21 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. ஒப்பீட்டு அடிப்படையில் வாடகைக் கொள்வனவு நடவடிக்கைகளுக்கான கடன் வழங்கும் வீதங்கள் 16-30 சதவீதத்திற்கிடைப்பட்ட வீச்சில் காணப் பட்டதுடன் பெரும்பாலான கம்பனிகளால் விதிகக்ப்படும் ஆகக்குறைந்த வீதம் 21 சதவீதத்தை விஞ்சிக் காணப்பட்டது. ஏனைய நோக்கங்க ளுக்கான கடன் வழங்கல் வீதங்கள் விரிவான மாறுபட்டுக் காணப்பட்டது.

மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்பட்ட நலிவுற்ற நிதிக் கம்பனிகளின் வைப்பாளர் களுக்கான நிவாரணத் திட்டம் 1996இலும் தொடர்ந்ததுடன், இவ்வாண்டில் மூன்று நலிவுற்ற நிதிக்கம்பனிகளின் வைப்பாளர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

## 10.10. சிறப்பியல்பு வாய்ந்தநிதியியல் நிறுவனங்கள்

### வணிக வங்கித் தொழில்

1995 இனைப் போன்ற 1996 இல் ஏழுவகை வங்கிகள் காணப்பட்டதுடன இதில் ஆறு வங்கிகள் தீவிரமாகத் தொழிற்பட்டன. இவ்வாண்டு வணிக வங்கித் தொழில் நடவடிக்கைகளில் பெரும் வளர்ச்சியைக் காட்டியமையின் காரணமாக மொத்த வருமானத்திதல் குறிப்பிடத்தக்க மேம் பாடும், மொத்தச சொத்துக்களில் மிதமான வளர்ச்சியும் எற்பட்டன.

1996 இறுதியில் வணிக வங்கிகளின் மொத்த வருமானம் ரூ. 23,310 இலட்சத்திற்கு 64 சதவீதத்

அட்டவணை 10.13
வணிக வங்கிகளின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

ரூ.ப. இலட்சம்

| | | 1995 | 1996(அ) |
|---|---|---|---|
| 1 | குத்தகையின் மீது பெறப்பட்ட வருவாய் | 460 | 559 |
| 2 | வர்த்தக உண்டியல்களின் கழிவின்மமீது வட்டி | 320 | 374 |
| 3 | நிதி மற்றும் சந்தைப்படுத்தல் ஆலோசனை | 37 | 38 |
| 4 | காப்புப் பொறுப்புத் தரகுகள் | 23 | 12 |
| 5 | காப்பறுதித் தரகுகள் | 3 | 2 |
| 6 | விளிம்பு வர்த்தகத்தின் மீதானவட்டி | 192 | 668 |
| 7 | பங்குகளின் முதலீட்டின் மீதான இலாபம் | 56 | 194 |
| 8 | திறைசேரி உண்டியல்களின் மீதானவட்டி | 17 | 123 |
| 9 | ஏனைய வருமானம் | 272 | 360 |
| 10 | மோத்த வருமானம் | 1,378 | 2,331 |
| 11 | மொத்தச் சொத்துக்கள் | 11,342 | 12,114 |

(அ) தற்காலிமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

தினால் அதிகரித்தது. விளிம்பு வர்த்தகத்தின் மீதான வட்டி, குத்தகையிலிருந்தான வருமானம், வர்த்தக உண்டியல்களின் கழிவிடலுக்கான வட்டி மற்றும் பங்குடமைகளில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்தான இலாபம் எனபன மொத்த வருவாயில் 77 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 1996 இல் வணிக வங்கிகளது வருவாயின் முக்கிய மூலங்களாகவும் விளங்கின. 1996 இல் இவ்வனைத்து மூலங்களும் வருவாயினை அதிகரித்துக் கொண்டன.

## குத்தகைக் கம்பனிகள்

இவ்வாண்டுக் காலத்தில் மூன்று குத்தகைக் கம்பனிகளின் குத்தகை நடவடிக்கைகள் அதிகரித்தன. இக் கூட்டு நிலையங்களின் மொத்தச் சொத்துக்கள் 1995 இறுதியில் ரூ 45,950 இலட்சத்திலிருந்து 1996 இறுதியில் ரூ.58,420 லட்சத்திற்கு உயர்வடைந்தன. கூட்டு நிலையங்களினால் வழங்கப்பட்ட மொத்த குத்தகை நிதி 13.6 சதவீதத்தினால் வீழ்சியடைந்து 1996 இறுதியில் ரூ. 19,210 இலட்சமாக விளங்கியது.

வர்த்தக ஊர்திகளுக்கான மொத்த குத்தகை நிதி ரூ. 10,430 இலட்சமாக அமைந்து மொத்த குத்தகை நிதியியல் 53 சதவீதமாக இருந்தது. அண்மைக் காலங்களில் அவதானிக்கப்படட்ட முக்கிய பண்பு ஒன்று யாதெனில் குத்தகைக் கம்பனிகள் முதலீட்டுப் பட்டியல் வாடகைக் கொள்வனவிலிருந்து குத்தகை நிதியிடலுக்கு மாறியமையாகும்.

குத்தகை கைத்தொழிலின் அபிவிருத்தியானது நாட்டின் நீண்டகால மூலதனவாக்கத்துக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே 1997 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளை நிலைத்து நிற்கச் செய்து அபிவிருத்தி செய்வதற்காக குத்தகைச் சொத்துக்களின் மீதான பெறுமானத் தேய்வுப்படி குத்தகை வருவாய்களுக்கு எதிலாக மட்டுமே எதரீடு செய்வதற்கான முன் மொழிவு அறிமுகப்படுத்தப்பட்டது.

## தொழில் முயற்சி மூலதனக் கூட்டு நிலையங்கள்

1996 இல் நாட்டில் தொழிற்பட்ட தொழில் முயற்சி மூலதனக் கூட்டு நடவடிக்கைகளின் மொத்த எண்ணிக்கை ஆறாக இருந்தது. இவ்வாண்டில் தொழில் முயற்சி மூலதனக் கூட்டு நிலையங்களின் நடவடிக்கைகள் அதிகரித்ததன் காரணமாக மொத்தச் சொத்தக்கள் 1995 இறுதியின் ரூ. 20,760 இலட்சத்திலிருநது 1996 இறுதியில் ரூ. 22,960 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1996 இல் செயற்றிட்ட பங்குடமையில் தொழில் முயற்சி மூலதனக் கூட்டுநிலையங்களினால் செய்யப்பட்ட முதலீடுகள் ரூ. 2,900 இலட்சத்தினால் (47 சதவீதம்) உயர்வடைந்தன. முன்னைய ஆண்டினைப்போன்றே, தொழில் முயற்சி மூலதனக் கூட்டு நிலையங்களினால் வழங்கப்பட்ட நிதியில் பெரும்பங்கு (65 சதவீதம்) , புதிய தொழிற் பாடுகளைத் தொடங்குவதற்கானதாக இருந்த வேளையில் நிதியிடலில் 32 சதவீதம் ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கானதாக இருந்தது. தயாரிப்புத்துறையில் செய்யப்பட்ட பங்கு முதலீடுகள் ரூ. 6,580 இலட்சமாகக் காணப்பட்ட வேளையில் பணிகள் மற்றும் வேளாண்மைத்துறைகள் முறையே ரூ. 2,390 இலட்சத்தையும் ரூ. 660 இலட்சத்தையும் பெற்றன.

## காப்புறுதிக் கூட்டு நிலையங்கள்

முன்னைய ஆண்டினைப்போன்றே 1996 இலும் நாட்டின் காப்புறுதி நடவடிக்கைகள் ஆறு காப்புறுதிக் கம்பனிகளினால் மேற்கொள்

ளப்பட்டன. ஆயுள் காப்புறுதி நடவடிக்கைகள், அதே போன்று பொதுக் காப்புறுதி நடவடிக்கை களும் இவ்வாண்டில் மேம்பாட்டினைக் காட்டின.

கூட்டுத்தாபனங்களினால் சேகரிக்கப்பட்ட மொத்த ஆயுள் காப்புறுதி 1995 இன் 38 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் ரூ. 27,610 இலட்சத்திற்கு 23 சதவீதத்தினால் அதிகரித்தது. காப்புறுதிக் கூட்டுநிலையங்களின் ஆயுள் நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ. 552,810 இலட்சத்தினை அடைந்து முன்னைய ஆண்டினை விட 10 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. நடைமுறையிலுள்ள காப்புறுதிப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 708,000 இற்கு 9 சதவீதத்தால் அதிகரிததது.

பொதுக் காப்புறுதி தீ விபத்து, கப்பல் மற்றும் மோட்டார் காப்புறுதிகளை உள்ளடக்கியி ருந்தன. 1996 இல் பொதுக்காப்புறுதி நடவடிக்கை கள் மீதான தேறிய கட்டுப்பணம் 1995 இன் 32 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் 19 சதவீதத்தினால் உயர்வடைந்தது. முன்னைய ஆண்டினைப்போன்று பொதுக் காப்புறுதி வகையில் மிகப்பெரும் துறையாகவுள்ள மோட்டார் காப்புறுதித்துறை 1995 இன் ரூ.14,520 இலட்சத் திலிருந்து 1996 இல் ரூ.15,890 இலட்சத்திற்கு அதிகரித்தது. தீ விபத்து கப்பல் காப்புறுதிகளின் தேறிய கட்டுப் பணம் முறையே 5 சத வீதத்தினாலும் 33 சத வீதத்தினாலும் 47 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன.

## 10.11 நாணயச் சந்தை

### பொதுவான போக்குகள்

ஆண்டின் பெரும்பாலான பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளின் வேகம் குறைந்து காணப்பட்டபோதும், 1996 இல் நாணயச் சந்தை சுறுசுறுப்பாகவும் உறுதியாகவும் காணப் பட்டது. சந்தையில் காணப்பட்ட அதிகரித்த திரவ நிலைமை 1995 இலும் பார்க்க குறைவான வட்டி விதங்களை விளைவித்ததுடன் அடிக்கடி மாறும் தன்மை மிகக் குறைவாக இருந்தமையும் எடுத்துக்காட்டியது. சனவரியில் மத்திய வங்கி மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட போதும் கூட நாணயச் சந்தை உறுதிப்பாட்டின் அளவினை மீண்டும் எடுத்துக்காட்டியுள்ளமையானது, இலங் கையின் நாணயச் சந்தையும் நிறுவனமய ஒழுங்கு முறைகளும் அமைப்பிற்கு கடுமையான அதிர்ச் சிகள் ஏற்பட்டாலும் போதுமானளவு எதிர்த்து நிற்கக்கூடிய தன்மையை விருத்திசெய்து கொண்டுள்ளமையை எடுத்துக்காட்டின. பெரும் பாலான முதலாந்தர திறைசேரி உண்டில் ஏலங்கள் பொதுமக்களினால் மேலதிகமாக

அட்டவணை 10.14
பணச்சந்தைத் தொழிற்பாடுகள்

(தொகை ரூ.ப. இலட்சங்களில்)

| காலம் | அழைப்புப்பணச்சந்தை | | முதன்மை திறைசேரி உண்டியல் சந்தை | | | | | | இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தக்கடன் வழங்கல் கடன்பாடு | காலமுடிவில் வெளிநின் றவை(அ) | மொத்த வெளிநின் றவை | வழங்கப் பட்ட தொகை | எற்றுக்கொள்ளப்பட்ட (கொள்வனவின்) தொகை | | | | மொத்த விற்பனைகள் | மொத்த கொள்வன வுகள் | காலமுடிவில் வெளிநின்ற நிலை |
| | | | | | மத்திய வங்கி | வர்த்தக வங்கிகள் | ஏனையவை | மொத்தம் | | | |
| 1994 | | | | | | | | | | | |
| 1 ஆம் காலாண்டு | 126,036 | 1,125 | 97,996 | 29,302 | 3,601 | 13,550 | 12,151 | 29,302 | 6,948 | 2,506 | 1,560 |
| 2 ஆம் காலாண்டு | 88,612 | 2,144 | 98,096 | 36,152 | 4,147 | 22,885 | 9,119 | 36,152 | 5,546 | 5,192 | 2,688 |
| 3 ஆம் காலாண்டு | 114,341 | 1,811 | 95,396 | 45,660 | 4,475 | 29,702 | 11,483 | 45,660 | 5,485 | 2,070 | 2,939 |
| 4 ஆம் காலாண்டு | 139,475 | 1,242 | 98,896 | 57,255 | 7,881 | 35,812 | 13,562 | 57,255 | 3,208 | 9,097 | 1,415 |
| 1995 | | | | | | | | | | | |
| 1 ஆம் காலாண்டு | 121,859 | 3,308 | 98,546 | 57,166 | 1,028 | 36,946 | 19,192 | 57,166 | 5,867 | 2,977 | 3,683 |
| 2 ஆம் காலாண்டு | 145,655 | 2,301 | 100,396 | 56,577 | 4,770 | 35,085 | 16,723 | 56,577 | 3,534 | 6,542 | 2,822 |
| 3 ஆம் காலாண்டு | 166,686 | 2,942 | 107,671 | 55,445 | 5,882 | 33,507 | 16,057 | 55,445 | 2,696 | 12,358 | 1,914 |
| 4 ஆம் காலாண்டு | 219,416 | 8,078 | 113,771 | 54,823 | 8,237 | 31,425 | 15,161 | 54,823 | 4,947 | 13,451 | 1,728 |
| 1996 | | | | | | | | | | | |
| 1 ஆம் காலாண்டு | 217,697 | 2,390 | 120,021 | 52,025 | 3,560 | 27,170 | 21,295 | 52,025 | 9,384 | 795 | 4,401 |
| 2 ஆம் காலாண்டு | 191,406 | 4,792 | 122,821 | 50,009 | 8,586 | 27,285 | 14,138 | 50,009 | 1,710 | 3,871 | 1,493 |
| 3 ஆம் காலாண்டு | 233,790 | 3,977 | 124,521 | 58,819 | 9,502 | 33,021 | 16,296 | 58,819 | 1,975 | 5,854 | 681 |

(அ) ஒவ்வொரு காலாண்டிலும் இறுதிக் கிழமையில் வெளிநிற்கும் தொகை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உதவப்பட்டன. நாணயச் சந்தைகளினூடான தொழிற்பாடுகளில், மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கையின் முக்கிய கருவியாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைக் கையாண்டது. உள்நாட்டு சந்தை விசைகளை குறிப்பாக சார்பு ரீதியில் உள்ளார்ந்த வீத பணவீக்கம் மற்றும் பன்னாட்டு செலாவணி வீதங்களில் அசைவு என்பனவற்றைக் கருத்திற்கொள்கையில், இடையீட்டு நாணயமான ஐ.அ.டொலருக்கான மத்திய வங்கியின் நடுவீதம் இவ்வாண்டுக்காலத்தில் ஏறத்தாழ 5 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

## வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை

1996 இல் அழைப்புப் பணச்சந்தை தொடர்ந்தும் விரிவடைந்தது. சிறிய வெளிநாட்டு வங்கிகளும் வர்த்தக வங்கிகளல்லாதவையும் பொதுவாக தேறிய கடன்பாட்டாளராக விளங்கிய வேளையில் உள்நாட்டு வர்த்தக வங்கிகள் முதன்மைக் கடன் வழங்குநராகக் காணப்பட்டன. ஆண்டு மொத்த புரள்வு 1995 இன் ரூ 654,000 இலட்சத்திலிருந்து 1996 இல் ரூ. 945,000 இலட்சதிற்கு (44.6 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பு) அதிகரித்தது. குறிப்பாக முதலாம் காலாண்டில் நிலவிய உயர்ந்த திரவ நிலைமையின் காரணமாக, அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் யூன் இறுதியில் 14.00-17.50 சதவீத மட்டத்திற்கு உயர்வதற்கு முன்னர் 1995 இறுதியின் 20.00 -58.00 சதவீதத்திலிருந்து 1996 மாச்சு இறுதியில் 9.60 - 10.80 இற்கு மிகக்கூடுதலாக வீழ்ச்சியடைந்தது. அதன்பின்னர் அழைப்பு பணச் சந்தை வீதங்கள் சிறிய தளம்பல்களுடன் குறுகிய வீச்சில் வேறுபட்டன. செத்தெம்பரில் அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் 13.30 - 25.00 சதவீத வீச்சில் காணப்பட்ட வேளையில் இவை திசெம்பரில் 13.00 - 31.00 சதவீதம் கொண்ட சிறிதளவு விரிந்த வீச்சிற்கு அசைந்ததுடன் திசெம்பர் இறுதியில் அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் 17.50 - 28.00 சதவிதத்தில் நிலைத்து நின்றன. 1996 இல் அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் 1995 திசெம்பர் 7 ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்ட ஆகக்கூடிய மட்டமான 102.00 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 ஒகத்து 1 ஆம் நாளன்று 35.00 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய மட்டத்தினை அடைந்தன.

## திறைசேரி உண்டியல் சந்தை

### (அ) முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை

திறைசேரி உண்டியல் ஏலங்களிலான மிதமிஞ்சிய கேள்வியும், வட்டிவீதத்தில் ஏற்பட பெருமளவான வீழ்ச்சியும் ஆண்டின் தொடக்கத்தில் சந்தையில் காணப்பட்ட திரவத்தன்மையைப் பிரதிபலிப்பதாக அமைந்தன. உண்மையில் 1996 இல் சில ஏலங்களில் மட்டுமே குறைவான உதவுதொகைகள் பெறப்பட்டிருந்தன. 1996 இல் முதலாந்தரச் சந்தையில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதியானது முன்னைய ஆண்டின் ரூ. 2,240,000 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 2,270,000 இலட்சமாக விளங்கியது. திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற மொத்த மட்டமானது 1995 இறுதியிலிருந்த ரூ. 1,140,000 இலட்சத்திலிருந்து 1996 இல் ஒற்றோபர் அளவில் ரூ. 1250,000 இலட்சததுக்கு அதிகரித்த தன் மூலம் திறைசேரி உண்டியல்கள் வாயிலாக பெறப்படும் அரச கடன்பாட்டுக்கான ஒப்புதலளிக்கபட்ட மேலெல்லையை அடைந்தது. இம் மேலெல்லையானது மேலும் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படுவதை தடுத்ததோடு விளைவு வீதங்களைக் கட்டுப்படுத்தவும் உதவியது.

மத்திய வங்கியானது முதலாந்தரச் சந்தையில் 1995 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 200,000 இலட்சம் பெறுமதிகொண்ட கொள்வனவுகளுக்கெதிராக 1996 இல் ரூ. 240,000 இலட்சம் பெறுமதிகொண்ட திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மத்திய வங்கியினால் ரூ. 69,000 இலட்சம் கொண்ட சிறப்பு வழங்கல்கள் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இச் சிறப்பு வழங்கல்களில் பெரும்பகுதி சனவரி 31 இல் ஏற்பட்ட குண்டுவெடிப்பினைத்தொடர்ந்து சந்தையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக மத்திய வங்கியினால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

திரவத்தன்மையானது திறைசேரி உண்டியல் ஒன்றுசேர்ந்தமையினால் 1996 இன் முதல் சில மாதங்களில் வீழ்ச்சியடைந்த வட்டி வீதங்கள் நவெம்பர் நடுப்பகுதியில் 18.25 - 17.98 சதவீத வீச்சுக்கு படிப்படியாக அதிகரித்தன. இவ்வீதங்கள் 1995 நவெம்பர் நடுப்பகுதிக்கான தொடர்பான வீதங்களைவிட ஏறக்குறைய 1.5 -

*2.5 சதவிதப் புள்ளிகள் குறைவாகக் காணப்பட்டன. அதன்பின்பு 1996 திசெம்பர் இறுதியில் இவ்வீதங்கள் 17.45 – 17.38 சதவீத வீச்சுக்கு வீழ்ச்சியடைந்தன.*

## (ஆ) மத்திய வங்கியின் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை

*இவ்வாண்டில் மத்திய வங்கி தனது இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளைத் தொடாந்தது. மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்கையிலிருந்தான திறைசேரி உண்டியல்களின் விற்பனைகள் (கழிவீடு செய்தல்) 1996 இல் ரூ. 160,000 இலட்சமாகக் காணப்பட்டன. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இவை ரூ. 170,000 இலட்சமாயிருந்தன. அதே வேளையில் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவுகள் (மீள் கழிவிடல்) சந்தையில் காணப்பட்ட திரவத்தன்மையை எடுத்துக் காட்டும் வகையில் 1995 இன் ரூ. 350,000 இலடசத்திலிருந்து 1996 ரூ. 160,000 இலட்சத்துக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன.*

*மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையானது கழிவு மற்றும் மீள் கழிவு வீதங்கள் முதலாந்தரச் சந்தை வீதங்களில் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து 1996 இல் சீராக்கம் செய்யப்பட்டன. 1995 இன் இறுதியில் 1.46 சதவீதப் புள்ளிகளாக விளங்கிய இவ்வீதங்களுக்கிடையிலான விரிவு பெப்புருவரி 16 இல் 2.00 சதவிதப் புள்ளிகளுக்கு அதிகரித்தது. இவ் விரிவானது மார்ச்சில் 3.00 சதவீதப் புள்ளிகளுக்கு அதிகரித்தது. மாற்றமடையும் வட்டி வீதங்களுடன் இணைந்து செல்லும் சதவீதத்தில் பல்வேறு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின் இவ்வங்கியானது திசெம்பர் 26 இல் 1.75 சதவீதப் புள்ளிகளுக்குக் குறைக்கப்பட்டது. மூன்றுமாத உண்டியல்களுக்கான கழிவு மற்றும் மீள் கழிவு வீதம் 1995 இன் இறுதியில் முறையே 19.01 சதவீதம் மற்றும் 20.47 சதவீதத்திலிருந்து 1996 இன் இறுதியில் 17.20 சதவீதத்தால் 18.95 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.*

## திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கி மீள் கொள்வனவுச் சந்தை

*மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழான திறைசேரி உண்டியல்களின் விற்பனையானது, அழைப்புப் பணச் சந்தையில் குறைந்த முடிவினை உறுதிசெய்யும் நோக்குடன் 1993 ஒற்றோபரில் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டது. மீள்கொள்வனவு வீதமானது, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தை வீதங்கள், அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் மற்றும் திரவத்தன்மை, பொதுவான பொருளாதார நிலைமைகள் மற்றும் கொள்கை பரிசீலிப்பு போன்ற காரணிகளைக் கவனத்திற்கெடுத்து மத்திய வங்கியினால் தினமும் தீர்மானிக்கப்படுகின்றது.*

*ஒரு இரவுக்குரிய மீள் கொள்வனவு வீதமானது 1995 திசெம்பர் இறுதியான 16.50 சதவீதத்திலிருந்த, சந்தைப் போக்கினை ஒத்திருப்பதற்காக யூனில் 12.75 சதவீதத்துக்கு அதிகரிக்கப்படமுன்பு மாச்சில் படிப்படியாக 9.50 சதவிதத்துக்குக் குறைக்கப்பட்டது. செத்தெம்பர் நடுப்பகுதிவரை 12.75 ஆக மாற்றமின்றியிருந்தது மீள் கொள்வனவு வீதமானது சிறிதளவால் உயர்ந்து 13.00 சதவீதமாகியது. நவெம்பர் இறுதியில் இது மேலும் உயர்த்தப்பட்டு 13.25 சதவீதமாக விளங்கியதெனினும், திறைசேரி உண்டியல் வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் குறைக்கப்பட்டு 1996 திசெம்பர் இறுதியில 12.75 சதவீதமாகக் காணப்பட்டது.*

*1995 ஆம் ஆண்டுக்கான ரூ. 1,980,000 இலட்சங்கொண்ட மீள் கொள்வனவு விற்பனைகளுடன் ஒப்பிடுகையில், முதலீட்டாளர்களின் பங்கேற்பினை எடுத்துக்காட்டும் வகையில் 1996 இல் இவை ரூ. 4,040,000 இலட்சமாகக் காணப்பட்டன.*

## திறைசேரி உண்டியலகளுக்கான மத்திய வங்கி நேர்மாற்று மீள் கொள்வனவுச் சந்தை

*அழைப்புச் சந்தைக்கான வட்டிவீத வீச்சினது மேலெல்லையை உறுதிப்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கியினது நேர்மாற்று மீள்கொள்வனவுத் திட்டம் – 1995 நவெம்பரில்*

அறிமுகப்படுத்தப் பட்டது. 1996 ஆம் ஆண்டில் திரவத்தன்மையானது சந்தையில் தொடர்ந்தும் காணப்பட்டமையினால் மத்திய வங்கி தனது நேர்மாற்று மீள்கொள்வனவுத் திட்டத்தினூடாக நிதியங்களைச் செலுத்தவேண்டிய அவசிய மேற்படவில்லை. இதன் விளைவாக 1996 இல் இத்திட்டம் செயலிழந்தது.

### உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

1996 இல் மத்திய வங்கியானது இடையீட்டு நாணயமாகிய ஐ.அ. டொலர்களுக்கான உடன் வாங்கல் மற்றும் விற்ற வீதங்களை நாளாந்தம் அறிவித்ததன்மூலம் தொடர்ந்தும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொழிற் பட்டது. 1995 இல் 1 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்கு அதிகரித்த உடன் வாங்கல் மற்றும் விற்றல் வீதங்களுக்கிடையிலான விரிவானது அதே மட்டத்திலேயே தொடர்ந்தும் பேணப் பட்டது. மத்திய வங்கியின் இடைவீதம் 1995இன் இறுதியில் ஐ.அ. டொலர் ஒன்றுக்கு ரூ. 540,475 ஆக விளங்கியமைக்கெதிராக 1996 இன் இறுதியில் ஐ.அ.டொலர் ஒன்று 567,050 ஆக விளங்கி ஐ.அ. டொலருக்கெதிராக ரூபாவின் 4.9 சதவீதப் பெறுமானத் தேய்வினைப் பிரதிபலித்தது. மத்திய வங்கியின் கொள்வனவுகள் 1995 இன் ஐ.அ. டொலர் 2020 இலட்சத்திலிருந்து 1996 இல் அ. டொலர் 960 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்து 52.4 சதவீத வீழ்ச்சியைக் காட்டின. இக் கொள்வன வுகள் யாவும் 1996 இன் முதல் எட்டு மாதங்க ளிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதே வேளையில் 1996 இல் மத்திய வங்கியினால் வர்த்தக வஙகிகளுக்குச் செய்யப்பட்ட ஐ.அ. டொலர்கள் விற்பனைகள் ஐ.அ. டொலர் 1,980 இலட்சமாக விளங்கியிருந்தன. ஒப்பிடுகையில் 1995 இல் ஐ.அ. டொலர் 90 இலட்சமாயிருந்தன. 1996 இல் வர்த்தக வஙகிகளினால் மத்திய வங்கி யிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தேறிய கொள்வனவுகள் ஐ.அ. டொலர் 1,020 இலட்சமாக விளங்கி வர்த்தக வங்கிகளின் அதிகரித்த வெளிநாட்டுச் செலா வணித் தேறிய விற்பனைகளைப் பிரதிபலித்தன.

### கரைகடந்த சந்தை

வர்த்தக வங்கியின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் (வெநாவபி) கரை கடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகள் 1995 இல் காணப்பட்ட விரிவுடன் ஒப்பிடின் வீழ்ச்சிய டைந்தன. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள்/ பொறுப் புக்கள் 3 சதவீதத்தால் (ஐ.அ. டொலர் 460 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது, 1996 இறுதியில் ஐ.அ. டொலர் 14,300 இலட்சமாக விளங்கின. இச்சுருக்கத்துக்கான முக்கிய காரணம் வதிவற் றோர் பிரிவின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியேயாகும்.

சொத்துப் பக்கத்தில் வதிவற்றோருக்கான முற்பணங்கள் ஆண்டிறுதியில் 12 சதவீதத்தால் (ஐ.அ. டொலர் 690 இலட்சம்) வீழ்ச்சியடைந்த வேளையில், வதிவோர் பிரிவுக்கானவை 1995 திசெம்பர் இறுதியினது ஐ.அ. டொலர்ட 8,350 இலட்சத்திலிருந்து 1996 திசெம்பர் இறுதியில ஐ.அ. டொலர் 8,560 இலடசத்தக்கு 3 சதவீதத்தால் (ஐ.அ. டொலர் 210 இலட்சம் ) அதிகரித்தன. இது தொடக்கத்தில் முதலீட்டுச்சபையின் அதிகார எல்லையின் கீழ்வரும்தொழில் முயற்சிளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களில் பிரதிபலித்தது.

பொறுப்புக்கள் பக்கத்தில், வதிவற்றோர் வகையினது வைப்புப் பொறுப்புக்களும் 10 சதவிதத்தால் (ஐ.அ.டொலர் 670 இலடசத்தால்) வீழ்ச்சியடைந்தவேளையில், வதிவோரது வைப்புப் பொறுப்புக்கள் 3 சதவீதத்தால் (ஐ.அ .டொலர் 180 இலடசம்) அதிகரித்தன. உள்ளூர் வங்கிகளினால் அவற்றின் வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்கெதிராகப் பெறப்பட்ட நிதியங்கள் வீழ்ச்சியடைந்தன. எனினும், முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளினால் குறிப்பாக வெளிநாட்டு டைமையான தொழில் முயற்சிகளினாலும் ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட பிரிவுகளினாலும் பேணப் பட்ட நிலுவைகளில் ஏற்பட்ட பெருமளவான அதிகரிப்புக்கள் வதிவற்றோர் வகையின் வைப்புப் பொறுப்புக்களிலான மொத்த அதிகரிப்பை விளை வித்தன.

## 10.12 மூலதனச் சந்தை

கொழும்புப் பங்குச் சந்தையானது 1994 இலிருந்து அவதானிக்கப்பட்ட கீழ்நோக்கிய போக்கினையே தொடர்ந்து கொண்டிருந்த போதிலும் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதி

யில் முதலீட்டாளர்களின் ஆர்வக்கொள்கையி லேற்பட்ட முன்னேற்றத்தினால் சிறுமீட்சி காணப் பட்டது. சந்தையில் காணப்பட்ட தொடர்ச்சியான தாழ்வுக்கு வெளிநாட்டுப் பங்கேற்பு குறை வாயிருந்தமை, தொழிலாளர் பிரச்சினை, அதிகரித்த பயங்கரவாத நடவடிக்கைகள் நகரி லேற்பட்ட குண்டுவெடிப்பு, மின்சார நெருக்கடி போன்றவையே காரணமாகும். இலங்கையரல் லாதோரின் நடவடிக்கைகள் குறைவாகக் காணப்பட்டபோதிலும் குறைந்த விற்பனைகளின் காரணமாக அவர்கள் தேறிய கொள்வனவா ளர்களாக விளங்கினர். பெருந்தோட்டமில்லா கூட்டு நிலையங்களினால் 1996 இல் மேற் கொள்ளப்பட்ட நான்கு ஆரம்பப் பொது வழங்கல் களில் (ஆ.பொ.வ.) மூன்று வழங்கல்களுக்கு மேலதிகமாக உதவுதொகைகள் பெறப்பட்டன. அத்துடன் நான்கு தனியார் மயப்படுத்தப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகளின் 51 சதவீதமான பங்குத்தொகுதிகள் எல்லாம் அல்லது ஒன்று மில்லை என்ற அடிப்படையில் ஆகக்கூடிய விலைகோருநருக்கு விற்பனை செய்யப்பட்டன. இது தனியார் மயப்படுத்தப்பட்ட கம்பனிகள் சந்தைக்கு அனுமதிக்கப்படவதற்கான பொறி முறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களின் விளைவாகும்.

### அட்டவணை 10.15
### பங்குச் சந்தைக் குறிகாட்டிகள்

| | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|
| 1. சந்தை மூலதனவாக்கம் (ப.இ.ரூ) | 123,790 | 143,210 | 106,869 | 104,197 |
| 2. புதிய வழங்கல்களின் எண்ணிக்கை (எண்ணிக்கை) | 12 | 21 | 17 | 8 |
| 3. வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ) | 42 | 190 | 100 | 64 |
| 4. வழங்கப்பட்ட புதிய பங்குகளின் பெறுமதி (ரூ.ப.இ) | 1,051 | 4,589 | 2,120 | 2,178 |
| 5. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.ப.இ) | 351 | 506 | 315 | 227 |
| 6. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.ப.இ) | 18,579 | 34,522 | 11,249 | 7,403 |
| 7. விலைக்குறிகாட்டி-கொ.ப.ப. இன் முழுவதும் | 605.3 | 986.7 | 663.7 | 603.0 |
| (31திசெம்பரில் உள்ளவாறு) கொ.ப.ப. வின் உணர்விலைச் சட்டெண் (321 திசெம்பரில் உள்ளலாறு) | 826.5 | 1,438.8 | 990.5 | 897.7 |

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

## முதலாந்தரச் சந்தை

1995 இல் காணப்படட பதினேழு வழங்கல் களுடன் ஒப்பிடுகையில் 1996 இல் மொத்தமாக எட்டு ஆரம்பப் பொது வழங்கல்கள் காணப் பட்டன. இவற்றில் வரையறுக்கப்பட்ட லங்கா லுபிரிகன்ஸ், வரையறுக்கப்பட்ட அசோசியேட்டட் கோட்டல் கம்பனி, வரையறுக்கப்பட்ட தேயிலை சிறு உடைமையாளர் தொழிற்சாலைகள். வரைய றுக்கப்பட்ட லயன் ப்றேவரி சிலோன் ஆகிய நான்கு பெருந்தோட்டமல்லா கம்பனிகளாகக் காணப்படுகையில் வரையறுக்கப்பட்ட அக்கரப் பத்தன பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட கடுகஸ் கந்த பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட பலாங் கொட பளான்டேசன்ஸ், வரையறுக்கப்பட்ட உடுபுசல்லாவ பிளான்டேசன்ஸ் ஆகிய நான்கு பெருந்தோட்டக் கம்பனிகளும் அரசினால் மேற் கொள்ளப்பட்டுவரும் தனியார் மயத்திட்டதின் ஒருபகுதியாக சந்தைக்கு அனுமதிக்கப்பட்டி ருந்தன. ஐம்பத்தொரு சதவீதமான பெரும்பகுதி பங்குடமை செய்தீர்க்கப்பட்ட பொறிமுறையில் மாற்றமொன்று ஏற்படுத்தப்பட்டது. புதிய செயல்முறையின் கீழ் பங்குகளானவை எல்லாம் அல்லது ஒன்றுமில்லா அடிப்படையில் தொடர்ந்தும் விற்பனை செய்யப்பட்டதெனினும் ஏலத்துக்கு விடப்பட்டுமிருந்தன. இது பங்கொன் றுக்குப் பெறப்பட்ட விலையானது முகப்புப் பெறுமதியை விட குறிப்பிடத்தக்களவில் உயர்வான தாயிருக்கும் தன்மையை விளைவித்தது. 1996 காலப்பகுதியில் பெருந்தோட்டமில்லாக் கம்பனிக ளினால் மேற்கொள்ளப்பட்ட நான்கு ஆரம்ப பொது வழங்கல்களின் மொத்த சந்தைப் பெறுமதி (பங்குக் கட்டுப்பணம் உட்பட) ரூ. 2,780 இலட்சமாயிருநதது. ஒப்பிடுகையில 1995 இல் ஆரம்ப வழங்கல்களினூடாக ரூ.21,210 இலட்சம் கொண்ட மொத்தப் பெறுமதி பெறபபட்டதுடன் "அனைத்தும் அல்லது ஒன்றுமில்லாத" அடிப்படையில் பெருந்தோட்டக் கம்பனிகளின் 51 சதவீதமான பங்குடைமைகளின் விற்பைகளி னூடாகப் பெறப்படட தொகையையும் உள்ளடக்கி யிருநதது.

**வரைபடம் 10.4**
**பங்குச் சந்தைக் குறிகாட்டிகள்**

**வரைபடம் 10.4.1**
**பங்கு விலைக் குறிகாட்டிகள்**
**(1985=100)**




**வரைபடம் 10.4.2**
**பங்கு சந்தை கொடுக்கல்/வாங்கல்கள்**




**வரைபடம் 10.4.3**
**இலங்கையர் அல்லாதோரின் பங்கேற்பு**




## இரண்டாந்தரச் சந்தை

1994 இல் வீழ்ச்சியடையத் தொடங்கிய கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினது அனைத்து பங்கு விலைச் சுட்டெண்ணும் (அ.ப.வி.சு.) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் உணர் விலைச் சுட்டெண்ணும் 1996 சனவரியிலிருந்து மாச்சு வரையில் சிறிதான மேல்நோக்கிய அசை வினைப் பதிவு செய்த வேளையில் யூலை வரைக் கும் தொடர்ந்தும் விழ்ச்சியைக் காட்டியிருந்தன. இந்த இரண்டு சுட்டெண்களிலும ஓகத்திலிருந்து நவெம்பர் வரையில் மீண்டுமொரு மேல்நோக்கிய அசைவு காணப்பட்டது. ஆண்டுத்தொடக்கத்தில் 663.7 ஆகவும் 990.5 ஆகவும் ஆரம்பித்த அனைத்து பங்கு விலைச் சுட்டெண்ணும் உணர் விலைச் சுட்டெண்ணும் ஆண்டு இறுதியில் முறையே 603.0 ஆகவும் 897.7 ஆகவும் விளங்கின. இதன் படி, அமைத்து பங்கு விலைச் சுட்டண்ணும் உயர்விலைச் சுட்டெண்ணும் 1996 இல் முறையே 9.2 சதவீதமானதும் (60.7 சுட்டெண் புள்ளிகள்) 9.4 சதவீதமானதுமான (92.8 சுட்டெண் புள்ளிகள்) முழுமையான வீழ்ச்சிகளை எடுத்துக்காட்டின.

அட்டவணை 10.16
முதலீட்டு வகை அடிப்படையில் புதிய பங்கு வழங்கல்களின் எண்ணிக்கை

| முதலீட்டுவகை | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|
| வங்கி, நிதி, காப்பறுதி | 1 | 3 | 6 | 2 | - |
| குளிர்பானங்கள் உணவு புகையிலை | 2 | - | 3 | - | 1 |
| இரசாயனமும் மருந்தாக்கலும் | - | - | - | - | 1 |
| பள்முகப்படுத்தப்பட்ட | - | - | - | - | - |
| காலணிகளும்பிடவைகளும் | 1 | - | 1 | - | - |
| உணவகங்களும் பயணங்களும் | 4 | 4 | - | 1 | 1 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | - | - | - | - | - |
| காணியும் சொத்தும் | - | - | 1 | - | - |
| தயாரிப்பு | - | 2 | 4 | 5 | - |
| உந்திகள் | 3 | 1 | 6 | - | - |
| ஒயில்பாம் | - | - | - | - | - |
| பயிர்ச்செய்மை | - | - | - | 9 | 5 |
| பணிகள் | 1 | - | - | - | - |
| களஞ்சியங்களும் நிரம்பல்களும் | - | - | - | - | - |
| வாத்தகம் | 3 | 2 | - | - | - |
| மொத்தம் | 15 | 12 | 21 | 17 | 8 |
| கோரப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.) | 78 | 42 | 190 | 100 | 64 |
| மோரப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.ப.இ. | 1,267 | 1,050 | 4,589 | 2,120 | 2,178 |

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் சந்தை மூலதன மயமாக்கல் ஆண்டின் தொடக்கத்தில் ரூ. 1,069,000 இலட்சமாக விளங்கி யூலை இறுதியில் ரூ. 927,000 இலட்சத்துக்கு வீழ்ச்சியடையுமுன் மாச்சு 15 இல் ரூ. 1,184,000 இலட்சமாக உயர்வடைந்தது. திசெம்பர் இறுதியில் இது ரூ. 1,042,000 இலட்சமாகக் காணப்பட்டதுடன் ஆய்வின் கீழான காலப்பகுதியில் ரூ. 27,000 இலட்சம் கொண்ட வீழ்ச்சியொன்றைப் (2.5 சதவீதம்.) பிரதிபலித்தது. இலங்கையின் சந்தை மூலதனமயமாக்கல ஒரு சில முக்கிய இருப்புக்களின் பெருமளவு செல்வாக்குக்கு உட்பட்டிருக்கிறது. இவற்றில் நிதியியல் துறை நிறவனங்கள் முன்னணியில் உள்ளன. இரு அபிவிருத்தி வங்கிகள் இ.சு.நி. கூட்டுத்தாபனம் தே.அ. வங்கிகள், ஆகியனவும் , ஜோன்கீல்ஸ் கோல் டிங்ஸ், அட்டன் நசனல் வங்கி, கேலீஸ், இலங்கை புகையிலை, வர்த்தக வங்கி, ஏசியன் கோட்டல் கூட்டுத்தபானம், சம்பத் வங்கி, டிஸ்ரிலரீஸ் கம்பனி ஆகியன சந்தை மூலதன மயமாக்கலின் அடிப்படையில் மிகப்பெரிய கம்பனிகளாகும். இப்பத்து கம்பனிகளும் 1996 இறுதியில் இலங்கையின் பங்குச் சந்தையினது மொத்த சந்தை மூலதன மயமாக்கலின் ஏறக்குறைய 38 சதவீதத் துக்கு வகைகூறியிருந்தன. ஆண்டின் இறுதியில் மிகச் சிறந்த 10 கம்பனிகளில் ஐந்து வங்கித் தொழில் நிறவனங்கள் காணப்பட்டதுடன் இவ்வ னைத்து நிறவனங்களும் மொத்த சந்தை மூலதன மயமாக்கலின் 21 சத வீதத்துக்கு வகைகூறியிருந்தன.

வர்த்தக நடவடிக்கைகளில் காணப்பட்ட வீழ்ச்சியடையும் போக்கு 1996 இலும் தொடர்ந்தது. கம்பனிகள் சட்டதின்கீழ் இலங்கையில் ஏறக்குறைய 2,000 பொதுக் கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டிருந்தாலும் 1996 திசெம்பர் இறுதியில் 235 கம்பனிகள் மட்டமே கொழும்பு பங்கு பரிவர்தனையில்(கொ.ப.ப) பட்டியலிடப்பட்டிருந்தன. மேலும் கொழுமபு பங்குப் பரிவர்த்தனைப் பதிவுகளின்படி பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் 25-35 கம்பனிகள் மட்டுமே ஒழுங்காக வர்த்தகத்தில் ஈடுபடடிருந்தன.

1996 இல் மொத்தப் புரள்வானது 1995 இன் ரூ. 113,000 இலட்சத்திலிருந்து ரூ. 74,000 இலட்சத்துக்கு (34 சதவீதம் வீழ்ச்சி) வீழ்ச்சியடைந்தது. நாளாந்தப் புரள்வானது 1995 இன ரூ.495 இலட்சத்திலிருந்து 1996 இல் ரூ. 306 இலட்சததுக்கு வீழ்ச்சியடைந்தது. வர்த்தகம் செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை 1995 இன் 186,276 இலிருந்து 1996 இல் 98,191 இற்கு குறிப்பிடத்தக்களவில் (47 சதவிதம் ) வீழ்ச்சியடைந்தது.

சனவரியில் ரூ.8,780 இலட்சமாகக் காணப்பட்ட மாதாந்தப் புரள்வு, திசெம்பரில் ரூ. 7,820 இலட்சத்துக்கு மேல்நோக்க அசைய முன்னர் யூலையில் ரூ.2,470 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. ஆய்வின் கீழான காலப்பகுதியில் மாதாந்தப் புரள்வானது மாச்சில் ரூ. 9,410

அட்டவணை 10.17
கம்பனிகளின் புதிய பங்கு பழங்கல் - 1996

| | கம்பனியின் பெயர் | வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | முகப்பு பெறுமதி ரூபா | கட்டுப் பணம் ரூபா | பங்குகளின் பெறுமதி ரூபா ப.இ. | பொதுமக்களினால் உதவு தொகை செலுத்தப் பட்ட பங்குகள் | காப்புறுதியாளரால் மேற்கொள்ளப் பட்ட பங்கு களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ரீ ஸ்மோல்ஸ் ஹோல்ட் பக்ரரீஸ் லிமிரெட். | 5,850,000 | 10 | 2.00 | 70 | 5,850,000 | - |
| 2 | லங்கா லுப்ரிகன்ட் லிமிரெட். | 11,700,000 | 10 | 40.00 | 585 | 2,048,200 | 9,651,800 |
| 3 | அக்ரபத்தன பிளான்டேஷன் லிமிரெட். | 7,599,000 | 10 | 25.25 | 268 | 7,599,000 | - |
| 4 | அசேரிசேயட்டட் ஹோட்டல்ஸ் கம்பனி லிமிரெட். | 1,040,760 | 10 | 15.00 | 26 | 1,040,760 | - |
| 5 | ஹப்புக்ஸதன்ன ப்ளான்டேஷன் லிமிரெட். | 10,200,000 | 10 | 13.75 | 242 | 10,200,000 | - |
| 6 | பலாங்கொடை பிளான்டேஷன் லிமிரெட். | 10,200,000 | 10 | 31.25 | 421 | 10,200,000 | - |
| 7 | உடபுசல்லாவை பிளான்டேஷன் லிமிரெட். | 4,845,000 | 10 | 55.25 | 316 | 4,845,000 | - |
| 8 | த லயன் புருவரி சிலோன் லிமிரெட். | 12,500,000 | 10 | 10.00 | 250 | 12,500,000 | - |

மூலம் : கொழும்பு பங்க பரிவர்த்தனை

**அட்டவனை 10.18**
**1996 இல் இரண்டாந்தரப் பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் வகைப்படியான பரம்பல்**

| முதலீடுகளின் வகை | கொடுக்கல் வாங்கல் களின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை '000 | பெறுமதி (ரூ.ப.இ.). |
|---|---|---|---|
| வங்கி, நிதி, காப்பறுதி | 31,954 | 52,717 | 3,269 |
| குளிர்பானங்கள் உணவுப்புகையிலை | 13,176 | 38,045 | 529 |
| கட்டவாக்கம் பொறியியல் | 1,933 | 9,651 | 111 |
| இரசாயணமும் மருந்தாக்கலும் | 1,353 | 735 | 44 |
| பன்முகப்படுத்தப்பட்ட | 7,050 | 3,566 | 1,720 |
| காலணிகளும்பிடவைகளும் | 2,616 | 1,952 | 17 |
| உணவகங்களும் பயணங்களும் | 4,497 | 11,864 | 158 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | 598 | 398 | 8 |
| காணியும் சொத்தும் | 3,830 | 10,653 | 79 |
| தயாரிப்பு | 26,209 | 51,742 | 1,047 |
| உந்திகள் | 2,033 | 4,141 | 146 |
| ஒயில்பாம் | 13 | 26 | 8 |
| பயிர்ச்செய்மை | 1,008 | 5,749 | 137 |
| பணிகள் | 590 | 497 | 14 |
| களஞ்சியங்களும் நிரம்பல்களும் | 105 | 226 | 21 |
| வாத்தகம் | 1,226 | 2,493 | 78 |

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

இலட்சமாக அதன் உச்ச மட்டத்தையடைந்தது. வங்கிகள், நிதி மற்றும் காப்புறதித்தறையானது மொத்தப் புரள்வில் 44 சதவீதத்துக்கு வகைகூறிய வேளையில், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி, வர்த்தக வங்கி மற்றும அட்டன் நசனல் வங்கி ஆகியன இததுறையில் 79 சதவீதப் பங்களிப்பினைக் கொண்டிருந்தன. இதில் இரு அபிவிருத்தி வங்கிகளும் 48 சதவீதத்துக்கு வகை கூறியிருந்தன.

மேலும் சந்தை விலை வருவாய் விகிதம் தொடர்ந்தும் வீழச்சியுறும்போக்கு ஒன்றினைக் காட்டியது. தொடக்கத்தில் 11.2 சதவீதமாகக் காணப்பட்ட சந்தை விலை வருவாய் விகிதம் 1996 திசெம்பர் இறுதியில் 10.7 சதவீதமாக அமைந்தது.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள், தொடரும் யுத்தம், தொழிலாளர் அமைதியின்மை மற்றம் வலு நெருக்கடி ஆகியவற்றின் காரணமாக பொருளாதாரச் சூழலில் காணப்படும் நிலையற்ற தன்மையானது, கொழும்பு பங்குச சந்தையில் வெளிநாட்டவரின் பஙகேற்பினை ஊக்குவிக்கா மைக்கான முக்கிய காரணமாகக் கூறப்படு கின்றது. இந் நடவடிக்கைகள் ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும் 1995 இல் ரூ 897 இலட்சம் பெறமதிகொண்டதேறிய விற்பனை யாளராக விளங்கியிருந்தமைக்கெதிராக 1996 இலங்கையர் அல்லாதோர் ரூ. 3,516 இலட்சம் பெறுமதி கொண்ட மொத்தத்தேறிய கொள்வன வாளராக விளங்கினர்.

1995 ஆம் ஆண்டுக்கான இலங்கையரல் லாதோரின் கொள்வனவுகள் மற்றும் விற்பனை கள் ஆகிய இரண்டையும ஒப்பிடுகையில 1996 இல் இவை குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சிய டைந்தன. இலங்கையரல்லாதோரின் விற்பனை கள் வீழ்ச்சியடைந்தமை தற்போது நடைமுறையி லுள்ள ஆகக்குறைந்த விலைகளில் விற்பனை செய்ய விரும்பாமையை ஓரளவு பிரதிபலிப்பதாக கூறலாம். ஆய்வின்கீழான காலப்பகுதியில் வெளி நாட்டுப் பங்கேற்பானது முன்னைய ஆண்டினை 59.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்தப் புரள்வில் 54.7 சதவிதத்தக்கு வகைகூறியது.

## துறைவகைப்படியான செயலாற்றம்

துறைவைப்படியான விலைச் சுட்டெண் களின் அசைவுகள் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட துறைவகைப்படியான செயலாற்றதின் ஆய் வொன்றானது மொத்தமான 16 துறைகளில் குடிபானங்கள், உணவும் புகையிலையும், இரசா யனங்களும் மருந்தாக்கல்களும் ,கட்டடவாக்கமும் பொறியியலும், பன்முகப்படுத்தப்படடவை, எண் ணெய்த் தாவரங்கள் பெருந்தோட்டங்களும் பணிகளும் ஆகிய ஏழு துறைகளும் 1996 திசெம்பர் இறுதியில் தமது விலை மட்டங்களைப்பேணக் கூடியதாயிருந்தமையை எடுத்துக்காட்டுகிறது. பெருந்தோட்டத் துறையானது 125.3 சதவீதமான சுட்டெண் பெறுகையினை கொண்டு வெற்றிகர மாகச் செயலாற்றிய வேளையில், காலணி மற்றும் புடவைத்துறையே விலைச் சுட்டெண்களில் 28.1 சதவீதங்கொண்ட விழ்ச்சியுடன் ஆகக்கூடிய இழப்பினைக்கொண்டிருந்தது. முதலீட்டு நம்பிக்கை, தயாரிப்பு, உணவகங்களும் பயணங் களும் மோட்டார் மற்றும் வங்கிகள் நிதியும் காப்புறுதியும் ஆகியனவே கடுமையாகப் பாதிக்கப் பட்ட ஏனைய துறைகளாகும்.

கூட்டுத்துறையின் இலாபத்தன்மை 1996 இறுதியில் மேம்பாடு ஒன்றைக் காட்டியது. ஏனைய பெரும்பாலானவற்றை விட வங்கித் தொழில் துறை அதிகளவு உறுதிப்பாட்டையும் தாக்குப் பிடிக்கும் தன்மையும் காட்டியது.

ஆண்டின் ஏனைய காலாண்டுகளுக்கு மாறாக மின்வெட்டு மற்றும் தொழிலாளர் பிரச்சினை காணப்படாமையால் 4ஆம் காலாண்டில் கம்பனிகளின் இலாபம் அதிகரித்தது.

## பிரதேச பங்குச் சந்தைகள்

ஆசிய பசுபிக் பங்குச் சந்தைகள் 1996 காலப் பகுதியில் முன்னேற்றங்கள் மற்றும் வீழ்ச்சி களுக்கிடையில் ஏறக்குறைய சமமாகப் பிரிக்கப் பட்டிருந்தன. தைபேயானது ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மிகவும் வெற்றிகரமான சந்தையாகக் காணப்படுகையில் பாங்கொக் சந்தை மிகவும் மோசமானதாகக் காணப்பட்டது. வெளியிடப்பட்ட தரவின் அடிப்படையில் தைபே நிறையேற்றப்பட்ட விலைச் சுட்டெண்ணானது வெளியிடப்பட்ட தரவின் அடிப்படையில் 40.7 சதவீதத்தைப் பெற்றவேளையில் பாங்கொக் பங்குப் பரிவர்த்தனைப் புரள்வுச் சுட்டெண் ணானது 52 கிழமைககாலப் பகுதியில் 42.3 சதவீதத்தை இழந்தது. மேலும்,சிட்னி, கோலாம்பூர், ஜகார்த்தா, கொங்கொங், பம்பாய், மணிலா ஆகிய சந்தைகளில் இலாபங்கள் பதிவு செய்யப் பட்டிருக்கையில் கராய்ச்சி, சியோல், கொழும்பு, டோக்கியோ, சிங்கப்பூர் ஆகிய சந்தைகள் இழப்புக் களைப் பதிவுசெய்திருந்தன.

## சந்தையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள்

கொழும்புப் பங்குச் சந்தை 1996 இல் தனது நூறாவது ஆண்டு நிறைவைக் கொண்டா டியது. சந்தை நடவடிக்கைகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும, பரிவர்த்தனைச் செயற் பாட்டினை முன்னேற்றுவதற்காக மேலும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை பிணைகள் மற்றும் செலாவணி ஆணைக்குழு (பி.செ.ஆ), கொழும்பு பங்குப் பரிவர்த்தனைத் தளத்தில் கருமபீடச்சபையினூடாக மேற்கொள் ளப்படும் தொழிற்பாடுகளுக்கான ஒப்புதல்களை வழங்கியது. கருமபீடச்சபை தனது தொழிற்பாடு களை 1996 யூலை 1இல் ஆரம்பித்தது. கருமபீடச் சபை அமைக்கப்பட்டதன் நோக்கம் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியல் படுத்தப் படாத பொதுக் கம்பனிகளின் பிணைகளினது வர்த்தகத் தொழிற்பாடுகளை எளிதாக்குவதாகும். கருமபீடச்சபையில் பங்குபற்றும் கம்பனிகள் பட்டியலிடப்பட்ட கம்பனிகளாகக் கருதப்படா ததுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பொதுவான பட்டியல் தேவைப்பாடுகளினால் கட்டுப்படுத்தப்படாமலிருக்கும். கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் செயல்முறை யானது சோர்வு மிக்கதாயும் அதிக நேரத்தை எடுப்பதாயும் செலவு கூடியதாயும் இருப்பதனால், நிதியைத் திரட்டுவதற்காக பொதுமக்களுக்கு பங்குகளை விற்ற பல சிறிய மற்றும் நடுத்தர கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் முன்னைய பொறிமுறையில் பங்கேற்பதற்குத் தயக்கம் காட்டுகின்றன. கருமபீடச் சந்தையானது இக் கம்பனிகளுக்கு அவற்றின் பங்குகளினது இரண்டாந்தர வர்த்தகத்தினை எளிதாக்கு வதற்கான சந்தர்ப்பம் ஒன்றினை வழங்குகிறது. இக் கருமபீடச் சபைமுறையானது நியாயமான அளவில் பரந்த அடிப்படையிலான உடைமை யைக் கொண்ட கம்பனிகளுக்கு மிகவும் பயனுடை யதாகும். கருமபீடச் சபையில் பதிவுசெய்தலானது பட்டியலிடப்படாத பொதுக் கம்பனிகள் தனியார் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதைத் தடை செய்யாது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது படுகடன் பிணைகள் சபையொன்றையும் நிறுவி யுள்ளது. இப்படுகடன் கிளைகள் சபையின் நோக்கம் படுகடன் பிணைகளுக்கான இரண்டாந் தரச் சந்தை ஒன்றினை பிரபல்யப்படுத்துவதாகும். பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும் இணைந்து இச் சந்தைக்கான செயல்முறைகளைத் தயாரிப் பதில் ஈடுபட்டுள்ளன. எனினும், இலங்கையில் படுகடன் பிணைகளுக்கான இரண்டாந்தரச் சந்தையானது இன்னும் சரியாக அறிமுகப்படுத் தப்படவில்லை.

இலங்கையில் மதிப்பிடும் முகவர் நிலையமொன்றை நிறுவுவதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மதிப்பிடும் முகவர் நிலையமானது சுதந்திரமான அமைப் பொன்றாகக் காணப்படுவதுடன் பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தரங் களுக்கமைய பங்குகள் மற்றும் பிணைகள் போன்ற பல்வேறு நிதியியல் கருவிகளின் மதிப்பீட்டை மேற்கொள்ளுவதாகும். மதிப்பீடு என்பது எடுத்துரைபொன்றாக இல்லாததுடன் மதிப்பீட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையிலான இடரின் மட்டத்தை எடுத்துக்

கூறுவதாகும். இந் நிறுவனங்கள் நிறுவப்பட்டதும் படுகடன் பிணைகளை வழங்கும் கம்பனிகளை முகவர் நிலையமானது மதிப்பீடு செய்யும் இதனால் முதலீட்டாளர் சந்தையில் நம்பிகையோடு முதலீடு செய்வதற்கான வாய்ப்பேற்படும்.

## கூறு நம்பிக்கைகள்

நூற்றாண்டு வளர்ச்சி நிதியமாகிய புதிய கூறு நம்பிக்கையொன்று *1996* திசெம்பரில் மேற் கொள்ளப்பட்டதுடன் கூறு நம்பிக்கைளின் மொத்த

**அட்டவணை 10.19**
**கூறு நம்பிக்கைகள் (அ)**

| | 1994 | 1995 | 1996 (ஆ) |
|---|---|---|---|
| 1 மொத்த சொத்துக்கள் ரூ.ப.இ. | 3,982 | 2,881 | 2,652. |
| 2 தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூ.ப.இ. | 3,947 | 2,855 | 2,637 |
| 3 பங்குடமைகளில் முதலீடு ரூ.ப.இ. | 2,859 | 1,762 | 1,599 |
| 4 (1) இன் சதவீதமொன்றாக (3) | 72.4 | 61.7 | 60.6 |
| 5 கூறுகளை வைத்திருப்போரின் எண்ணிக்கை | 22,286 | 25,251 | 25,235 |

மூலம் : கூறு நம்பிக்கைகள்

(அ) பெறுமதிகள் *1996* திசெம்பர் *31* இல் உள்ளவாறு.
(ஆ) *1996* திசெம்பர் *3* ஆம் நாள் சீபேங் சென்சரி குரோத் பண்ட நிறுவபட்ட போதும் நான்கு கூறு நம்பிக்கைகளை மட்டுமே உள்ளடக்குகின்றது.

எண்ணிக்கை ஐந்தாகியது. கூறு நம்பிக்கைகளின் இணைந்த தேறிய சொத்து மதிப்பு (தே.சொ.ம.) *1995* இன் *27.7* சதவீத் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில *1996* இல் *7.6* சதவிதத்தால் வீழ்ச்சியடைந்தது. கூறு நம்பிக்கைகளின் செயலாற்றமானது அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண்ணில் *1995* இலும் *1996* இலும் முறையே *9* சதவீத , *32* சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்த கொழும்பு பங்குச் சந்தையின் செயலாற்றத்தோடு தொடர்பு டையதாகவே மதிப்பிடப்படவேண்டும்.

*1996* இன் இறுதியில் கூறு நம்பிக்கைகளின் சொத்துப் பட்டியல் அமைப்பானது *1995* இன் இறுதியிலிருந்த அமைப்புடன் ஒத்ததாயிருந்தது. பங்குகளிலான முதலீடு அவற்றின் மொத்தத் தேறிய சொத்து மதிப்பின் விகித சதமாக *1995* இன் *61.7* சதவீதத்துக்கெதிராக *1996* இல் *60.6* சதவீதமாகக் காணப்பட்டது.